மாலை 47 மணி 10 அக்டோபர் 2005 விலை ரூ10

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை வெளியீடு



## நலம் தரும் நவராத்திரி

வாதியும் வணங்கி நின்ற

## திருவருட் பிரகாசவள்ளலார்

## உறையூரில் ஆட்சி செய்யும் வெக்காளி அம்மன்

## நித்தம் தவம் செய்யும் குமரி அன்னை

# மங்கலங்கள் தரும் மாங்காடு காமாட்சி



# ஸ்ரீகாமாக்ஷி அம்மன் திருக்கோயில்,



**மாங்காடு - 602 101**

| | | |
|---|---|---|
| 1) | தரிசன நேரம் | செவ்வாய், வெள்ளி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 5.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை - இதர நாட்களில் காலை 6.00 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை., மீண்டும் 3.00 மணி முதல் இரவு 9.30 மணி வரை. |
| 2) | அபிஷேகம் | திங்கள், புதன், வியாழன், மற்றும் சனிக்கிழமைகளில் காலை 11.00 மணிக்கு அபிஷேகம் நடைபெறும். கட்டணம் ரூ.500/- மூன்று மாதத்திற்கு முன்பு முன் பதிவு செய்ய வேண்டும். |
| 3) | தங்கரதம் | பிரதி தினமும் மாலை 6.00 மணிக்கு. கட்டணம் ரூ.1500/- 1 மாதத்திற்கு முன்பு முன்பதிவு செய்ய வேண்டும். |
| 4) | அன்னதானம் | தினந்தோறும 100 நபர்களுக்கு அன்னதானம் நடைபெறும். கட்டணம் ரூ.1200/-நாள் ஒன்றுக்கு. வைப்பு நிதி ரூ.15,000/- |
| 5) | நவராத்திரிப் பெருவிழா | 03-10-2005 முதல் 12-10-2005 வரை நடைபெற உள்ளது. 12-10-2005 விஜயதசமி தினத்தன்று ஸ்ரீ அர்த்தமேரு ஸ்ரீ சக்கரத்திற்கு அஷ்டகந்தகம் சாற்றுதல், விசேஷ அபிஷேகம் நடைபெறும். |
| 6) | Web Site Address : | www.mangadukamakshi.com |
| | E.Mail Address : | mangadukamakshi@sancharnet.in |


**S. ஹரிப்ரியா,** B.L., P.G.D.L.A.,
துணை ஆணையர்/ செயல் அலுவலர்

டாக்டர் மணலி **R.சீனிவாசன்,** M.D.S.,
பரம்பரை தர்மகர்த்தா



# திருக்கோயில்


| | | |
|---|---|---|
| திருவள்ளுவர் | ஆண்டு 2036 | பார்த்திப ஐப்பசி |
| மாலை 47 | மணி 10 | அக்டோபர் 2005 |


## அன்பார்ந்த வாசகப் பெருமக்களே!

வணக்கம்.

திரும்பிய திசையெல்லாம் திருக்கோயில்களே திகழும் ஆன்மீகப் பெருஞ்சிறப்பினைப் பெற்று விளங்குவது நம் அருமைத் தமிழ்நாடு,

திருக்கோயில்கள் அனைத்திலும் திருப்பணிகளும், திருக்குட நீராட்டு விழாக்களும் சிறப்புற நடைபெறவும், திருவிழாக்களும், நாள் வழிபாடுகளும் குறைவின்றிப் பொலிவுறவும் நம் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்கள் தக்க நடவடிக்கைளை விரைந்து மேற்கொண்டு, நம் இந்து சமய அறநிலையத் துறையின் வரலாற்றில் ஒரு ஒப்பற்ற பொற்காலச் **சரித்திரத்தை** உருவாக்கி வருகிறார்கள்.

**''அகிலாண்டகோடி ஈன்ற**
**அன்னையே ! பின்னையும் கன்னி என மறை பேசும்**
**ஆனந்த ரூப மயிலே!''**

என்று பராசக்தியைப் போற்றிப் பாடுகின்றார் தாயுமான சுவாமிகள்.

அன்னை பராசக்தியைத் துர்க்கையாகவும், மகாலட்சுமியாகவும், சரசுவதியாகவும் மக்கள் போற்றிக் கொண்டாடும் ஒப்பற்ற ஒரு விழா தான் நவராத்திரி திருவிழாவாகும்.

**''பெண்மை வாழ்க வென்று கூத்திடுவோமடா! ''**

என்பது மகாகவி பாரதியாரின் அறைகூவல் ஆகும்.

**''மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல**
**மாதவம் செய்திட வேண்டுமம்மா - அவர்**
**பங்கயக் கைநலம் பார்த்தல்லவோ இந்தப்**
**பாரில் அறங்கள் வளருமம்மா''**

என்று மங்கையர்களைக் கொண்டாடிப் பாடினார் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை.

**''பெண்ணிற் பெருந்தக்கதில்''** என்ற வள்ளுவர்தம் குறள் கருத்திற்கு இணங்கப் பெண்களின் ஏற்றத்தை நமக்கு இனிதினில் எடுத்தியம்பும் ஒப்பற்ற விழாதான் நவராத்திரி திருவிழாவாகும்.

**''நலம் தரும் நவராத்திரி திருவிழா''**
**''மங்கலங்கள் தரும் மாங்காட்டுக் காமாட்சி''**
**''உறையூரில் ஆட்சி செய்யும் வெக்காளி அம்மன்''**
**''நித்தம் தவம் செய்யும் குமரி அன்னை''** என நவராத்திரியின் சிறப்பைக் காட்டும் வகையில் அருமையான கட்டுரைகள் பல இவ்விதழை அலங்கரிக்கின்றன.

ஆண்களும் பெண்களும் சரிநிகர் சமானமே என்பதை எடுத்துக் காட்டும் வகையில் தான் சிவபெருமானே அர்த்தநாரீசுவராகத் தொன்மைக் கோலம் கொண்டு விளங்குகின்றார் என்பதை இனிதே விளக்குகின்றது **''அர்த்தநாரீசுவரர் அற்புதம்''** எனும் கட்டுரை.

இறைவழிபாட்டிற்காகத் திருத்தல யாத்திரை புறப்பட எது சிறந்த காலம் என்பதைத் தமக்கே உரிய கதைப் பாணியில் கவினுற விளக்குகின்றார் **''எழுத்துச் சித்தர்''** பாலகுமாரன் அவர்கள் **''காலம் உணர்ந்த கடமை''** எனும் கட்டுரையில்.

**''ஐப்பசியில் அன்னாபிஷேகம் ஏன்?''** என்ற தலைப்பில் நல்லதொரு கட்டுரையை வழங்கியுள்ளார் பேராசிரியர் முனைவர் டி.செல்வராசு அவர்கள்.

**''திங்கள் முடியார் இனிதமரும் திருவோத்தூர்''** எனவும் **''கணினி, கணிதப் படிப்பை மேலோங்கச் செய்யும் மேலப் பரங்கிரி''** எனவும் இடம் பெற்றுள்ள திருத்தல வரலாறுகள் வாசகர்களுக்குப் பயனுள்ள தகவல்களைத் தருகின்றன.

**''வாதியும் வணங்கி நின்ற திருவருட் பிரகாசவள்ளலார்'' ''இவ்வளவு தூரம் வந்த பிறகு''** எனும் தலைப்புகளில் வெளியாகும் தகவல்களும் உங்கள் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளும் என்பதில் ஐயமில்லை.

இதழைப் படித்து உங்கள் உணர்வை எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்குப் பணி செய்வதே எங்களுக்குப் பெருமையும், மகிழ்ச்சியும் ஆகும்.

அன்புள்ள

(த. பிச்சாண்டி, இ.ஆ.ப.)
ஆணையாளர்


இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, உத்தமர் காந்தி சாலை,
சென்னை - 600 034.



# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருக்கோயில் அன்னதானத்திட்டத்துக்கு

## 3 லட்சத்து 7 ஆயிரத்து 601 ரூபாய் நன்கொடை


**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்கள் கடந்த 2002-ம் ஆண்டு மார்ச் மாதம் முதல், தமது சம்பளத்தைத் தமிழ்நாட்டில் உள்ள தேர்ந்தெடுக்கப் பட்ட திருக்கோவில்களில் செயல்படுத்தப்படும் அன்னதானத் திட்டத்திற்காக, ஒவ்வொரு மாதமும் ஒரு திருக்கோயிலுக்கு என நன்கொடையாக வழங்கி வருகிறார்கள்.

அதன்படி **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்கள் தமக்குக் கிடைக்கப் பெற்ற சம்பள உயர்வு நிலுவைத் தொகையான 2 இலட்சத்து 54 ஆயிரத்து 741 ரூபாயுடன். 2005-ஆம் ஆண்டு மார்ச், ஏப்ரல், மே மற்றும் ஜூன் ஆகிய 4 மாதங்களுக்குரிய சம்பளத் தொகையையும் சேர்த்து மொத்தம் 3 லட்சத்து 7 ஆயிரத்து 601 ரூபாயை 29 திருக்கோயில்களுக்குத் தலா 10ஆயிரம் ரூபாய் வீதமும், தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர், சூரியனார்கோவில், சூரிய நாராயணப் பெருமாள் திருக்கோவிலுக்கு 17,601 ரூபாயையும் வழங்கினார்கள்.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்** நன்கொடை வழங்கிய 30 திருக்கோயில்களின் விவரப் பட்டியல் சென்ற இதழில் வெளியிடப்பட்டு உள்ளது.


## இதழின் உள்ளே ....


1. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ''திருக்கோயில் அன்னதானத் திட்டத்திற்கு 3லட்சத்து 7 ஆயிரத்து 601 ரூபாய் நன்கொடை 2
2. உறையூரில் ஆட்சி செய்யும் ஸ்ரீ வெக்காளி அம்மன் - நா.சுப்பிரமணியன். 4
3. காலச்சுவடுகள் - வாதியும் வணங்கி நின்ற திருவருட்பிரகாசவள்ளலார் 6
4. மகிசாசுரமர்த்தினி - அ.நிறைமதி பி.எல்., 8
5. நலம் தரும் நவராத்திரி - டாக்டர் பருத்தியூர் கே. சந்தானராமன் 10
6. தெரிந்தகோயில், தெரியாதசெய்தி:நித்தம்தவம்செய்யும்குமரிஅன்னை - கலைமாமணிமா.லட்சுமணன் 12
7. காலம் உணர்ந்த கடமை - ''எழுத்துச்சித்தர்'' பாலகுமாரன் 14
8. அர்த்தநாரீஸ்வரர் அற்புதம் - ஏ. கிருஷ்ணன் 17
9. கேள்வி - பதில் 19
10. திருவிளையாடல் புராணம் - இரா. அரங்கசாமி 20
11. மகாபாரதம் - முனைவர் த.அமிர்தலிங்கம் 22
12. அடியார்தரிசனம்தரும்பலன்(நீதிக்கதை) - அருள்செல்வி 25
13. திங்கள்முடியார் இனிதமரும் திருவோத்தூர் - கி. ஸ்ரீதரன், எம்.ஏ. 26
14. ஐப்பசியில் ஏன் அன்னாபிஷேகம்? - பேராசிரியர் முனைவர் டி. செல்வராஜ் 29
15. கணினி, கணிதப் படிப்பை மேலோங்கச்செய்யும் மேலப்பரங்கிரி மல்லிகார்ச்சுனர் ஆலயம் 31
16. திருமந்திர உபதேசம் - திருமந்திரச்செல்வர் டி.வி. வெங்கட்ராமன், இ.ஆ.ப. (ஓய்வு) 33
17. தமிழ்நாட்டுச்சித்தர் பரம்பரை : அகப்பேய்ச்சித்தர் - முனைவர் இரா. செல்வக்கணபதி 35
18. இவ்வளவு தூரம் வந்த பிறகு - அழ. முத்துப்பழநியப்பன் 37
19. மங்கலங்கள் தரும் ஸ்ரீ மாங்காடு காமாட்சி 38









## உறையூரில் ஆட்சி செய்யும்

# ஸ்ரீ வெக்காளி அம்மன்

ந. சுப்பிரமணியன், பி.ஏ.பி.எல்.




''ஊர் எனப்படுவது உறையூர்'' என, உறையூரின் சிறப்பு பற்றி இலக்கண நூலான தொல்காப்பியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வுறையூர் முற்காலச் சோழர்களின் தலைநகரமாக விளங்கியது: சங்க இலக்கியங்களிலும் பிற்கால இலக்கியங்களிலும் பீடுறப் பேசப்படுகிறது.

முற்காலத்தில் சிராப்பள்ளியைத் தன் ஒரு பகுதியாகக் கொண்ட உறையூர் இன்று திருச்சிராப்பள்ளியின் ஒரு பகுதியாக விளங்குகிறது.

சிலப்பதிகாரக் காவியத்தின் உரைபெறு கட்டுரையில் **''அது கேட்டு, சோழன் பெருங்கிள்ளி கோழி அகத்து எத்திறத்தாலும் வரம் தரும் இவள் ஓர் பத்தினிக் கடவுள் ஆகும் என நங்கைக்குப் பத்தினிக் கோட்டம் அமைத்து நித்தல் விழா அணி நிகழ்வித்தோனே''**

என்ற குறிப்பின் மூலம் கொற்கையில் பாண்டிய மன்னன் வெற்றிவேற் செழியன், கொங்கு நாட்டரசன் கொங்கு இளங்கோவன், இலங்கை மன்னன் கயவாகு ஆகியோர்கள் பத்தினி தெய்வமாம் கண்ணகிக்குப் பத்தினிக் கோட்டம்




மேலும் ஊர்களை அமைக்கும் பொழுது ஊர்க்காவல் தெய்வங்களை ஊர்களின் எல்லையில் எழுந்தருளச் செய்வது மரபு. அம்மரபுப்படி அமைந்தவள்தான், வெக்காளி அம்மன்.

வீரமும் வெற்றியும் அளிக்கும் தெய்வங்களை வடக்கு நோக்கி அமைப்பது தமிழர்களின் பண்பாட்டு மரபாகும். அதன்படியே இத்திருக்கோயிலும் வடக்கு நோக்கி அமைந்துள்ளது. எல்லைத் தெய்வங்கள் வெட்ட வெளியில் கூரையின்றி இருக்கலாம் என்று நூல்கள் கூறுகின்றன. வெக்காளி அம்மனுக்கும் அது பொருந்தும். மேலும் இவ்வுறையூர் பகுதியானது முற்காலத்தில் ஏற்பட்ட மண்மாரியில் அழிவிற்குட்பட்டது.

அத்தகைய சூழலில் மக்கள் தங்களது உடமைகளையும், வீடுகளையும் இழந்து தவித்தது கண்ட காவல் தெய்வமாம் அன்னை வெக்காளி **''எம்மக்களுக்கு குடியிருப்புக் கூரை கிடைக்கும் வரை தானும் கூரையில்லாத இவ்வெட்டவெளியில் அமர்ந்து, அருள்புரிவேன்''** என சபதமேற்றாள் என்பது வரலாற்றுடனான உண்மையாகும்.

உறையூரில் சாரமாமுனிவர் என்பவர் நாக லோகத்திலிருந்து செவ்வந்தி மலர்களைக் கொண்டு வந்து நந்தவனம் அமைத்துப்



அமைத்து வழிப்பட்டதைத் தொடர்ந்து சோழன் நெடுங்கிள்ளியின் மகன் பெருங்கிள்ளி, உறையூரில் நங்கைக்குப் பத்தினிக் கோட்டம் அமைத்து நாள்தோறும் விழாவெடுத்து, அலங்காரம் நிகழ்த்தி வந்தான் என்ற வரலாற்று செய்தி தெரிய வருகிறது.

இப்பத்தினிக் கோட்டத்தில் எழுந்தருளச் செய்த கண்ணகி வழிபாடுதான் நாளடைவில் கொற்றவை வழிபாடாகப் பின்னர் வெக்காளியாக பெயர் மருவி வந்துள்ளதாகத் தெரிகிறது.



## சரசுவதிதேவி வழங்கிய சிங்கவாகனம்

குமரகுருபரர் வடக்கில் காசியில் தமிழ்பயிலும் மடம் ஒன்றைத் தோற்றுவிக்க விருப்பம் கொண்டார்.

மடம் அமைப்பதற்கு நிலம் வேண்டுமே!

முகம்மதிய மன்னனிடம் சென்று நிலம் கேட்க முடிவு செய்தார்.

முகம்மதிய மன்னனுக்கு இந்திமொழி தெரியுமே அன்றித் தமிழ் தெரியாது. **''சகலகலாவல்லிமாலை''** எனும் 10 பாடல்கள் பாடிச் சரசுவதி தேவியை வேண்டிக் கொண்டார். சரசுவதி தோன்றிக் குமரகுருபரருக்குக் காட்சி கொடுத்து, இந்தி மொழி பேசும் ஆற்றலையும் உண்டாக்கினார். ஒரு சிங்கத்தையும் உண்டாக்கித் தந்தார். சிம்மவாகனத்தில் சென்ற குமரகுருபரரைக் கண்டு முகம்மதிய மன்னன் வியந்தான். மடம் அமைக்க இடம் கொடுத்தான். குமரகுருபரர் அமைத்த செந்தமிழ் மடம் காசியில் இன்றும் உள்ளது.

பயிரிட்டு நாள்தோறும் தாயுமானசுவாமிக்கு அளித்து வந்தார்.

பிராந்தகன் என்னும் பூவணிகன் வன்பராந்தக சோழமன்னன் ஆதரவு பெற எண்ணி நந்தவனத்து மலர்களைப் பறித்து அரசர்க்கு அளிக்கத் தொடங்கினான். அரசரும் உயர்வான மலர்களைக் கண்டு, இறைவனுக்குரிய மலர்கள் என அறிந்தும் கூட, தவறான ஆசையால் வணிகனிடம் நாளும் மலர்களைப் பறித்துவர ஆணையிட்டான்.

நந்தவனத்தில் நாளும் மலர்கள் குறைவதைக் கண்ட முனிவரும் மறைந்திருந்து, ஒருநாள் பூவணிகன் மலர்திருடும் போது பிடித்துவிட்டார். தாயுமானவருக்குரிய மலர்கள் அரசனுக்குச் செல்வதைக் கண்டு சினந்து மன்னரிடம் முறையிட்டார். மன்னரோ முனிவரை அலட்சியம் செய்து மலர் வணிகனது செயலை ஊக்குவிக்கவே, மனம் நொந்து முனிவர் தாயுமானவரிடமே முறையிட்டார்.

தனக்குச் செய்யும் குறைகளைக் கூடத் தாங்கிக் கொள்ளும் இறைவன், அடியார்க்குச் செய்கின்ற குறைகளைப் பொறுத்துக் கொள்வதில்லை. எனவே மிக்க சினம் கொண்டு மேற்கு முகமாகத் திரும்பி உறையூரை நோக்கினான். மண்மாரி பொழியத் தொடங்கியது. உயிருள்ளன ஓடிப் பிழைக்க முற்பட்டன. மண் முடியது. மக்கள் தங்களைக் காக்க எல்லை தெய்வமாம் அன்னை வெக்காளியை வேண்டிச் சரணடைந்தனர்.

அன்னை வெக்காளி தாயுமானவரிடம் பரிந்துரைக்க மண்மாரி நின்றது. ஆனாலும் உயிர் பிழைத்த மக்கள் வீடுகளையும், உடமைகளையும் இழந்தனர். வெட்ட வெளியே தங்குமிடமானது. மக்கள் துயர் கண்டு, அன்னை வெக்காளி, **''உங்கள் அனைவருக்கும் கூரை வீடாவது கிடைக்கும் வரை நானும் உங்களைப் போல் வெட்ட வெளியில் இருக்கிறேன்''** என அருளியதாகப் புராணச்செய்தி கூறுகிறது. இன்று வரை மக்கள் பலர் வீடில்லாமல் இருப்பதால் அன்னை வெக்காளியும் வெட்ட வெளியில் வீற்றிருந்து அருள் வழங்கி வருகிறாள்.

உறையூரில் மண்மாரி ஏற்பட்டதைப் புராணங்களும், இலக்கியங்களும் விளக்கி யுள்ளன. தொல்பொருள் ஆய்வுத்துறையும் இப்பகுதியில் அகழ்வாராய்ச்சி நடத்தி, உறுதிப் படுத்தியுள்ளது.

சிலப்பதிகாரத்தில் குறிப்பிட்டுள்ள சோழன் நெடுங்கிள்ளியின் மகனான பெருநற்கிள்ளி என்பவனால் உறையூரில் கட்டப்பட்ட பத்தினிக் கோட்டமே இத்திருக்கோயில் என்பதில் ஐயமில்லை.

மற்ற தேவிமார்கள் போன்று இல்லாமல் அன்னை வெக்காளி வலது காலை மடித்து இடதுகால் பாதத்தை அசுர சக்தியின் உடலில் பதிய வைத்திருக்கிறாள். அதாவது சுகாசன நிலையில் வீற்றிருக்கிறாள். இதனால் அன்னை வெக்காளியை நாடிவரும் அன்பர்கள் மங்கலப் பலன்களைப் பெறுகிறார்கள் என்பது அனுபவ உண்மையாம்.

**''வேண்டும் வரம் தருவாள், வெக்காளி துணைவருவாள்''** என்பது முக்காலும் உண்மை.

இத்திருக்கோயிலுக்கு வரும் பக்தர்கள் திருக்கோயிலில் விற்பனை செய்யப்படும் ரூபாய் ஐந்துக்குரிய பிரார்த்தனைச் சீட்டை வாங்கித் தங்கள் வேண்டுகோளை எழுதி அம்பாள் திருவடிகளில் வைத்து அம்பாளுக்கு எதிரே உள்ள சூலங்களில் கட்டுகின்றனர்.

தன் எதிரே கட்டப்படும் வேண்டுகோள்களில் பக்தர்களின் கோரிக்கைகளை அன்னை வெக்காளி உடனுக்குடன் நிறைவேற்றித் தருவதால் நாள்தோறும் நூற்றுக்கணக்கான பக்தர்கள் தங்கள் வேண்டுதல்களைப் பிரார்த்தனைச் சீட்டில் எழுதி, அம்மன் பாதத்தில் வைத்து வழிபட்டு, எதிரேயுள்ள அம்மனின் சூலாயுதத்தில் கட்டி வருகின்றனர். பிரார்த்தனை நிறைவேறுகின்றன.

திருக்கோயில் நாள்தோறும் காலை 5.15 மணிக்குத் திறக்கப்பட்டு இரவு 9.00 மணி வரை தொடர்ச்சியாக வழிபாட்டிற்காகத் திறந்திருக்கும். காலை 5.30 மணிக்கும் பிற்பகல் 12.00 மணிக்கும் கட்டண அபிசேஷம் வழிபாடு நடைபெறுகிறது. (கட்டணம் ரூ.153/-)

சேவார்த்திகள் கட்டணம் செலுத்தும் நாட்களில் மாலை 6.00 மணியளவில் சந்தனக்காப்புடன் கூடிய அலங்கார வழிபாடு நடத்தப்படுகிறது (கட்டணம் ரூ.600/-)

கட்டணம் செலுத்தினால் செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் காலை 10.15 மணி முதல் 11.30 மணி வரை தங்கக்கவசஅலங்கார வழிபாடு நடைபெறும். (கட்டணம் ரூ.650/-) மேலும் திங்கள் (மாதம்) தோறும் முழுநிலவு நாட்களில் ஆகம நூல்களில் கூறியவாறு சிறப்பு அபிசேக வழிபாடு நடைபெறுகின்றன.

காலச்சுவடுகள்

# வாதியும் வணங்கி நின்ற திருவருட்பிரகாசவள்ளலார்

ஆண்டு 1849. அப்பொழுது சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றியவர் தொழுவூர் வேலாயுத முதலியார்.

தேன்மழை எனப் பாமழை பொழியும் வள்ளலாரின் கவித்திறம் பற்றி அவர் கேள்விப்பட்டார்.

''முறையான கல்வி கற்காமல், இலக்கணம் அறியாமல் எப்படி ஒருவர் பாக்கள் புனைய இயலும்?'' என்ற ஐயப்பாடு அவருக்கு உண்டானது.

இராமலிங்கரைச் சோதித்தறிய வேண்டும் என்று முற்பட்ட அவர், தாமே நூறு பாடல்களை எழுதி எடுத்துப் போய் இராமலிங்கரிடம் காண்பித்தார்.



''ஐயா! இந்தச் சுவடிகள் எம் மூதாதையர் விட்டுச் சென்றவை. சங்ககாலப் பாடல்கள் இவை; தாங்கள் இவற்றைப் பார்வையிட்டுக் கருத்தறிவிக்க வேண்டும்'' என்றார்.

அவ்வேடுகளைப் பார்வையிட்ட வள்ளலார், ''பிழைகள் மலிந்த இப்பாடல்கள் சங்கப் பாடல்கள் அல்ல ''என்று மறுத்தார்.

வேலாயுதனார் வள்ளலாரின் காலடியில் விழுந்து ''ஐயனே! உம்மைச் சோதிக்க எண்ணி அடியவன் செய்த மடத்தனம் இதை மன்னித்து அருளுங்கள்'' என வேண்டினார்.

காலடியில் விழுந்து கிடந்த தமிழறிஞரை எழுப்பினார் வள்ளலார். ''அப்பா! நீவேற்றாள் அல்ல, சேரும் இடம் அறிந்தே வந்து சேர்ந்திருக்கிறாய்'' என்று அவரை அரவணைத்துக் கொண்டார் வள்ளலார்.

அது முதல் வள்ளலாரின் தலைமைச் சீடராய் திகழ்ந்த தொழுவூர் வேலாயுதனார், வள்ளலார் பாடிய அருட்பாடல்கள் அனைத்தையும் தொகுத்து 1867 இல் அவற்றைத் திருவருட்பா என்று பெயரிட்டு முதல், இரண்டு, மூன்று, நான்கு திருமுறைகள் எனத் தொகுத்து வெளியிட்டார்.

இராமலிங்கரைத் 'திருவருட் பிரகாசவள்ளலார்' என்று பெயர் குறிப்பிட்டதும் அவர் அருட்பாக்களுக்குத் 'திருவருட்பா' என்று பெயரிட்டதும், 'திருமுறை' எனத் தொகுத்திருந்ததும் அந்நாளில் தமிழகத்தில் புகழ்பெற்றிருந்த சைவத் தமிழ்ப் பெரியார் யாழ்ப்பாணம் ஆறுமுகநாவலர் அவர்களுக்குப் பிடிக்கவில்லை.

இது அருட்பா அல்ல; மருட்பா என்று நிறுவ முயற்சி மேற்கொண்டு ''அருட்பா மறுப்பு'' என்ற நூலையும் எழுதி வெளியிட்ட அவர் 1869 ஆம் ஆண்டில் கடலூர் மஞ்சக்குப்பம் நீதிமன்றத்தில் வள்ளலாருக்கு எதிராக வழக்கும் தொடுத்தார்.

வழக்கில் அவர் கூறியிருந்த குற்றச்சாட்டு பின்வருமாறு:

''இராமலிங்கம் என்பவர் கடவுள் இல்லை என்கிறார். ஆலயங்களை அவமதிக்கிறார். இவருடைய செயல்கள் மத உணர்வு கொண்டவர்களின் மனதைப் புண்படுத்துவதாக இருக்கிறது. 'திருவருட்பா' என்ற தலைப்பு இவர் நூலுக்கு வழங்கியிருப்பது தண்டிக்கத்தக்கது''.

வழக்கு விசாரணைக்கு வந்தது.

அடிகளாரின் அன்பர்கள் பலரும், மஞ்சக்குப்பம் நீதிமன்ற வாசலில் திரளாகக் கூடி இருந்தனர்.

நீதிமன்ற அலுவலர்கள், வழக்கறிஞர்கள் கூடியிருந்தனர்.

அடுத்து வழக்கினைத் தொடுத்த வாதி யாழ்ப்பாண ஆறுமுகநாவலரும் வந்திருந்தார்.

நீதிமன்ற ஊழியர் 'இராமலிங்கம்' என்று அழைத்ததும், வள்ளலார் நீதி மன்ற வாயிலில் காலடி பதித்தார்.

அவர் உள்ளே நுழையும் போது ஒரு தெய்வமே மனித வடிவில் வந்தது போல் இருந்தது. நீதிமன்றமே எழுந்து நின்று மரியாதை செய்தது.

ஆறுமுக நாவலரும் தம்மையறியாமலே எழுந்து நின்றார். வள்ளலாரை நோக்கிச் சிரம் தாழ்த்தி இருகரம் கூப்பி வணங்கி நின்றார்.


நீதிபதியும், மன்றத்தில் கூடியிருந்த ஏனையோரும் இக்காட்சியைக் கவனிக்கத் தவறவில்லை.

''வழக்கு தொடுத்த ஆறுமுகம் அவர்களே! நீங்களோ வாதி, பிரதிவாதியைக் கண்டதும் ஏன் எழுந்து நின்றீர்?'' என நீதிபதி கேட்டார். ''அது

என்னையறியாமல் நடந்து விட்டது'' என்றார் நாவலர்.

''வணங்கியதும் அப்படித் தானோ?'' - நீதிபதி கேட்டார். நாவலர் மவுனமாகத் தலை குனிந்தார்.


நீதிபதி இவ்வாறு தீர்ப்பினைக் கூறினார்:



''இராமலிங்கர் கடவுள் விரோதப் போக்கு கொண்டவர் என்பது வழக்கு. ஆனால் அவரிடம் கடவுட்தன்மை இருக்கக் கொண்டு தானே வாதியும் எழுந்து வணங்கி அவருக்கு மரியாதை செய்தது. வாதியினுடைய இந்தச் செயலே அவர் தொடுத்த வழக்கை நான் தள்ளுபடி செய்யப் போதுமான காரணமாக அமைந்துள்ளது''.

இவ்வாறு நீதிபதி கூறி ஆறுமுகநாவலர் திருவருட்பிரகாச வள்ளலார் மேல் தொடுத்த வழக்கினைத் தள்ளுபடி செய்தும், வழக்கிற்கான செலவுத் தொகையை வள்ளலாருக்கு வழங்கி மன்னிப்புக் கோருமாறும் தீர்ப்பினை அளித்தார்.





## மரணமிலாப் பெருவாழ்வு

பெற்ற பிறவியைச் சாகாநிலைப் பேற்றுக்கு பயன்படுத்துவதே அறிவுடைமை.

சாகாநிலை என்பது என்ன? மீண்டு பிறவாமை. நல்லஎண்ணங்கள் தாங்கியவ மீண்டும் பருவுடல் தாங்குவதில்லை.

பருவுடலுடன் வாழ்கின்ற நா செய்யவேண்டுவது யாது?

நல்லெண்ணங்களைப் பயன்படுத்தி மீண்டு பிறவாமை என்னும் சாகாநிலை அடைய உழைத்த வேண்டும்.

**''மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாம கண்டீர்''**

- அருட்பிரகாசவள்ளலா


திருக்கோயில்
திங்கள் இதழ்



| | | |
|---|---|---|
| தனி இதழின் விலை | ரூ | 10/ |
| ஓராண்டுச் சந்தா | ரூ | 120/ |
| பத்து ஆண்டுச் சந்தா | ரூ | 1000/ |
| ஆயுட்காலச் சந்தா | ரூ | 1500/ |


(ஆயுட்காலம் என்பது அதிகபட்சமாக 15 ஆண்டுகள் மட்டும்)


**''திருக்கோயில்'' இதழில் விளம்பரம் செய்து பயனடைவீர்!**

**திருத்திய விளம்பரக் கட்டண விவரம் :**

| | |
|---|---|
| 1. பின் பக்க அட்டை வெளிப்புறம் (வண்ணத்தில்) | ரூ 15,000/ |
| 2. முன் பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்) | ரூ 10.000/ |
| 3. பின் பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்) | ரூ 7,500/ |
| 4. உள்புறம் முழுப்பக்கம் | ரூ 5,000/ |
| 5. உள்புறம் அரைப்பக்கம் | ரூ 3,000/ |

இதற்கான பணவிடை / வங்கி வரைவோலையை ஆணையர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, 119, உத்தமர் காந்தி சாலை சென்னை 600 034 என்ற முகவரிக்கு அனுப்பவும்.


கதை வடிவம்
நிறைமதி
ஆ.. அண்ணா!
இவர்கள் தவத்தைக்கண்டு அஞ்சிய இந்திரன் முதலையாக வந்து கரம்பனை விழுங்கிவிட்டான்.
ம்பி! உனைக் கொன்ற இந்திரனை நான் பழிவாங்குவே
ன்று சூளுரைத்த இரம்பன், நெருப்பில் நின்று மீண்டும் [ன்"]
க்கிரமாகத் தவம் புரிந்து, தன் தலையை அறுத்துக்
காள்ள, அக்கினி தோன்றினான்.
என்ன வரம் வேண்டும்? கேள்!
இந்திரனை வெல்லும் மகன் வேண்டும்
அப்படியே பெறுவாய்
ஊர் திரும்பும் வழியில் ரம்பன், எருமை வடிவம் கொண்டு ஓர் எருமையை மணந்தான். ரம்பன் மணந்த பெண் எருமையின் வயிற்றில் எருமை வடிவத்தில் பிறந்தவன்தான் மகிஷன்.
டேய் இந்திரா! நீயாக அமராபுரியைவிட்டு ஓடுகிறாயா?
ல்லை, உன்னை ஓடவைக்கட்டுமா?
தேவேந்திரனை வெற்றி கொண்ட மகிஷன் பிரம்மனை நோக்கி கடுந்தவம் புரிந்தான்.
னக்கு மரணமே கூடாது
ப்படி வரம் தர இயலாது
பெண்ணால் அன்றி
வறு யாராலும் எனக்கு
ரணம் வேண்டாம்
மும்மூர்த்திகளே! மகிஷன் அமராபதி ஆள நாங்கள் மலைக் குகைகளில் ஒளிந்து கிடக்கிறோம். குறை தீர்த்தருள வேண்டும்!




பராசக்தி தோன்றினார். அஷ்ட தசா புஜங்களுடன் தோன்றிய அன்னை சிம்மவாகனத்தில் ஆரோகணித் மகிஷனை வதைக்க எழுந்தருளினார்.

அன்னை விட்ட பெருமூச்சிலிருந்து தோன்றிய தேவிகணங்கள் மகிஷனின் படைகளைச் சம்ஹரிக்க ஆதிபராசக்தி மகிஷனின் பிடரியில் தன் பாதத்தை வைத்துத் திரிசூலத்தால் அழுத்தினார்.




மகிஷனின் ஆணவம் அப்பொழுதும் அடங்காமல் போகவே ஒரே வீச்சில் ஆதிபராசக்தி தன் வாளால் மகிஷனை வதைத்துவிட்டார்.



மாளய அமாவசைக்கு முந்தினம் தோன்றிய ஆதி பராசக்தி அஷ்டமி-நவமி கூடும் வேளையில், மகிஷ வதம் செய்து முடித்தார். அன்னையின் வெற்றியை மூவரும், தேவரும், யாவரும் கொண்டாடி மகிழ்வதே விஜயதசமித்திருநாள் ஆகும்.



# நலம் தரும் நவராத்திரி



பருத்தியூர் டாக்டர் கே. சந்தானராமன், M.A., D.Litt., Ph.D.,

மாரியம்மன், பிடாரியம்மன், காத்தாயி அம்மன், பேச்சாயி அம்மன் போன்ற பல பெயர்களில் ஒவ்வொரு கிராமத்திலும் காவல் தெய்வமாக அம்பிகை விளங்குகிறாள்.

தெற்கே முக்கடல் ஓரத்தில் குமரியன்னை ! மேற்கே அரபிக் கடலோரத்தில் மும்பாதேவி ! கிழக்கே வங்கக் கடலோரத்தில் காளி தேவி ! வடக்கே இமயத்தில் வைஷ்ணவி தேவி! இப்படி இந்தியாவின் நான்கு திசைகளிலும் நின்று, அம்பிகை அருள் புரிகிறாள்.

பண்டிதர்களும், பாமரர்களும் அம்பிகையை அணுகி, அச்சமில்லாமல் வழிபடுகிறார்கள். யாகம், யோகம், மந்திரம், தந்திரம், யந்திரம் ஆகிய வழிகளில் அவளை எல்லோராலும் வழிபட இயலாது. காலம், பொருள், உடல்நிலை போன்றவை கிடைத்தவர்கள் மட்டுமே அம்பிகையை வழிபட இயலும்.

எவரும் அன்றாட வாழ்க்கைக்கு இடையில் பக்தியுடன், எளிய முறையில் அம்பிகையை வழிபடலாம். அந்த நோக்கத்தில் பண்டிகைகளும், திருவிழாக்களும் தோன்றியுள்ளன. அவற்றில் கோயில்களில் மட்டுமின்றி, வீடுகளிலும் பத்து நாட்கள் தொடர்ச்சியாகக் கொண்டாடப்படும் ஒரே பண்டிகையாக நவராத்திரி விளங்குகிறது.

சுகமாகவும், சுலபமாகவும் வழிபடத்தக்கவள் அம்பிகை. ஆதலால் லலிதா சகஸ்ரநாமம் அவளை, **'சுகாராத்யா'** என்று போற்றுகிறது.

பருவ மாற்றங்கள் நிகழும்போது நோய்கள் ஏற்படுகின்றன. அந்த வகையில் வசந்தருது, சரத்ருது ஆகிய பருவக்காலங்களில் முறையே வெப்பத்தினாலும், தட்பத்தினாலும் தோன்றும் நோய்களிலிருந்து மக்களை அம்பிகை காப்பாற்றுகிறாள். ஏனெனில், அவள் **'சர்வ வியாதி ப்ரசமனி '**. அதாவது, அனைத்து நோய்களையும் அடக்கும் மருந்தாக விளங்குகிறாள். அவளைப் 'பிணிக்கு மருந்து' என்று அபிராமி பட்டர் குறிப்பிடுகிறார்.

சித்திரை மாத வளர்பிறைப் பிரதமை முதல் ஒன்பது நாட்கள் கொண்டாடப்படுவது வசந்த நவராத்திரி. புரட்டாசி மாதத்தில் வளர்பிறைப் பிரதமை முதல் ஒன்பது நாட்கள் கொண்டாடப் படுவது சாரதா நவராத்திரி.

வசந்த காலமும், சரத் காலமும் காலதேவனின் இரண்டு கோரைப் பற்கள் என்று தேவி பாகவதம் வருணிக்கிறது. எனவே, இந்த இரண்டு காலங்களிலும் தேவியை வழிபடுவது துன்பங்களிலிருந்து நம்மைப் பாதுகாக்கும். காலனைக் காலால் உதைத்தது ஈசனின் இடப்பாதம். அது தேவிக்குரியது. அந்தத் திருவடியைப் போற்றி வழிபட்டால் நமக்கு ஏது துன்பம்?

பெண்களும், குழந்தைகளும் நவராத்திரிக் கொண்டாட்டத்தில் பெரும் ஆர்வம் காட்டு கின்றனர். வீடுகளில், காலையிலும், மாலையிலும் லலிதா சகஸ்ரநாமம், திரிசதி, தேவி பாகவதம், அபிராமி அந்தாதி போன்ற தேவி பரமான நூல்களை அன்பர்கள் பாராயணம் செய்கின்றனர். மாலையில் பெண்களையும், குழந்தைகளையும் அழைத்து உபசரித்து மஞ்சள் - குங்குமம் கொடுத்து மகிழ்கின்றனர்.

பலர் முன்னிலையில் பாடும் வாய்ப்பையும், பயிற்சியையும் பெண்கள் பெறுகிறார்கள். நவராத்திரி குழந்தைகளின் கலையார்வத்தை வளர்த்து, அவர்களின் உள்ளத்திலும், தெய்வபக்தியை விதைக்கும் விழாவாகும். பலவிதமான பொம்மைகளைப் படிகளில் கொலுவாக வைத்து மகிழ்கிறார்கள்.

கணபதி, சக்தி, சிவன், திருமால், முருகன், கண்ணன், இராமர், மகான்கள், தேசியத் தலைவர்கள் என்று கொலுவில் பலவித பொம்மைகள் இடம் பெறுகின்றன. மேலும், விலங்குகளும், பறவைகளும், தற்காலக் கண்டுபிடிப்புகளான ஏவுகணை (ராக்கெட்), கம்ப்யூட்டர் போன்ற அனைத்தும் பொம்மைக் கொலுவில் இடம் பெறுகின்றன. இது, எல்லாவற்றிலும் இறைவனைக் காணுதல் என்ற உயர்ந்த ஆன்மீகத் தத்துவத்தை உணர்த்துகிறது.

காவிரிக்கரை மாவட்டங்களில் பொம்மைக் கொலுவை 'சிவை ஜோடிப்பு' என்றே குறிப்பிடு கின்றனர். 'சிவை' என்ற பராசக்தி பலவிதங்களில் அலங்கரிக்கப்படுகிறாள் என்பதே அதன் பொருளாகும்.

நவராத்திரியில் முதல் மூன்று நாட்கள் துர்க்கைக்கும், அடுத்த மூன்று நாட்கள் லட்சுமிக்கும், கடைசி மூன்று நாட்கள் சரஸ்வதிக்கும் உரியது என்பர். பத்தாவது நாளான விஜயதசமி அனைவருக்கும் மேலான ஆதிபராசக்திக்கு உரியதாகும்.

'தசரா' என்ற பெயரில் மைசூரில் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படும் விழாவில் சாமுண்டேஸ்வரி வழிபடப்படுகிறாள். சண்ட-முண்டரை அழித்ததால் இவள் 'சாமுண்டாதேவி' என்று அழைக்கப்பட்டாள். இந்தச்சண்ட-முண்டர்கள்யாவர்?

தலையில்லாத உடலை 'முண்டம்' என்றும், உடல் இல்லாத தலையைச் 'சண்டம்' என்றும் கூறுவார்கள். அறிவு இல்லாமல், உடல் வலிமை மட்டும் பெற்று, அழிவுச் செயல்களில் ஈடுபடுபவர்களே முண்டர்கள். உடல் வலிமை இல்லாவிட்டாலும், தங்கள் அறிவை (மூளையை) அழிவுக்கே செலவிடுபவர்கள்சண்டர்கள்.

காலந்தோறும் தோன்றி உலக மக்களுக்குத் துன்பம் தரும் அத்தகைய தீயசக்திகளை அம்பிகை அடக்கி அழிக்கிறாள் என்பதே சாமுண்டேஸ்வரி பூஜை உணர்த்தும் தத்துவமாகும்.

உத்திரப்பிரதேசம், பஞ்சாப், ஹரியானா ஆகிய மாநிலங்களில் விஜயதசமி நாளில் 'ராம் லீலா' கொண்டாடப்படுகிறது. ஸ்ரீராமபிரானின் முன்னோர்கள் தேவியை வழிபட்ட வரலாறுகள் பல உள்ளன. அவர்கள் தேவியைப் பல்வேறு வடிவங்களில் பிரதிஷ்டை செய்து, அவற்றுக்கு நவராத்திரி நாட்களில் ஒன்பது புண்ணிய நதிகளின் நீரைக் கொண்டுவந்து அபிஷேகம் செய்வார்களாம்.

வங்காளத்தில் **'துர்க்கா பூஜை'** என்று பிரபலமாக உள்ள நவராத்திரி நாட்களில் மக்கள் துர்க்கை மற்றும் காளியை வழிபடுகின்றனர். குடும்பத்தினர் அனைவரும் வெவ்வேறு இடங்களில் இருந்தாலும் துர்க்காபூஜையின் போது ஒன்றுகூடி, தேவியை மகிழ்ச்சியுடன் வழிபடுகின்றனர்.

தேவி பாகவதம் விதித்தபடி பூஜை செய்பவர்கள் சிறுமிகளைத் தேவியாகப் பாவித்து வழிபடுவது வழக்கம். இந்தப் பூஜையின் போது இரண்டு வயது முதல் பத்து வயது வரை உள்ள கன்னியரை அழைத்துப் பூஜிப்பார்கள்.

மகாநவமி என்ற ஒன்பதாவது நாள் கல்வித் தெய்வம் கலைமகளுக்கு உரியது. தமிழ்நாட்டில் கலைமகள் வழிபாடு, **'சரஸ்வதி பூஜை'** என்றும், **'ஆயுத பூஜை'** என்றும் கொண்டாடப்படுகிறது.

படிப்பாளிகளும், மாணவர்களும் புத்தகங்களுக்கும், எழுது பொருள்களுக்கும் ஏற்றம் கொடுத்துப் பூஜை செய்கின்றனர். செய்யும் தொழிலே தெய்வம் என்ற உணர்வில் தொழிலாளர்கள் தங்கள் தொழிலுக்கு உரிய கருவிகளை வைத்துப் பூஜிக்கின்றனர். தொழிற் சாலைகளிலும், அலுவலங்களிலும் ஆயுத பூஜை ஆர்வத்துடன் கொண்டாடப்படுகிறது. மிதிவண்டி முதல் பேருந்து வரை அனைத்து ஊர்திகளுக்கும், ஆயுதபூஜை நாளில், சந்தனம் பூசி, மாலைகள் அணிவித்துக் கற்பூரம் காட்டிப் பூஜிக்கின்றனர்.



விஜயதசமி, துர்க்கை மகிடனை வதைத்து வெற்றி கொண்ட நாள் என்றும், ஸ்ரீராமர் இராவணனை வென்ற நாள் என்றும், பாண்டவர்கள் அஞ்ஞாதவாசம் முடிந்து, ஆயுதங்களை எடுத்துக் கொண்டு போருக்குப் புறப்பட்ட நாள் என்றும் பல்வேறு கருத்துக்கள் வழங்கிவருகின்றன.

விஜயதசமி நாளில்தான் குழந்தைகளுக்கு 'அட்சராப்யாசம்' என்னும் கல்வித் தொடக்கம் செய்கின்றனர்.

சென்னை மயிலாப்பூர் போன்ற தொண்டை நாட்டுத் திருக்கோயில்களில் அம்பிகையின் அலங்கார நாட்கள் வேறுபடுகின்றன. நவராத்திரி நான்காம்நாள் சரஸ்வதி அலங்காரமும், எட்டாம் நாள் மகிஷாசுரமர்த்தினி அலங்காரமும் செய்கின்றனர்.

சரஸ்வதி பூஜையன்று இந்தத் திருக்கோயில்களில் 'கம்பாநதி சிவபூஜைக் காட்சி' என்ற அலங்காரம் செய்கிறார்கள். இக்காட்சியைக் தொண்டை நாட்டுத் திருக்கோயில்களில் மட்டுமே காண இயலும்.

காஞ்சி காமாட்சி மாமரத்தடியில் மண்ணால் சிவலிங்கம் பிடித்து வைத்துப் பூஜை செய்கிறாள். அப்போது இறைவன் அந்தப் பகுதியில் வெள்ளப் பெருக்கை ஏற்படுத்துகிறார்.

காமாட்சி திடுக்கிட்டு, வெள்ளத்தில் சிவலிங்கம் சிதைந்துவிடக்கூடாது எனக் கருதி அதைக் கட்டித் தழுவிக் காப்பாற்றுகிறாள். அதனால் மனம் மகிழ்ந்த சிவபெருமான் தமது உண்மை உருவத்தைக் காட்டி அருளுகிறார். அத்துடன் காமாட்சியைத் திருமணமும் செய்து கொள்கிறாள்.

இந்தக் காமாட்சி கல்யாண வைபவத்தை நினைவில் கொள்ளும் வகையில், **'கம்பாநதி சிவபூஜைக் காட்சி'** அலங்காரம் செய்யப்படுகிறது.

## தெரிந்த கோயில் தெரியாத செய்தி

# நித்தம் தவம்செய்யும் குமரி அன்னை

கலைமாமணி மா. இலட்சுமணன்

சூன்யத்தில் பிறந்த ஒன்று என்ற எண், பலவாகி ஒன்பதில் முடிந்து போகிறது.

எண்களிலே 1 என்ற எண்ணுக்குப்பின் 9 வரை தான் இலக்கங்கள். மீண்டும் அதே எழுத்துக்கள் இரண்டு ஸ்தானம், மூன்றுஸ்தானம் எனப் பல ஸ்தானங்களைப் பெறுகிறது.

ஒன்பதின் பெருமைதான் நவராத்திரி - ஒவ்வொரு நாள் ராத்திரியிலும் - புதுப்புது பெயரில் கொண்டாடப் பெறுகிறாள் பராசக்தி. பாரதநாட்டில், கன்யாகுமரி முதல் - காட்மாண்டு வரை - இந்த ஒன்பது நாட்கள் வைபவம் போற்றப்பட்டுச்சிறப்பாக நடக்கிறது.

காசியிலே நவராத்திரி உற்சவம் மிகவும் சிறப்பாக நிகழ்த்தப் பெறுகிறது. அன்னைக்கு ஆயிரம் நாமங்கள் இருந்தாலும், இங்கே நவராத்திரியில் - சைலபுத்ரி - பிரம்மசாரினி- சந்திரகாந்தி - கூஷ்மண்டி - ஸ்கந்த மாதா- காத்யாயினி - காளராத்ரி - மகாகவுரி - சித்திமாதா என நவதுர்க்கை போற்றப் பெறுகிறாள்.

ஒன்பதில் அடங்கும் நவக்கிரஹங்கள், நவரத்தினங்கள் - இப்படி சொல்லிக் கொண்டே போகலாம்.

கடுமையான விரதங்களை அனுஷ்டித்து, பிரம்மனிடம் ஒரு வரம் பெற்றான் பாணாசுரன்.

யாராலும் தனக்குச் சாவு வரக்கூடாது என்பது அவனது வேண்டுகோள்.

அவன் பெற்ற வரத்தின் பலத்தால் அவனது அட்டூழியம் எல்லை மீறியது. நல்லோர் பலரும் இவனது அட்டகாசத்துக்குப் பலியானார்கள்.

கயிலையில் அம்பாளின் செவிக்கு இந்தச் செய்தியை எட்டச்செய்தார் நாரதர்.

எல்லாப் பருவத்தினரையும் குறிப்பிட்ட பாணாசுரன், ஒரு கன்னிப்பெண்ணால் தனக்கு மரணம் நேரக்கூடாது என்று கேட்கத் தவறி விட்டான். இதுவே இவனது உயிருக்கு உலை வைத்தது.

சிவபெருமானும் அறியாவண்ணம் அம்பாளின் சக்தி கன்னிப்பெண்ணாக வடிவெடுத்துக் கன்னியாகுமரியின் கடற்கரையில் சிவனை வேண்டித்தவமிருந்தாள்.

அம்பாளின் சக்தி தான் கன்னியாகுமரியாக வடிவெடுத்தது. அதே அம்பாள் சிவபெருமானுடன் கயிலையில் தானிருந்தாள்.

பூவுலகில் நடந்த அதிசயங்களை நாரதர் விளக்கிக் கூறும் போது சுசீந்திரம் என்னும் ஊரில் அனுசுயை எனும் பெண் கற்பின் வலிமையால் - முப்பெருந்தேவிகளுக்கு ஈடாக விளங்குகிறாள் என்று கூறினார்.

யார் பெரியவள் என்ற சர்ச்சைதங்களுக்குள்ளே தீராத நிலையில், இப்படி நான்காவது ஒன்று முளைக்கவே அதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. பெண்மையின் இயல்பான தன்மையில் உள்ள பலவீனத்தில் முதன்மையானது பிறரை உயர்த்திப் பேசுவதைச் சகிக்க முடியாதது. இதற்குத் தெய்வங்களும் விதிவிலக்கல்ல.

இதுபற்றி முப்பெரும் தேவியரும், தங்களது கணவன்மாரிடம் ''இப்படி ஒரு கர்வம் தலைதூக்கக்கூடாது. சோதித்து அவளைத் தலைகுனியச்செய்யுங்கள்'' என்று கூறினர்.

சிவபெருமான், திருமால், பிரம்மா ஆகிய மூவருமே பூவுலகத்துக்குச் சாதுக்கள் வடிவில் வந்தனர். முக்தி பெறுவதற்கு முடிவான நிலை நிர்வாணம்.

அனுசுயாவைச் சந்தித்து, ''பிறந்த மேனியுடன் வந்து எங்களுக்கு அமுது படைக்க வேண்டும்'' என்றனர்.

இது கேட்டு அனுசுயா அதிர்ச்சியடைவாள் என எண்ணினர். அனுசுயா செம்பிலே நீர் கொண்டு வந்து அவர்கள் மீது தெளித்தாள்.

மூவரும் பிறந்த மேனியில் குழந்தைகளாகி விட்டனர்.

அவர்களைத் தொட்டிலிலிட்டுப் பாலமுது கொடுத்துத்தாலாட்டுப் பாடினாள் அனுசுயா.

இந்தச் செய்தியை நாரதர் வந்து கூறியதும் அதிர்ச்சியடைந்தனர் முப்பெரும் தேவியர்.

பூவுலகம் வந்து அனுசுயாவைச் சந்தித்தனர். தங்கள் தவறுக்கு மன்னிப்புக் கோரினர்.

''இவர்கள் இல்லையென்றால் எல்லாமே செயலற்றுப் போகும்; கருணை காட்டுங்கள்'' என வேண்டிக் கண்ணீர் வடித்தனர். ''என்னை



சோதிக்கத்தான் இவர்கள் வந்தனர் என்பதை அறிந்துதான் இந்தச் சிறுபிள்ளைத் தனமான செயலுக்காக குழந்தைகளாக மாற்றினேன்'' என்றார் அனுசுயை.

''உலகோர் உணர்வதற்குச் இந்தச் சம்பவங்கள் துணை புரியும். அதற்கு ஒரு சான்றினை உருவாக்க வேண்டும். பூவுலகில், இவர்களுக்கு தனித்தனியே ஆலயங்கள் இருக்கின்றன. மூவரும் உள்ள ஆலயம் ஒன்றைச் சுசீந்திரத்தில் எழுப்ப வேண்டும். இதனை நிறைவேற்றித் தாருங்கள்'' எனக்கூறி மூவரையும் பழைய உருவத்திற்குக் கொண்டு வந்தாள் அனுசுயா.

சுசீந்திரத்திலே உள்ள தாணுமாலயன் கோயிலின் சிறப்பு இதுதான். சிவபெருமான் தாணுவாகவும், திருமால் மாலாகாவும், பிரம்மன் அயனாகவும் உள்ள திருக்கோயில் இது.

ஏழிசைஎழுப்பும் கற்தூண்கள் இங்கே அதிசயம்.

வானத்துக்கும் பூமிக்குமாக நிற்கும் ஆஞ்சநேயர்சிலை.

ரதிமன்மதனின் அழகிய சிற்பங்கள் கண் கொள்ளாக்காட்சி.

சுற்றுலா செல்வோர் இந்தத் தலத்தை தரிசிக்காமல் வருவதில்லை.

நாரதர் கலகம் நன்மையில் முடியும் என்பார்கள். இவரது சேட்டை சிவனிடத்திலும் சென்றது. ''எத்தனையோ அழகிகளைக் கண்டிருக்கிறேன். கன்னியாகுமரியில் தவமிருக்கும் ஒரு பெண்ணைக் கண்டேன். மயக்கமே வந்து விட்டது. தங்களோடு அந்தப் பெண்ணின் உருவத்தை இணைத்துப் பார்த்தேன். அந்த வடிவங்கள் என் நெஞ்சைவிட்டு அகலவில்லை'' என்றார். நாரதரிடம் ''நீங்களே சென்று என்னைப் பற்றி எடுத்துக்கூறி மணமுடித்து வையுங்கள்'' என்றார் சிவபெருமான்.

''சக்தியின் சீற்றத்துக்கு ஆளாக வேண்டி வருமே'' என்றார் நாரதர்.

''அதுபற்றி பிறகு யோசிப்போம். நீங்கள் போய் வெற்றிச் செய்தியுடன் வாருங்கள் '' என்றார் சிவபெருமான்.

சிவனாரின் விருப்பத்தை கன்யாகுமரியிடம் எடுத்துக் கூறினார் நாரதர். தன்னை மணமுடிக்க வேண்டுமாயின் ''கணுவில்லாத கரும்பு, காம்பில்லாத வெற்றிலை, கண்ணில்லாத தேங்காயை எடுத்துக் கொண்டு வரச் சொல்லுங்கள்'' என்றார் அம்பிகை.

''கொண்டு வந்துவிட்டால் உங்கள் விரதம் கெடுமே. பாணாசுரனை அழிப்பதல்லவா உங்களது லட்சியம்'' என்றார் நாரதர். ''நாளைய பொழுது விடிவதற்குள் வரவேண்டும் என்று கூறுகிறேன். விடியாத இரவை விடிந்தது போல் செய்து அவரது இச்சைநிறைவேறாமல் பார்த்துக் கொள்கிறேன்'' என்றும் கூறிச்சென்றார்

''தாங்கள் வைத்த தீயை தாங்கள் தான் அணைக்க வேண்டும்'' என்றார் கன்யாகுமரி.

சிவபெருமானைச் சந்தித்து கரும்பு, வெற்றிலை, தேங்காய் இவைகளைப் பற்றி கூறினார்.

## கன்னியாகுமரி பகவதி அம்மனின் கிழக்குக் கோபுரம் மூடப்பட்டுள்ளதேன்?





கன்னியாகுமரி பகவதி அம்மனின் மூக்குத்தி ஒளி மிகப் பிரகாசமானது. அதைக் கலங்கரை விளக்கின் ஒளி என்று நினைத்துக் கப்பல்கள் திசைமாறிப் பாறையில் மோதி உடைந்துள்ளதாக கூறப்படுகின்றது.

ஆகவேதான் பகவதி அம்மனின் கிழக்குக் கோபுரம் இன்றும் மூடப்பட்டுள்ளது.

இறைவனால் உண்டாக்கமுடியாத பொருள்களும் உண்டா?

கணப்பொழுதில் இவைகளை கைக்கு வரச் செய்தார் சிவபெருமான்.

காலை மலருமுன்னே கன்னியாகுமரிக்குப் புறப்பட்டார்.


சேவலாக மாறிக் கூவினார் நாரதர். விடியப் போகிறதே! கீழ்வானம் வெளுக்கிறதே! எனப் பதறிப் போய் புறப்படாமலே நின்று விட்டார் சிவபெருமான். அப்போது நாரதர் வந்து இனிமேல் அங்கே போவதால் காரியம் நடக்கப் போவதில்லை. அன்னை பராசக்தி - பாணாசுரனைக் கொல்வதற்காகவே கன்னியா குமரியாக விரதம்மேற்கொண்டிருக்கிறாள் என்ற உண்மையினையும் எடுத்துச்சொன்னார்.

பரமசிவன் மகிழ்ச்சியடைந்து விரதத்தை நிறைவேற்ற மேலும் சக்தியை அருளினார்.

பாணாசுரனை வதம் செய்து - தேவர்களைக் காப்பாற்றினாள் பராசக்தி.

நமக்கருள் செய்வதற்காகவே கன்னியா குமரியில் கோயில் கொண்டு நித்தமும் தவம் புரிந்து வருகின்றார் கன்னியாகுமரி அம்மன்.

கன்னியாகுமரியிலும், அம்பாள் குடி கொண்டிருக்கும் எல்லா ஆலயங்களிலும் நவராத்திரி விழா சீரும் சிறப்புடன் நடைபெறுகிறது.






# காலம் உணர்ந்த கடமை

''எழுத்துச்சித்தர்'' பாலகுமாரன்

அருண்பாலாஜி. வயது இருபத்தியெட்டு. ஒரு தனியார் கம்பெனியில் ரிசர்ச் அண்ட் டெவலப்பெண்ட் என்ற பகுதியில் மேனேஜர் உத்தியோகம். ''தொழில் ஆராய்ச்சியும் முன்னேற்றமும்'' என்பது குறித்து இடைவிடாத சோதனைகள் செய்து பார்க்கும் பகுதியில் அதிகாரி உத்தியோகம்.

திருமணம் ஆகவில்லை. நல்ல உயரம். சிவந்த நிறம். நல்ல குடும்பத்தில் பிறப்பு. அருண்பாலாஜி தன் தங்கைக்குத் திருமணமாக வில்லையென்ற கவலையோடு என்னிடம் வந்து பேசமயிலாப்பூரில் இருக்கும் முண்டகக் கண்ணிக்குப் பிரார்த்தனை செய்து கொள்ளச் சொன்னேன். அந்தக் குடும்பம் பிரார்த்தனை செய்து கொண்டது. தங்கை காயத்ரிக்கு நல்ல இடத்தில் திருமணமாகியது. பலநாட்கள் பலவிதமாக தடைப்பட்ட தங்கையின் திருமணம் நன்றாக நிறைவேறியது என்பதால் ஏற்பட்ட கடவுள் பக்தியா அல்லது இயல்பான பக்தியா தெரியவில்லை. அருண்பாலாஜி மறுபடியும் ஒரு மாலைநேரம் வந்து நான் கைலாஷ் போகட்டுமா என்று கேட்டான்.



பல்வேறு விதங்களில் கைலாஷ் யாத்திரைகள் எளிதாகிவிட, சம்பாதிக்கும் காசில் மெல்ல சேர்த்து வைத்து கைலாஷ் யாத்திரை அருண்பாலாஜி கிளம்பிவிட்டான்.

மறுபடியும் சொல்கிறேன். அருண் பாலாஜிக்கு வயது இருபத்தியெட்டு.

நினைக்குப் பார்க்கும் போது எல்லாத் தலயாத்திரைகளும் செய்கின்ற வயது இதுதான் என்று எனக்குத் தோன்றியது. பதினெட்டு, இருபது வயதில் எதுவும் புரியாத வரையில் தலயாத்திரைகள் மேற்கொள்ளுவது வீண். ஆனால், உடம்பில் வலு சேர்ந்தும், புத்தியில் தெளிவு துவங்கியும் உண்டாகும் இந்த நேரத்தில் கைலாஷ் யாத்திரை என்பது மிக உன்னதமான விஷயம்.

அருண்பாலாஜி தன் முதுகு சுமக்கும் அளவுக்கு மூட்டையோடும் மழைக் கோட்டோடும், கம்பளிக் குல்லாயோடும் விமானம் ஏறிவிட்டான். அப்பாவுக்கும், அம்மாவுக்கும், அவனுடைய உறவினர்கள் பலபேருக்கும் இந்த விஷயம் ஆச்சரியமாகவும் அதிகப் பெருமை தருவதாகவும் இருந்தது.

இதற்கு நேர் எதிராய் இன்னொரு விஷயம்.

அறுபது வயதில் வேலையிலிருந்து ஓய்வு பெற்று, இன்னொரு முறை பதவி நீடிப்பு செய்ய இயலாது என்று சொல்லிக் கட்டாயமாக அந்த மனிதரை வீட்டிற்கு அனுப்ப அவர்கள் கொடுத்த காசோடு வீட்டிற்கு வந்தவருக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. தான் ஓய்வு பெற்று விட்டோம் என்பதை அவர் மனம் ஏற்றுக் கொள்ளவில்லை. உள்ளே குமுறிக் கொண்டிருந்தது. அடுத்த செலவுகளுக்கெல்லாம் என்ன செய்வது என்ற எண்ணம் வந்தது. மகன்களும், மகளும் நல்ல நிலையில் இருந்தாலும் தான், தன் சம்பாத்தியம் என்று இருப்பதே அவர் மிகவும் விரும்பினார்.

''சொளையா இருபதாயாயிரம் ரூபாய் வந்துண்டிருந்ததே !அது இப்போ இல்லையே!'' என்று பொருமினார்.

மேலும், இதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும் என்று அண்டை அயலார்கள் சொல்ல ஒருவாறு சமாதானமானார்.

''என்ன ஸார் இனிமேல் பிரச்சினை. நீங்க பாட்டுக்கு ஊர் ஊராக போய், கோவில் கோவிலா பார்த்துட்டு வாங்களேன்'' என்று சொல்ல மனைவியும் நச்சரிக்க சரி என்று கிளம்பினார்.

அவர் தன் பெரும்பகுதியை வடக்கில் கழித்து விட்டதால், தென்னாடு சுற்றுவதற்கு

ஆசைப்பட்டார். தமிழகக் கோயில்கள் அவருக்கு மிக முக்கியம் என்று சொல்லப்பட்டது.

எனது நண்பர் விஜயராகவன் அவர் மனைவி மல்லிகாவோடு பாட்டியாலாவிலிருந்து வண்டி மூலம் சென்னை வந்து இறங்கினார்.

ஜூன் மாதம் தமிழகத்திற்கு வர வெய்யில் இங்குப் புற்களைத் தீய்த்துக் கொண்டிருந்தது; போவோர், வருவோர் தலைமுடியைப் பொசுக்கிக் கொண்டிருந்தது.

சஃபாரி உடை இனி உபயோகமில்லை. ஆனால், நன்றாக இருக்கிறதே ! இது போட்டுப் பழகிவிட்டது என்பதால் சஃபாரி சூட்டோடு சென்னையில் வலம் வந்தார். நாலுமுழ வேட்டி, மேல் துண்டு போட்டாலே உடம்பு எரியும் சென்னையில், சஃபாரி சூட் புழுங்கி எடுத்தது. இடைவிடாத எரிச்சலைக் கொடுத்தது. பாட்டியாலாவில் வெய்யில் உண்டுதான். ஆனால், இப்படி வியர்த்து வழியாது.

சென்னையில் இறங்கியதும் அவர் தலயாத்திரை மேற்கொண்டார். எல்லாம் முன்னேற்பாடாகவே பாட்டியாலாவில் இருந்த படியே இங்குப் போய் வர ரயில் டிக்கெட்டுகள் வாங்கி இருந்தார்.

சஃபாரி சூட்டுக்கு மாற்று ஏற்பாடாக அவர் கட்டம் போட்ட லுங்கிதான் கொண்டு வந்திருந்தார். விஜயராகவனிடம் வேட்டியில்லை. ஏனெனில் அவருக்கு வேட்டி கட்டத் தெரியாது.

''கும்பகோணம் கும்பேஸ்வரர் கோயிலுக்குக் கட்டம் போட்ட நீல லுங்கியோடு போனால் விடுவார்களா? ஒரு மாதிரி இருக்காதா ! நாலுமுழ வேட்டி வாங்கிவிடலாமா?'' எனச்சிந்தித்தார்.

மல்லிகா வேண்டாமென்று சொல்லிவிட்டார்.

சஃபாரி தான் அழகாக இருக்கிறது. சஃபாரியில் பார்த்துப் பார்த்து நீங்கள் வேட்டி கட்டிக் கொண்டால் சமையற்காரனைப் போன்று தோற்றமளிக்கிறீர்கள். எனவே, கோயிலுக்குச் சஃபாரி உடையிலேயே வாருங்கள் என்று சொல்லிவிட்டார்.

ஆனால், கும்பேஸ்வரர் கோவிலில் அன்று பிரதோஷம். கூட்டமான கூட்டம். அங்கு கூடியிருந்த ஆயிரத்து நானூறு பேரில் இவர் மட்டுமே சஃபாரி உடை உடுத்தியிருந்தார். வெய்யில் பிளந்து கட்டியது. ஜனங்கள் முட்டி மோதிக் கொண்டு உள்ளே கருவறை நோக்கி நகர ஜனங்களுக்கு அறிவே இல்லை என்று இவர் வாய் தப்பிச் சொல்லி விட பக்கத்தில் இருந்த கிழவி பிலுபிலுவென்று பிடித்துக் கொண்டாள்.

## வாசகர் எண்ணங்கள்

முக்கண்ணனின் மூத்த புதல்வர் - முழு முதற் கடவுள் - முந்தி முந்தி விநாயகர் பற்றிய முத்தான கட்டுரைகளுடன் - முழு ஆன்மீகத் தகவல்களுடன் உருவாகி, முதல் தரமான விநாயகர் சிறப்பிதழாய் முத்திரை பதித்து விட்டது ''திருக்கோயில்''.

- த. சத்தியநாராயணன், அயன்புரம்.

''தென்முகக்கடவுள்'' எனப் புகழ்ப் பெற்ற குருபகவானிற்கு இப்படியொரு பிரசித்தி பெற்ற ஆலயம் மதுரை மாவட்டம் குருவித்துறையில் உள்ளது என்ற நல்லதகவலை முதன்முதலாகத் திருக்கோயில் இதழின் வாயிலாக அறிந்து கொண்டது குறித்து என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- இரா. வளையாபதி, தோட்டக்குறிச்சி

கோனேரி ராஜபுரம் நடராஜர் பற்றிய தெரியாத தகவலை நமக்குத் தெளிவுபடுத்திய திருக்கோயில் இதழ் கட்டுரை மிகச் சிறப்பாக இருந்தது.

- கந்தசாமி, சேலம்

''காவிரி காத்த கருணைமாமுனிவர்'' அருமை. கவர்னர் கோலெட் துரை கட்டிய வரதராஜர் ஆலயம் - அருமையிலும் அருமை. இந்து சமய அறநிலையத் துறை வெளியிடும் ''திருக்கோயில்'' ஆன்மீக இதழ் முதன்மையான தகவல்களைத் தந்து எங்களை மிகவும் கவரும் முதன்மை இதழாகத் திகழ்கின்றது.

- ஸ்ரீதரன், திருச்சி

''நீஎங்க வானத்திலேர்ந்து வர்ரியா? கோட்டும். சூட்டும் போட்டுகிட்டா ஐரோப்பாக்காரனா? இன்று எதுக்கு வரணும். இஞ்சஎதுக்கு சாமி தரிசனம்'' என்று கும்பகோணம் பாஷையில் பிளந்து கட்டினாள்.

கூட்டம் அவளை ஆமோதித்தது.

அவருக்குக் கும்பேஸ்வரர்மேல் கோபம் வந்தது.

உன்னைப் பார்க்க வேண்டிய அவசியமில்லை என்று நினைத்துக் கொண்டு கூட்டத்தில் இருந்து வெளியேறினார். கூட்டத்தோடு போவதை விட, கூட்டத்திலிருந்து வெளிவருவது மிகப்பெரிய வேதனையாய் இருந்தது. உடை கசங்கியது. சஃபாரி சூட்டின் பட்டன்கள் அறுந்தது. மூச்சுத் திணறல் ஏற்பட்டது. அந்தக் கோவிலில் மட்டுமலலாது, பல கோவில்களில் அவருக்கு மோசமான அனுபவங்களே



# காமாட்சியின் கருணை

காமாட்சியின் கருணை கடாட்சம் இருந்தால் பிரம்மாவே பொறாமைப்படும் அளவுக்குச் சரஸ்வதிதேவியின் திருவருளும், விஷ்ணுவே பொறாமைப்படும் அளவுக்கு லட்சுமியின் திருவருளும் கிடைக்கும்.

- சௌந்தரியலகரியில்
ஆதிசங்கரர்

ஏற்பட்டன. காரணம், அவருடைய உடல்நிலை தமிழகத்தின் வெய்யிலையும் கூட்டத்தையும் பொறுத்துக் கொள்வதாக இல்லை.

விசேஷ நாட்களில் கோவிலுக்குப் போவது வேண்டாம் என்று அவருக்கு எவரும் சொல்லித் தரவில்லை. அறுபது வயதிற்குப் பிறகு ஒரு கும்பலில் புகுந்து புறப்படுவதற்கோ அல்லது பசியை பொறுத்துக் கொண்டு வரிசையில் முன்னேறுவதற்கோ, தண்ணீர் குடிக்காமல் பல மணிநேரம் தாக்குப் பிடிப்பதற்கோ முடியாது என்பது தெரியவில்லை.

யாரோ சொன்னார்கள் என்று தலயாத்திரை புறப்பட்ட அவர் அதில் தனக்கு எந்தவித உற்சாகமும் ஏற்படவில்லை என்பதைப் பத்து நாட்களுக்குப் பிறகே புரிந்து கொண்டார்.

நண்பர் விஜயராகவன் எதேச்சையாய் என்னை சென்னை மயிலாப்பூர் கோவிலில் சந்தித்தபோது அவருடைய அனுபவங்களை எல்லாம் கேட்டுத் தலயாத்திரை போகவேண்டாம் என்று நான் அவருக்கு அறிவுரை சொன்னேன். வீட்டோடு அமைதியாக உட்கார்ந்து பூஜை புனஸ்காரங்களை மேற்கொள்ளச் சொன்னேன். கற்றுக் கொடுங்கள் என்று உடனே என் கையைப்பிடித்துக் கொண்டார். அவருக்கு வேறு ஒரு நபரை அடையாளம் காட்டினேன்.

சிறிய யோகாசனங்கள் செய்யவும், தினமும் பூஜை செய்யவும், மந்திர ஜபங்கள் செய்யவும் அந்த நண்பரிடம் அவர் கற்றார். மனைவியும் ஆசைப்பட அவருக்கும் மந்திரஜபங்கள் சொல்லித் தரப்பட்டன. மனைவியும் யோகாசனம் செய்யத் துவங்கினார். இரண்டு பேரும் மாலை இருட்டிய பிறகு கடற்காற்று பூமியை நோக்கித் திரும்பிய பிறகு, கடற்கரைச் சாலையில் நடக்கப் பழகினார்கள்.

ஐந்து மணிக்கு எழுந்திருந்து குளித்துவிட்டு ஆறுமணிக்குக் கபாலி கோயிலுக்கு வந்து நர்த்தன விநாயகர் அபிஷேகம் பார்த்து, கபாலிக்கும், கற்பகாம்பாளுக்கும் வணக்கம் சொல்லி, வலம் வந்து ஏழு மணிக்கு வீட்டில் அடங்கிக் கொண்டார்கள். பூஜை செய்தார்கள். அமைதியாய் மந்திரஜபம் செய்தார்கள்.

காலைச் சிற்றுண்டி முடித்துவிட்டு அயர்ந்து தூங்கினார்கள். பிறகு பேப்பர் படித்துவிட்டு மதிய உணவு முடித்து மறுபடியும் தூங்கினார்கள். மாலைநேரம் டி.வி. பார்த்துச் சந்தோஷப் பட்டார்கள். இரவு நேரம் வாக்கிங் போனார்கள். எப்போதாவது ஆன்மீகக் கூட்டங்களுக்கு போய் முன்வரிசையில் உட்கார்ந்து காதார இறைவன் புகழைக் கேட்டுக் கொண்டார்கள்.

சென்னை நகரம் அவர்களுக்கு இப்போது சொர்க்கமாக மாறியது.

''பாட்டியாலாவில் இருந்தா இந்த மாதிரி எல்லாம் கேட்கமுடியுமா?'' ன்று சந்தோஷப் பட்டார்கள்.

எதற்கு இந்த இரண்டு வெவ்வேறு நபரைக் காட்டுகிறேன் என்பது புரிந்திருக்கும்.

தலயாத்திரரை போவது வயதானபிறகு என்று ஒருகாலும் வைத்துக் கொள்ளக்கூடாது. தலயாத்திரை போவதற்கு வெகுநிச்சயமாய் நல்ல வயது, மத்திம வயதே.

திருமணமாவதற்கு முன்னால் போனால் கூட ஒரு வெறுமை ஏற்படும். திருமணமான பிறகு குழந்தைகள் பிறந்தபிறகு - குழந்தைகளுக்குப் பத்து வயது ஆகும் போது, வெகு நிச்சயமாய் உங்களுக்கு நாற்பது வயது ஆகியிருக்கும். மனைவிக்கு முப்பத்தைந்து வயது ஆகியிருக்கும். இந்த நேரத்தில் குழந்தைகளோடு தலயாத்திரை போவது குழந்தைகளுக்கும் குதூகலம் கொடுக்கும். உங்களுக்கும் சந்தோஷமாக இருக்கும். குழந்தைகளுக்கும் உங்களுக்கும் மிக நெருக்கமான ஒரு உறவு ஏற்படும்.

''நாற்பது வயதுதான் ஸார் உழைக்கிற நேரம். அந்த நேரத்துல கோயில் கோயிலா அலைய முடியுமா?''

வருஷத்தின் எல்லா நாட்களும் அலையச் சொல்லவில்லை. நான்கு மாதங்களுக்கு ஒரு முறை தல யாத்திரை போகலாம். சூழ்நிலைகளுக்கு ஏற்றாற்போல் கோவில்களைப் பிரித்துக் கொள்ளலாம். பரத கண்டம் முழுவதிலும் சுற்றலாம். இளமையான வயதையும் விட மத்தம வயது இன்னும் சிறப்பான நேரம். வயதானபிறகு மெல்ல பயணம் செய்வதைத் தவிர்த்து மந்திர ஜபத்தில் ஈடுபட மனதில் மிகப்பெரிய சந்துஷ்டியும், அமைதியும் விளங்கும். உடம்பு ஆரோக்கியமாக இருக்கும் என்பது என் சொந்த அபிப்ராயம்.

# அர்த்தநாரீஸ்வரர் அற்புதம்

ஏ. கிருஷ்ணன்

திருச்செங்கோடு - அம்மையப்பன் அர்த்த நாரீசுவரராய் அருள்பாலிக்கும் அற்புதத் திருத்தலம். ஈரோட்டிலிருந்து கிழக்கில் சுமார் 20 கி.மீ. தொலைவிலும், சேலத்திலிருந்து தென் மேற்கில் 45 கி.மீ தொலைவிலும் உள்ள இத்தலம் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய அனைத்திலும் புகழ் பெற்ற தலம் ஆகும்.

கொங்கு நாட்டுத் தலங்களுள் புகழ் பெற்ற இத்தலத்தில் இறைவன் ஆண் பாதி, பெண் பாதியாக தரிசனம் தருகிறார் என்பது விசேஷமாகும்.

ஒரு முறை கைலாயத்தில் ஆடல் நாயகனாம் சிவபெருமானோடு விளையாட ஆவல் கொண்ட தேவி தன் இரு கைகளாலும் நாயகனின் இரு கண்களையும் திடீரென மூட எல்லா உலகங்களும் இருண்டு போனது. உடனே ஈசன் தன் நெற்றிக் கண்ணைத் திறந்து உலகங்களுக்கு ஒளி கொடுத்தார். தான் அறியாது செய்த தவறினால் விளைந்த பாவத்தைப் போக்க ஈசனின் ஆணைப்படி பூலோகம் வந்தாள் லோக நாயகி. பூமியில் கேதாரத்திலும், காசியிலும், பிறகு காஞ்சியில் சும்பையாற்றங்கரையிலும் தவம் மேற்கொண்டு ஈசனின் கண்களை மூடிய பாவம் நீங்கப் பெற்றாள்.



மேலும் ஈசனோடு கயிலாயம் வந்தடைய திருவண்ணாமலையிலும் தன் தவத்தை ஆரம்பித்தாள். காலங்கள் உருண்டன. திருவண்ணாமலையில் அன்னைக்குக் காட்சி கொடுத்தார் ஆண்டவன். அன்னை அவரிடத்தில் என்றென்றும் ஈசனைப் பிரியாவண்ணம் அவரது உடலில் இடப்பாகமளித்தருள வேண்டினாள்.

ஈசனும் கொங்கு மண்டலத்தில் இருக்கும் நாகாச்சலம் என வழங்கப்படும் திருச்செங்கோடு சென்று மீண்டும் தவமியற்றச் சொன்னார். இறைவனை நோக்கிய தவத்தில் அலுப்பு தட்டுமா என்ன?

உமையவளும் உடன் திருச்செங்கோடு விரைந்தாள். ஒரு புரட்டாசித் திங்களில் வளர்பிறை அட்டமி திதியில் லிங்கப் பிரதிட்டை செய்து கேதார கவுரி விரதத்தைத் தொடங்கிப் பூஜித்துவந்தாள். உலகில் ஆணும் பெண்ணும் சரிசமமென அனைவருக்கும் எடுத்துக் காட்ட இறைவன் புரட்டாசி மாதத்தில் தேய்பிறை சதுர்த்தியில் தேவிக்குக் காட்சிக் கொடுத்துத் தன் இடப்பாகத்திலும் அவளுக்கு இடம் தந்து உமையொரு பாகனாய் அருள்தரிசனம் புரிந்தார்.

இது தவிர மேலும் சில புராணச் சிறப்புகளும் இத்தலத்துக்கு உண்டு. ஈசனே பெரியவன் என்று தன்னை மட்டுமே வழிபட்டு வந்த பிருங்கி முனிவருக்கு சிவன் வேறு சக்தி வேறல்ல. இருவரும் ஒன்றான பரம்பொருளே என விளக்கும் பொருட்டு அர்த்தநாரீசுவரராய் அவருக்கு அருள் தரிசனம் தந்த திருத்தலம் இது.

'முடிகண்டேன் 'என பொய்யுரைத்த பிரம்மனும் இத்தலம் வந்திருந்து வழிபட்டு பேறு பெற்றான் என்பது வரலாறு. இரணியன், இரண்யாட்சன், மதுகைடபர்களைக் கொன்ற பாவம் தீரத் திருமாலும் இத்தல இறைவனை வழிபட்டதாகப் புராணங்கள் கூறுகின்றன.

பல துணைக் கோயில்களைக் கொண்டு திகழும் திருச்செங்கோடு அருள்மிகு அர்த்தநாரீசுவரர் திருக்கோவில் மலையின் மீது காட்சி தருகிறது. மலையடிவாரத்தை அடைந்து நுழைவு வழியின் மூலம் திருமலையின் முதற்படியை அடையலாம். அங்கு விநாயகப் பெருமான் காட்சித் தருகிறார்.

தென்புறத்தில் ஆறுமுக சுவாமியின் கோவில் உள்ளது. முதற்படியைக் கடந்தால் செங்குந்தர் மண்டபம் உள்ளது. இதனை அடுத்து காளத்தி சுவாமிகள் மண்டபம், திருமுடியார் மண்டபம், தைலி மண்டபமும் உள்ளன. தைலி மண்டபம் அருகே வீரபத்திர சுவாமி கோவில் உள்ளது.


அடுத்து பசுவன்(நந்தி) கோவில் தெற்கு நோக்கிய வண்ணம் உள்ளது. வெண்ணைச் சாற்றி நந்தியை வணங்கிவிட்டு சற்றுக் கீழிறங்கினால் நாகர் பள்ளத்தை அடையலாம். இந்தப் பள்ளம் வளைந்து நெளிந்து படமெடுத்த நிலையில் லிங்க உருவினை சுமந்திருக்கும் ஆதிசேடனைப் போன்றுள்ளது. சுமார் 60 அடி நீளமுள்ள இந்தப் பள்ளத்தில் குங்குமம் தூவிப் பொங்கலிட்டு வழிபட்டால் நாகதோஷம் நீங்கப் பெறலாம்.

ஆலய வாயிலில் உள்ள செங்கோட்டுப் பிள்ளையாரை வணங்கிவிட்டு உள்ளே சென்றால் வலதுகையில் வேலும், இடது கையில் சேவலும் தாங்கி நிற்கும் செங்கோட்டு வேலவனின் சன்னதி நம்மை வரவேற்கிறது.

# அர்த்தநாரீசுவரர் தத்துவம்

சிவபெருமான் தம் உடலில் பாதியினைத் தேவிக்குத் தந்து அர்த்தநாரியாக நிற்கிறார்.

நான் காமத்தை வென்றவன் என்பதையும், வாழ்க்கையில் ஆணும் பெண்ணும் சரிநிகர் சமம் என்பதையும் அர்த்தநாரீஸ்வரர் உணர்த்துகின்றார்.



இந்தச் சன்னதிக்குத் தென்புறத்தில் அமைந்துள்ளது தான் அர்த்தநாரீசுவரர் சன்னதி.

இடபாகம் பெண்ணாகவும், வலபாகம் ஆணாகவும் இருக்க, உமையொருபாகன் கருவறையில் காட்சி தருகிறார். வலது கையால் தண்டாயுதத்தைப் பிடித்தவாறும், இடது கை தேவியின் இடையில் பிடித்திருக்க சற்று வலப்புறம் சாய்ந்து மகர குண்டலம், முத்துமணிரத்தினங்கள் காதுகளை அழகு செய்யப் பச்சை, நிற கோசிக உடை இடது தொடையையும், புலித்தோலாடை வலது தொடயையும் அலங்கரிக்க முப்புரிநூல் ஒரு பக்க மார்பிலும், தனபாரம் ஒரு பக்கமும் யமனை உதைத்த நாகவீரு கொண்டையும் அணிந்த திருவடி ஒரு புறமும், அழகிய சிலம்பணிந்த திருவடி ஒரு பாகமும் கொண்டு அப்பனும் அம்மையும் அழகு தரிசனம் தருகிறார்கள்.



இந்தச் சன்னதிக்குத் தென்புறத்தில் நாரிகணபதி சன்னதியும், கோவிலின் தென்மேற்கில் நாகேசுவரர் கோவிலும் உள்ளது. மேலும் இக்கோவிலில் நிலமகளும், திருமகளும் உடனுடைய ஆதிகேசவபெருமாள் தரிசனத்தையும் காணலாம்.

மேலும் அர்த்தநாரீஸ்வரர் சன்னதிக்கு எதிர்உள்ள நிருத்த மண்டபம் அழகு மிக்கது. மேலும் நாரி கணபதி சன்னதிக்கருகில் இருக்கும் தாண்டவபத்திரை விலாசமண்டபத்தில் உள்ள ஊர்த்துவ தாண்டவமூர்த்தி, ஆலங்காட்டுக் காளி ஆகியோரின் மூர்த்தங்கள் நம்மை மெய்சிலிர்க்கச் செய்கின்றன.

மேலும் இத்திருக்கோவிலில் பஞ்சலிங்கங்கள், விசுவநாதர், மல்லிகார்ச்சுனர், தென்முகக்கடவுள் கொற்றவை (துர்க்கை) சூரியன், நாகர், பைரவர், முதலான தெய்வ மூர்த்தங்களும் வழிபாட்டில் உள்ளன. கோவிலுக்கு வெளியே குகை மண்டபம் உள்ளது. இக்கோவிலுக்கு கிழக்கே ஏறக்குறைய மேலும் 350 அடி உயரம் உள்ள மலைமீது ஏறி சென்றால் பாண்டீசுவரர் ஆலயத்தைக் காணலாம். சோழ, பாண்டிய மன்னர்களால் போற்றப்பட்ட இத்திருத்தலத்தில் தேவதீர்த்தம், நாகதீர்த்தம், சிவதீர்த்தம், கணபதி தீர்த்தம், குமார தீர்த்தம் எனப் பலதீர்த்தங்கள் உள்ளன என்பது விசேஷம்.

# பதில்



★ எஸ். தனகோடி, பவானி

கேள்வி : வடலூரில் வள்ளலார் அமைத்த சத்தியஞானசபையில் சோதி தரிசனத்திற்கு முன்பாக ஏழு திரைகள் விலக்கப் படுகின்றனவே! அதன் தத்துவம் என்ன என்பதை விளக்கிட வேண்டுகின்றேன்.

பதில்: சோதி மண்டபத்தின் முன்பாக ஏழுதிரைகள் இருப்பது நமது மெய்ஞ்ஞானப் படிநிலைகளைக் குறிப்பதாகும். அஞ்ஞானத்தைப் படிப்படியாக விலக்கிக் கொண்டால் இறைவனாகிய ஜோதிதரிசனம் கிட்டும் என்பதே இதன் விளக்கம் ஆகும்.

ஏழுதிரைகளில் முதலாவது உள்ள கறுப்புத் திரை மகாமாயையைக் குறிக்கும். நீலத்திரை மாயாசக்தியைக் குறிக்கும். பச்சைத்திரை கிரியாசக்தி, சிவப்பு பராசக்தி, பொன் மஞ்சள் இச்சாசக்தி, வெண்மை ஞானசக்தி, கலப்புத்திரை ஆதி சக்தி - இவ்வேழு திரைகளும் ஒன்றன்பின் ஒன்றாக விலக்கப்பட்டு சோதி தரிசனம் வழங்கப்படுகின்றது.

★ கணேசமூர்த்தி, சைதாப்பேட்டை,

கேள்வி : விநாயகர் சதுர்த்தியைச் சிறப்புறக் கொண்டாடிவிட்டு, பக்தியுடன் போற்றி வழிபட்ட விநாயகர் சிலைகளைக் கடலில் போய் கரைப்பது தேவைதானா? விளக்கம் தர வேண்டுகின்றேன்.

பதில் : தஞ்சைமாவட்டத்தில் உள்ள கணபதி அக்கிரஹாரம் என்ற ஊருக்கு உள்ள சிறப்பு என்ன தெரியுமா?

கணபதியைப் பெயரிலேயே சேர்த்துக் கொண்டுள்ள இந்த ஊரில் வாழும் மக்கள் விநாயகர் சதுர்த்தியை வீட்டில் கொண்டாடுவதில்லை. அன்று ஊரிலுள்ள விநாயகர் கோயிலுக்கே மக்கள் அனைவரும் சென்று சிறப்புடன் விநாயகருக்குப் பூசைகள் செய்து வழிபடுவதை வழக்கமாகக் கொண்டு உள்ளனர். இதைப் போன்றே மக்கள் எல்லோரும் வழிபாடு செய்ய முற்பட்டால் விநாயகர் சிலைகளை நீர்நிலைகளுக்குக் கொண்டு சென்று கரைக்க வேண்டிய அவசியம் இருக்காது.

மக்கள் தத்தம் வீடுகளிலும், வீதிகளிலும் விநாயகர் உருவங்களை வைத்து வழிபடுவதால், களிமண் கொண்டு விநாயகர் வடிவமைக்கும் எண்ணற்ற கைவினைஞர்களுக்குப் பணி கிடைக்கிறது.

வண்ணக் காகிதங்களைக் கொண்டு குடை செய்வோர், எருக்கம்பூ, அருகம்பூமாலை தொடுப்போர், விநாயகர் வழிபாட்டிற்குத் தேவையான காய்கனிகள் போன்ற பூசைப் பொருட்கள் விற்போர் ஆகிய எல்லோரும் குதூகலமாக அன்று பணியும், பயனும் பெறுவதும், அதனால் ஒரு தனி உற்சாகம் மக்களிடையே உண்டாவதும் விநாயகர் சதுர்த்தி விழாவால் உண்டாகும் பெரும் பயன் ஆகும்.

ஆண்டுதோறும், அநேகப் பயன் விளைக்கும் விநாயகர் சதுர்த்தி விழா, விநாயகர் சிலைகளைக் கடலில் கொண்டு போய் கரைப்பதோடு நிறைவு பெறுகிறது. அது சுகாதாரக் கேடு உண்டாக்கும் வகையில் அமையாமல் களிமண்ணால் சிலைகள் செய்து, வழிபாடு செய்து, கடலில், நீர் நிலைகளில் கொண்டு போய் கரைக்கும் வகையில் அமைவது நல்லது.

''பற்றுக பற்றற்றான் பற்றினைப் அப்பற்றை
பற்றுக பற்று விடற்கு''

என்பது குறள்.

''ஆசையறுமின்கள் ஆசையறு மின்கள்
ஈசனோடாயினும் ஆசையறுமின்கள்''

என்பது திருமந்திரம். ஆசைஆசையாய் வழிபட்ட ஆண்டவர் சிலைகளைக் கடலில் கரைப்பதால் நாம் நம் ஆசைகளிலிருந்தும் பற்றுக்களிலிருந்தும் விடுபடக் கற்றுக் கொள்கின்றோம்.

★ தனலட்சுமி, மயிலாப்பூர்.

கேள்வி : ஆண்டுதோறும் நவராத்திரி கொலு வைத்து வழிபடுவதை வழக்கமாகக் கொண்டு இருந்தேன். அண்மையில் நாங்கள் குடிபெயர்ந்த வாடகை வீடு சிறியதாக இருப்பதாலும், குழந்தைகள் வளர்ந்து பெரியவர்களாகி விட்டபடியாலும் முன்போல் கொலு வைத்து வழிபட முடியவில்லை. இதனால் அம்பிகையின் அருள் பெற முடியாமல் போய்விடுமோ என்று மனம் கலங்குகின்றது. தாங்கள் உரிய விளக்கம் தந்து எனக்கு வழிகாட்டுமாறு வேண்டுகின்றேன்.

பதில்: அம்பிகை கருணைக்கடல்.

'நவராத்திரி கொலு வைக்கவில்லயே என்று உங்களுக்கு அருள் செய்ய மறுக்க மாட்டாள். உங்கள் இல்லத்திற்கு அருகில் உள்ள கோயிலுக்குச் சென்று அம்பிகையை வாரம் ஒருநாள் தவறாமல் வழிபாடு செய்யுங்கள்.

''தனம்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா
மனம் தரும் தெய்வ வடிவும் தரும் நெஞ்சில்வஞ்சமில்லா
இனம் தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனம் தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே''

போன்ற அம்பிகைப் பாடல்களை மனதாரப் போற்றி வழிபாடு செய்யுங்கள். எல்லா நலங்களும், வளங்களும் குறைவின்றிப் பெறுவீர்கள்.

# திருவிளையாடல் புராணம்


இரா. அரங்கசாமி


## பழி அஞ்சின படலம்

இராசசேகர பாண்டியன் தன் மகனான குலோத்துங்க பாண்டினுக்கு முடிசூட்டிவிட்டு சோமசுந்தரக்கடவுளின் திருவடிநீழலை அடைந்தான். குலோத்துங்கன் மிகுந்த அன்புடன் சோமசுந்தரக்கடவுளை வழிபட்டு வந்தான். அவனுக்குப் பல மனைவியர் இருந்தனர். பல புதல்வர்கள் பிறந்தனர். அப்புதல்வர்களுள் முதலில் தோன்றியவன் அனந்தகுணன் என்னும் பெயரை உடையவன். அவன் பல கலைகளிலும் சிறந்து விளங்கினான்.

இக்குலோத்துங்க பாண்டியன் ஆட்சிக் காலத்தில் மதுரையை அடுத்த திருப்பத்தூரில் மறையவன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் ஒருநாள் தன் மனைவியோடும், இளங்குழந்தை யோடும் மாமன் வீட்டிற்கு மதுரையை நோக்கிக் காட்டுவழியாக வந்து கொண்டிருந்தான். வருகின்ற வழியில் அவன் மனைவிக்குத் தாகம் எடுத்தது. எனவே அவளை ஓர் ஆலமரத்தின் நிழலில் குழந்தையுடன் இருக்கச் செய்துவிட்டு, தான் மட்டும் நீர் நிலையினைத் தேடிச் சென்றான். அவள் தன் குழந்தையை அருகில் வைத்து அயர்வுடன் படுத்தாள்.

இலைகள் நிறைந்த அந்த ஆலமரத்தில் முன்னொரு நாளில் யாரோ ஒரு வேடனால் எய்யப்பட்ட அம்பு ஒன்று சிக்கிக் கிடந்தது. காற்றினால் அசைபட்டு மரம் ஆடியதால் அக்கூரிய அம்பு கீழே விழுந்தது. அங்குப் படுத்திருந்த பார்ப்பினியின் வயிற்றில் ஊடுருவித் தைத்தது. முன்னை வினைப் பயன் காரணமாகப் பார்ப்பினி மாண்டாள். அப்பொழுது வேடன் ஒருவன் ஆலமர நிழலில் ஒதுங்கும் பொருட்டு மறுபுறம் வந்து இளைப்பாறி இருந்தான்.



தண்ணீரைக் கொண்டு வருவதற்காகச் சென்ற அந்தணன் அவ்வாறே நீர் கொண்டு திரும்பி வந்தான். அங்கு இரத்த வெள்ளத்தில் அழுந்தி உயிர் துறந்திருந்த தன் மனைவியைக் கண்டு திடுக்கிட்டான். அவள் அருகே சென்று அழுது புலம்பினான், புரண்டான், அயர்ந்தான்.

பின்னர் தெளிவடைந்து இவளைக் கொன்றவர் யார்? என்று தேடத் தொடங்கினான். அப்போது ஆலமரத்தடியில் ஒரு பக்கத்தில் அம்போடும், வில்லோடும் நிற்கும் வேடனைக் கண்டான். இவனே என் மனைவியைக் கொன்றவன் என்று வேடனை நெருங்கினான்.

''வேடனே ! நீயே என் மனைவியைக் கொன்றவன். மன்னவன் மேல் ஆணை'' என்று கூறி வலிந்து அவனை இழுத்துக் கொண்டு இறந்து போன தன் மனைவியை முதுகில் இட்டுக் கையில் குழந்தையைத் தூக்கிக் கொண்டு மதுரையை அடைந்து அரசனின் அரண்மனை வாயிலை அடைந்தான்.

அரண்மனை வாயிலில் தன் மனைவியின் உடலைக்கிடத்திவிட்டு, வேடனை முன்னேவிட்டு அமைச்சர் முதலானோர் கேட்க, அவர்கட்கு எதிரே கையை மேல் தூக்கி, கண்ணீருடன் முறையிட்டு அழுதான்.

''அரசன் ஆணை உலகம் முழுவதும் தரும நெறி வழுவாமல் காக்கும் என்பார்கள். அவ்வாணை இவ்வேடன் செய்த கொலையைத் தடுக்கவில்லை'' என்றான்.

உடனே வாயில் காப்போர் பாண்டியனிடம் சென்று, ''அரசே! நம் அரண்மனை வாயிலில் ஓர் அந்தணன் வந்து முறையிடுகின்றான். அவன் மனைவியின் உயிரற்ற உடலைக் கீழே கிடத்தி, அவளைக் கொன்றான் என்று வேடன் ஒருவனை முன் நிறுத்தியுள்ளான்'' என்றனர்.

அதனைக் கேட்ட பாண்டியன் அஞ்சி வெளியே வந்தான். அந்தணன் நிலைகண்ட மன்னன் ''ஐயா, நீஏன் வருந்துகிறாய்? உனக்கு நேர்ந்ததுன்பம் யாது? சொல்வாய்'' என்றான்.

அம்மறையோன் மன்னனை நோக்கி, ''புகழ் மிக்க நீதியுள்ளவனே! நான்இன்று மதுரையை நோக்கி என்மனைவியோடும், குழந்தையோடும் வந்து கொண்டிருந்தேன். வழியில் தாகம் எடுக்கவே இவளை ஓர் ஆலமர நிழலில் இருக்க விட்டு, தண்ணீர் கொண்டுவரச் சென்றேன். நான் திரும்பி வரும்போது, இச்சிலை வேடன் இவளைக் கொன்று விட்டு அருகில் நின்று கொண்டு இருந்தான்'' என்றான். இச்சொற்களைக் கேட்டுப் பாண்டியன் மிக்கதுன்பமடைந்தான்.


பாண்டியன் அந்தணன் சொல்லைக் கேட்டு வேடனை நோக்கினான். வேடன் அரசனை வணங்கி, ''எந்தையே ! நாயினும் கடைப் பட்டயான் இளைப்பாறும் பொருட்டு ஆலமர நிழலை அடைந்து ஒரு புறம் ஒதுங்கி நின்றேன். இவளை யான் கொலை செய்யவில்லை. கொலை செய்தவனைக் காணவும் இல்லை'' என்றான். அங்குள்ள அமைச்சர்கள் ''இவள் உடலில் அம்புதைத்து உருவியது எப்படி?'' என்றனர். வேடன் ''நான் அறியேன்'' என்றான்.

வேடன் கூறியவற்றை நம்பாமல் அமைச்சர்களும், மன்னனும் வேடனைத் தண்டித்தனர். மிக்க துன்பப்படுத்தினர். மீண்டும் வேடன் முன் சொல்லியதையே சொல்லிக் கொண்டிருந்தான்.

பாண்டியன் சற்று ஆராய்ந்தான். ''இவன் முகத்தில் சிறிதும் கொலைக் குறிப்பு இல்லை. இவளைக் கொல்வதற்கும் காரணமில்லை. ஒன்றும் அறிவதற்கு இல்லை'' என்று கூறி ''உன் மனக்கவலையை ஒழிப்பேன். நீஅஞ்சற்க'' என்று கூறினான்.

அத்துடன், ''இப்போது உன் மனைவியின் ஈமக்கடன்களை முடித்து வருக!'' என்று அவனை அனுப்பி விட்டு வேடனைச்சிறையிட்டான்.

பாண்டியன் சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருக்கோயிலை அடைந்தான். ''இறைவனே ! இவ்வேடன்தான் அப்பார்ப்பினியைக் கொன்றானோ? அன்றிப் பிறர் வேறுகாரணத்தால் கொன்றனரா? உமது திருவருளால் அதனைத் தெரிவித்தல் வேண்டும்'' என்று பிரார்த்தனை செய்தான்.



அப்போது ஆகாயத்தினின்று 'பாண்டியனே! இந்நகரத்தின் புறத்தே உள்ள செட்டித்தெருவில் இன்று ஒரு திருமணம் நடைபெற உள்ளது. அம்மறையவனோடு அங்கு நீவருவாயாக! அங்கு நாம் இதனைத் தெரிவிப்போம்' என்று ஓர் அசரீரிவாக்கு எழுந்தது.

இதனைக் கேட்ட பாண்டியன் மாறுவேடம் பூண்டு மறையவனுடன், அத்திருமண வீட்டிற்குச் சென்று ஒருவரும் அறியாமல் ஒதுங்கியிருந்தான்.

அப்போது சோமசுந்தரக்கடவுளின் திருவருளால் பாண்டியனும் மறையவனும் கேட்குமாறு கூற்றுவனால் அனுப்பப்பட்ட எமதூதர் இருவர் உரையாடிக் கொண்டிருந்தனர். 'இன்று இங்கு இம்மணமகன் உயிரைக் கவர்ந்து வரும்படி நம் தலைவர் ஆணையிட்டுள்ளார். இவன் உயிரைக் கவர்வது எங்ஙனம்? இவன் உடலில் பிணியும் இல்லையே! ஒரு காரணமும் இன்றி இவன் உயிரைக் கவர்வது முடியாதே' என்று ஒருவன் வினாவினான்.

அதற்கு மற்றவன் 'அன்று ஆலமரத்தின் கண் முன்னரே சிக்கியிருந்த அம்பினைக் காற்றினால் அசையச்செய்து கீழே விழவைத்துப் பார்ப்பினியின் உயிரைக் கவர்ந்தோம் அல்லவா? அவ்வாறே இப்பொழுது புறத்தே உள்ள இக்கன்றினை ஈன்ற பசுவினை இம்மணவிழாவின் ஆரவாரத்தினால் வெகுண்டு கயிற்றை அறுத்துக் கொண்டு ஓடச்செய்து இவன் உயிரைக் கவர்வோம்' என்றான்.

இதனைக் கேட்ட பாண்டியன் மறையவனை நோக்கினான். உடனே மறையவன் ''இங்குக் கூறியபடியே இம்மணமகன் இறந்தால் என் மனைவியும் இறந்தது அப்படியேதான். ஆகையால் இந்நிகழ்ச்சியைக் காண்பேன்'' என்றான். பாண்டியனும் ஒருசேர அவனுடன் இருந்தான்.

மணமகன் இல்லத்தில் அவனுடைய சுற்றத்தார் ஒன்று கூடினர். மணவினையைத் தொடங்கினர். பல இசைக்கருவிகள் முழங்கின. முழங்கிய பல ஓசையால் அங்குக் கட்டியிருந்த பசு வெகுண்டு அலறி, கயிற்றை அறுத்துக் கொண்டு ஓடி, மணமகனை முட்டித்தள்ளியது, அவன் இறந்தான். மங்கல மகளிர் வாழ்த்தொலி அழுகை ஒலி ஆயிற்று.

மறையவன் அதனைக்கண்டு ''என்ன காரியம் செய்து விட்டேன்'' என்று இரங்கிப் பெரிதும் துன்பம் கொண்டான். அரசனோடு அவன் மாளிகை அடைந்து அமைச்சர்களுக்கும், மற்றவர்க்கும் இதைக் கூறினான். பாண்டியன் அந்தணனை நோக்கி ''இன்னும் ஒரு கல்யாணம் செய்து கொள்வாயாக'' என்று கூறி பொருள் நிறைய வழங்கினான். பின்னர் அவனை அனுப்பி வைத்தான்.

சிறையில் உள்ள வேடனை விடுவித்து, ''உண்மையறியாமல் யாம் செய்த தண்டத்தைப் பொறுத்துக்கொள்வாயாக'' என்று கூறி அவனுக்குப் பொருள்களை நிறைய வழங்கினான்.

(தொடரும்)

# மகாபாரதம்

முனைவர் த.அமிர்தலிங்கம்

**18**

இவ்வாறு இருசாராரும் யுத்தத்திற்கு ஆயத்தமாகிவிடும் அந்நிலையில், இன்னும் ஒரு விந்தை நடக்கிறது. தருமர் தம் ஆயுதங்களை எல்லாம் கீழே வைத்து, தம் மார்பில் அணிந்திருந்த கவசத்தையும் கழற்றி வைத்துத் தம்முடைய தேரிலிருந்து இறங்கி கௌரவப் படைகளின் சேனாதிபதியான வீடுமர் இருக்கும் இடத்திற்கு விரைந்து செல்கின்றார்.

அண்ணனின் செய்கைக்கான அர்த்தம் விளங்காமல் வீமன் அர்ச்சுனன் நகுல சகாதேவர்களும் கூட தருமரைப் பின் தொடர்ந்து செல்கின்றனர்.



அப்பொழுது, அர்ச்சுனனுக்கு வந்த தயக்கமும் மயக்கமும் தருமருக்கும் வந்துவிட்டதோ எனப் பலர் ஐயப்படுகின்றனர். தருமர் அல்லவோ ஆரம்பம் முதலே யுத்தம் வேண்டாம் என்று மறுத்தவர்.

''யுத்தம் வேண்டாம் என்பதற்காக தருமர் செல்லவில்லை. யுத்தத்தில் பெரியோர்களின் ஆசியைப் பெறுவதற்கே தருமர் அவ்வாறு செல்கிறார்'' என்பதைத் தெரிந்து கொண்டு கண்ண பெருமானும் அவர் செயல் பொருத்தமானதே என்பதாகப் பாராட்டித் தாமும் பாண்டவர்களுடன் போய், வீடுமரை முதலில் கண்டு வணங்குகிறார். யுத்தத்தில் பாண்டவர்கள் வெல்ல நல்லாசி கோருகிறார்.

''பிதாமகரே! தாங்களே பாண்டவர் களுடன் எதிர்த்துப் போர் செய்வீர்களாயின், இவர்கள் எவ்வாறு வெற்றி பெற இயலும்?'' எனக் கண்ண பெருமான்வினவ வீடுமரும்,

**''நின்றனை யருளொடுஆங்கே நீலமா
மேனியோய்நீ
வென்றி மற்றிவரேயல்லால் வேறுயார்
எய்துகிற்பார்''**

- முதற்போர்ச் சருக்கம்

**''தருமராசன் மைந்தனே யவனிக்கெல்லாம்
கொற்றவன்ஆகும்''**

- முதற்போர்ச் சருக்கம்

என்று கண்ணபெருமான் துணை நிற்க பாண்டவர்களே வெல்வர் என்று கூறித் தம் நல்வாழ்த்துக்களை நல்குகின்றார்.

அதற்குப் பிறகு துரோணரைப் போய் பாண்டவர்கள் வணங்கி ஆசி கோர அவரும் **''மன்மகன் தருமன் வென்று வையகம் எய்த நிற்பான்''** என்று தன்வாழ்த்தினைக் கூறுகின்றார்.

இவ்வாறு நல் வாழ்த்தினைத் தெரிவிப்பதோடு வீடுமரும், துரோணரும், தம்மைப் பாண்டவர்கள் வெல்வதற்கு என்ன உபாயம் என்பதையும் கூட இந்நேரத்தில் எடுத்துரைக்கின்றனர் என்றால் அவர்கள் பாண்டவர்கள் பால் கொண்டிருக்கும் பேரன்பினை என்னவென்பது ! பாண்டவர்கள் பால் பேரன்பு



## சரஸ்வதியைத் தொட்டு வணங்கலாம்

தமிழகத்தில் சரஸ்வதிக்கென்றே தனிக் கோயில் கூத்தனூரில் அமைந்து விளங்குகின்றது.

விஜயதசமியன்று சரஸ்வதியின் பாதங்கள் வெளிப்புறம் நீண்டிருக்குமாறு மலரால் நீட்டி விடுவார்கள்.

அன்று மட்டும் பக்தர்கள் இந்தப் பாதங்களைத் தொட்டு மலராலும், குங்குமத்தாலும் அர்ச்சனை செய்யும் பாக்கியம் பெறலாம்.

கொண்டிருந்தாலும், துரியோதனனுக்காக உயிர்விடத் துணிந்து அவனுக்காகப் போர் செய்ய நிற்கிறார்கள் என்றால் அவர்களுடைய செஞ்சோற்றுக்கடன் சிறப்பையும் என்னவென்று பாராட்டுவது!

பத்தாம் நாள் போரின்போது, தன்னைக் கொல்வதற்காகவே பிறந்திருக்கின்ற சிகண்டி என்ற அலியைத் தனக்கு முன் நிறுத்தினால், தான் கணையேதும் தொடுக்க மாட்டேன் என்பதையும், அந்நேரம் அர்ச்சுனனும் சிகண்டியுடன் அம்பெய்தால் அர்ச்சுனன் அம்பால் தான் மாண்டு படுவேன் என்பதையும் வீடுமர்,

**''பன்னுசீர் யாகசேனன் குமரனைப் பத்தா**
**நாளில் என்னெதிர் அமரிற் காட்டில்யான்**
**படையாவுந் தீண்டேன் பின்னவன்**
**வெகுண்டு செய்யும் பெருமிதம் கண்டு**
**மீண்டு கன்னனை வெல்ல நின்ற காளைக்**
**கைக்கணையால் வீழ்வேன்''**

- முதல் போர்ச் சருக்கம் 11...

என்று கூறுகிறார்.

துரோணரும் தம் மகன் அசுவத்தாமா மாண்டான் என்ற செய்தியை நம்பத் தகுந்தவர் யாரேனும் தம் காதுபடக் கூறுவார்களே யானால் தாம் அதற்குப் பின் வில்லினைக் கையால் தொடப் போவதில்லை எனவும் அந்நேரம் தம்மைத் கொல்லப் பிறந்திருப்பவன் ஆகிய திட்டத்துய்மன் அம்புவிட்டால் தம் மரணம் நேரும் என்பதையும்,

**''என் மகன் எனக்கு முன்னே இறந்தன னென்று வானில்**
**வின்மகபதியை யொக்கும வேந்தர்முன் சொல்லிற்**
**... பின்னைச் சாபமென்றெடுக்கிலேனே''**

**- முதற்போர்ச் சருக்கம், 14**

**''என் பெருஞ்சாபங் கைவிட்டுயான் எதிர் நிற்ற லானும்,**
**நின் பெருஞ் சாபத்தாலுஞ் சமரிடைத்**
**திட்டத்துய்மன் வன்புடன் எனக்குக் கூற்றாய்**
**மலைகுவன் மலைந்தவன்றே**
**நின்பெருங் கருத்து முற்றும்''**

- முதற் போர்ச் சருக்கம் 15

என்று எடுத்துரைக்கின்றார். சாபம் எனும் சொல். வில் எனப் பொருள்படும். சிகண்டியும், திட்டத்துய்மனும் வீடுமரையும் துரோணரையும் முறையே கொல்வதற்குப் பெற்ற வரங்களின் வரலாறுகளைப் பின்னாலே நாம் விவரமாகக் காணலாம்.

பாண்டவர்கள், கிருபர், சல்லியன் முதலான பெரியோர்களையும், நாடிச் சென்று, அவர்களின் நல்லாசியைக் கோரிப் பெறுகின்றனர்.

வில்லுக்கு விதுரர் என்று போற்றப்பட்ட பாண்டவர்களின் சிறிய தந்தை, ஏற்கனவே கூறியபடி துரியோதனனிடம் கோபம் கொண்டு, தம்விட்டுணு வில்லையும் உடைத்தெறிந்து விட்டுப் போரில் எந்தவொரு அணியிலும் சேராமல் தீர்த்தயாத்திரைக்குப் புறப்பட்டுப் போய் விட்டிருந்தார். அவருடன் தீர்த்த யாத்திரையில் கண்ணபெருமானின் தமையனார் பலராமரும் இணைந்து கொண்டார்.

பலராமரையும் யாதவ சேனைகள் அனைத்தையும் துரியோதனன் வேண்ட, அவனுக்குச் சகாயம் ஆக்கி யிருந்தார் கண்ணபெருமான். ஆனால் தம்பி கண்ணனுக்கு எதிராக நின்று போரிடச் சற்றும் விருப்பம் கொள்ளதவராகிய பலராமர், தம்முடைய யாதவ சேனைகள் அனைத்தையும் துரியோதனனுக்குத் துணையாக்கி விட்டு விதுரருடன் தீர்த்தயாத்திரைக்குப் புறப்பட்டுப் போய் விட்டிருந்தார்.

மற்ற பெரியோர்கள் அனைவரிடமும் பாண்டவர்கள் நல்லாசிகளைப் பெற்று மீள்கின்றனர். அதன் பிறகு போர் முரசங்கள் முழங்குகின்றன. சங்குகள் ஒலிக்கின்றன. உடனே யுத்தமும் தொடங்குகின்றது.

துரியோதனனின் 11 அக்குரோணி

சேனைகளுடன், பாண்டவர்களின் 7 அக்குரோணி சேனைகள் எதிர்த்துப் போர் செய்யத் தொடங்குகின்றன. பாண்டவர்களின் சேனை மலைபோல் வடிவு அமையும்படி அணி வகுக்கப்பட்டிருக்கிறது. நால்வகைச் சேனை களையும் அசலவியூகமாக வகுத்தால் சிறிய அளவுள்ள சேனையைக் கொண்டே பேரளவுள்ள சேனையை வெல்வது எளிதாகும் என்பதால், பாண்டவரின் சேனை அசலவியூகமாக வகுக்கப் பட்டிருக்கிறது.

பாண்டவர் அணியின் தூசிப்படை, துரியோதனன் அணியின் தூசிப்படையுடன் மோதத் தொடங்குகிறது. இரண்டு அணிகளிலும் இருக்கும் நால்வகைப்படைகளும் மோதிக் கொள்ளப் போர் தொடங்குவதை

**''சென்றுதேர்களும் தேர்களும் சேர்ந்தன**
**வென்றிவேழமும் வேழமும் ஊர்ந்தன**
**நின்றவாசியும் வாசியும் நேர்ந்தன**
**வென்றிவீரரும் வீரரும் மேவினார்''**

- முதற்போர்ச் சருக்கம், 20

**''பாரவாளமும் வாளமும் பாய்ந்தன**
**கூரவேல்களும் வேல்களும் குத்தின**
**வீரசாபமும் சாபமும் வீக்கின**
**தூரவாளியும் வாளியும் தோய்ந்தவே''**

- முதற்போர்ச் சருக்கம், 21

என்று வில்லிபுத்தூரார் வருணிக்கத் தொடங்கி மிகச் சிறப்பாகப் பாரதப் போரை வர்ணித்துச் செல்கின்றார்.

இருதிறத்து அணிகளிலும் இணையில்லா வீரம் படைத்தவர்கள் மோதுகின்றனர். வெற்றி அல்லது வீரமரணம் என்ற ஒரே முடிவில் போருக்கு வந்திருக்கும் வீரர்கள் உயிரைத் துச்சமென மதித்து ஆற்றிடும் இந்த போரைக் காண ஒவ்வொருவருக்கும் பிரமன் ஆயிரம் கண்களையாவது கொடுத்திருத்தல் வேண்டும்.

இதோ இங்கே ஒரு வீரன் தான் கொண்டு வந்திருக்கும் அம்புகள் யாவும் தீர்ந்து போன நிலையில் என்ன செய்கிறான் பாருங்கள்! பகைவர் எய்ததனால் மேனியில் பாய்ந்திருக்கும் அம்புகள் இருக்கின்றனவே என்று அவற்றை ஆர்வமுடன் உதிரம் கொட்டக் கொட்ட தன்னுடலிலிருந்து ஒவ்வொன்றாகப் பறித்தெடுத்து தன் வில்லில் பூட்டி எதிரிகள் மேல் தொடுக்கிறான்.

இங்கே இன்னும் ஒரு வீரன் தன் வலக்கையை எதிரிகள் வெட்டி வீழ்த்தி விட்ட நிலையிலும் சற்றும் கலக்கம் கொள்ளாமல் பற்களினால் அம்புகளை எடுத்தெடுத்து வில்லில் பூட்டி இடது கையால் எதிரிகள் மேல் அம்பு செலுத்துகின்ற இந்த வீரக் காட்சியைப் பார்த்தால் நமக்கு மெய் சிலிர்க்கிறது.

இதோ இங்கே இருவீரர்கள் எதிர் எதிர் நின்று வாள் கொண்டு பொருகின்ற ஒப்பற்ற காட்சியைப் பாருங்கள். ஆஹா! இதோ ஒரு வீரனின் தலையைச் சீவுகின்ற அதே நேரத்தில் தலையற்ற முண்டமாகத் தரையில் சாய்வதற்கு முன்னம், வீழ்த்தியவனின் தலையைத் தானும் வெட்டி வீழ்த்தி இருவருமாக ஒருசேரசாய்கின்ற ஒப்பற்ற காட்சி.

இரு அணியிலும் உள்ள வீரர்கள் இவ்வாறு வீரம் காட்டிப் போரிடும் நேரத்தில் கௌரவ சேனையின் தளபதியான வீடுமரும், அர்ச்சுனனும் நேருக்கு நேர் நின்று மோதுகின்றார்கள். அர்ச்சுனனின் காண்டீபத்திற்கு ஆற்றாது, வீடுமரும் பின்னடைய, துரியோதனனின் கட்டளையால் வீடுமருக்கு உதவியாக சகுனியும், சல்லியனும் துரியோதனனின் தம்பிகள் சிலரும் வந்து அர்ச்சுனன்மேல் அம்புகளைத் தொடுக்கின்றனர்.

அர்ச்சுனனுக்குத் துணையாக வீரவீமனும், வீர அபிமன்யுவும் வந்து சேர்ந்து கொள்ள வீடுமரின் மார்புக் கவசத்தின் மேல், வீமன் விடும் ஒன்பது பாணங்கள் சீறிச் செல்கின்றன. சகுனி, சல்லியன் மற்றும் துரியோதனன் தம்பிமார்களையும் அஞ்சி ஓடச் செய்கின்றன வீமனின் வில்லிலிருந்து சீறி வரும் அம்புகள்.

அபிமன்யு, தான் தொடுத்த அம்புகளால் வீடுமரின் தேர்க்குதிரைகள் நான்கையும் எமனுலகிற்கு அனுப்பி வைத்து ஆரவாரம் செய்கின்றான். விராட மன்னனின் வீரமைந்தன் உத்தரன், சல்லியன் மீது அம்பு மழையைப் பொழிகின்றான். உத்தரன் விடும் அம்புகள் சல்லியன் தேர்க்குதிரைகளையும், தேர்ப் பாகனையும் சாகடிக்க, சல்லியன் உத்தரனின் வீரத்திற்காற்றாமல் தடுமாறுகிறான். அடுத்து உத்தரன் விடும் அம்புகள் சல்லியன் உயிரைக் குடிக்கச் சீறிவரும் வேளையில் சட்டென ஒதுங்கிக் கொண்டு சல்லியன், தான் ஒருவேலை எடுத்து உத்தரன்மேல் வீசுகிறான். அந்தவேல் உத்தரன் மார்பைத் துளைத்து அவன் உயிரையும் குடித்து விடுகிறது.

(தொடரும்)

## பென்சில் பேனா கடைகள்



கூத்தனூரில் விஜயதசமியின் போது அர்ச்சனைப் பொருட்கள் விற்கும் கடைகள் போல், பென்சில், பேனா, பாடப்புத்தகங்கள் விற்கும் கடைகள் பல தோன்றியிருப்பதை ஆலய முகப்பில் காணலாம்.

குழந்தைகள் அன்று பேனா, பென்சில், பாடப் புத்தகங்கள் வாங்கிப் பயன்படுத்தினால் நல்ல கல்வி ஞானம் உண்டாகும் என்பது இங்குள்ள ஐதீகமாகும்.



# அடியார் தரிசனம் தரும் பலன்

(நீதிக்கதை) அருள்செல்வி

ஒரு முறை நாரத முனிவர் திருமாலைத் தொழுது வணங்கி அடியார்தரிசனத்தால் ஒருவர் பெறக்கூடிய பலன் எத்தகையது என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இதற்கான பதிலைத் திருமால் நாரத முனிவரிடம் நேரிடையாகக் கூறவில்லை.

''முனிவரே ! பூலோகத்தில் நான் சொல்லும் இடத்தில் உள்ள குப்பைமேட்டிற்குச் செல்லுங்கள். அதில் ஒரு சாணிப்புழு நெளிந்து கொண்டு இருக்கும். அதனிடம் உங்கள் கேள்வியைக் கேளுங்கள்'' என்று கூறி அனுப்பினார்.

திருமால் அறிவுறுத்தியவாறே அவர் கூறிய குப்பைமேட்டை அடைந்தார் நாரதர். அங்கு ஒரு சாணிப்புழு நெளிந்து கொண்டு இருந்தது.

அதன் அருகில் சென்ற நாரதர் ''அடியார் தரிசனத்தால் உண்டாகும் பலன் யாது?'' என்று கேட்டார்.

நாரதர் கேள்வியைக் கேட்டதோ இல்லையோ நெளிந்து கொண்டிருந்த புழு, நொடியில் இறந்து போய்விட்டது.

மிகவும் கவலை கொண்ட நாரதர் மறுபடியும் திருமாலிடம் சென்று நடந்ததைக் கூறினார்.

அதைக் கேட்டுத் திருமால் ''நாரதரே ! இப்போது நீங்கள் பூவுலகில் வடக்குத் திசையில் நான் கூறும் இடத்திற்குச் செல்லவும். அங்கே ஒரு கோயில் இருக்கும். அதன் கோபுரத்தில் ஒரு புறா இருக்கும். அதனிடம் உங்கள் கேள்வியைக் கேளுங்கள்'' என்று கூறினார்.

நாரதர் மீண்டும் பூலோகம் வந்தார். திருமால் குறிப்பிட்ட வடக்குத் திசையில் இருந்த கோயிலுக்குச் சென்று கோபுரத்தில் இருந்த புறாவைப் பார்த்தார்.

''புறாவே ! அடியார் தரிசனத்தால் உண்டாகும் பலன் என்ன என்பதை எனக்கும் கூறு'' என்று கேட்டார்.

நாரதர் கேட்ட கேள்வியைக் கேட்டதோ இல்லையோ அந்தப்புறாவும் படபடவென்று இறக்கையை அடித்துக் கொண்டு நாரதர் காலில் விழுந்து உயிரை உடனே விட்டு விட்டது.

நாரதர் கொண்ட அதிர்ச்சிக்கு அளவே இல்லை. ''இதென்ன கொடுமை ! புறாவும் மடிந்து விட்டதே !'' என்று மனம் கலங்கிய நாரதர் மீண்டும் திருமாலிடம் சென்று நிகழ்ந்ததைக் கூறி வருந்தினார்.



திருமால் ஒன்றும் வருத்தப்படவில்லை. ''அப்படியா! மீண்டும் பூவுலகம் சென்று, தெற்குத் திசைக்குச் செல்லுங்கள். அங்கே ஒரு அரண்மனை இருக்கும். அங்குள்ள அரசனுக்கு இன்று ஒரு ஆண் குழந்தை பிறந்துள்ளது. அந்தக் குழந்தையிடம் உங்கள் சந்தேகத்தைக் கேளுங்கள். நிச்சயம் பதில் கிடைக்கும்'' என்று சொல்லி அனுப்பி வைத்தார்.

''நான் போய் இந்தக் கேள்வியைக் கேட்க... அந்தச் சாணிப்புழுவும், புறாவும் உடனே இறந்து போனதைப் போல் அரசகுமாரனும் இறந்து போக நேரிட்டால்?'' என்று அச்சமுற்றவாறு வினவினார் நாரதர்.

''அப்படி ஒன்றும் நடக்காது... தைரியமாகப் போய்க் கேளுங்கள்'' என்று அனுப்பி வைத்தார் திருமால்.

திருமால் சொல்லைத் தட்ட முடியாமல் நாரதர் பூலோகம் வந்து அவர் கூறிய அரண்மனையை அடைந்தார். தொட்டிலில் அன்று பிறந்த அரசகுமாரன் கால்களை உதைத்தவாறு படுத்திருக்க, நாரதர் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு ''குழந்தாய் ! அடியார் தரிசனத்தால உண்டாகும் பலனைக் கூறவும்'' என்று கேட்டார்.


நாரதர் கேள்வி இம்முறை குழந்தைக்கு ஏதும் துன்பம் உண்டாக்கவில்லை.

மாறாக, அக்குழந்தை ஒரு தேவனாக மாறி நாரத முனிவரை விழுந்து வணங்கி நின்றது.

தேவனாக மாறிய குழந்தை ''நாரதப் பெருமானே! அடியேன் உங்கள் கேள்வியால் அடைந்த நிலைதான் இது. குப்பை மேட்டில் சாணிப்புழுவாக நெளிந்தவன் நானே ! தங்கள் தரிசனத்தால் புறாவாகப் பிறந்தேன். புறாவாக இருந்தபோது உங்கள் தரிசனம் மீண்டும் கிடைக்கப் பெற்று அரசகுமாரனாகப் பிறந்தேன். தற்போது உங்கள் தரிசன பாக்கியத்தால் தேவனாகும் பாக்கியம் பெற்றேன். அடியார் தரிசனம் எத்தகைய அற்புதப் பலன்களை நல்கும் என்பதற்குத் தங்கள் தரிசனத்தால் நான் பெற்ற பாக்கியமே சான்றாகும்'' என்று கூறிய அத்தேவன், தேவலோகத்தை நோக்கிப் பறந்து சென்றான்.

**நீதி :**

**அடியார்களை வணங்கி வழிபட்டால்**
**அரிய பல பாக்கியங்கள் பெற்று**
**அமர நிலை பெறலாம்.**



# திங்கள் முடியார் இனிதமரும் திருவோத்தூர்

கி. ஸ்ரீதரன், பதிவு அலுவலர், தொல்லியல்துறை, சென்னை - 8.

தொண்டை நாட்டுப் பாடல் பெற்ற தலங்களில் (32) எட்டாவது தலமாக செய்யாறு-திருவோத்தூர் வேதபுரீசுவரர் கோயில் விளங்குகிறது. மூர்த்தி - தலம் - தீர்த்தம் என்ற மூன்று சிறப்புகளையும் உடையது. இவ்வூர் செய்யாறு, திருவத்திபுரம், திருவத்தூர், வேதபுரி, சுருதிபுரி என்று பல்வேறு பெயர்களிலும் அழைக்கப்படுகின்றது.

சிவபெருமான் தேவர்களுக்கு வேதத்திற்கு பொருள் சொன்ன (ஓத்து என்றால் வேதம் என்பது பொருள்) சிறப்பிடம் - திருவோத்தூர் என்று போற்றப் படுகிறது. இத்தலம் சேயாற்றின் கரையில் அமைந்துள்ளது. காஞ்சிபுரத்திலிருந்து சுமார் 30 கி.மீ. தொலைவில் இத்தலம் அமைந்துள்ளது. மேலும் ஆரணி, வந்தவாசி ஊர்களிலிருந்தும் இத்தலத்திற்கு வரலாம்.

இத்தலத்தில் இறைவன் வேதபுரீசுவரர் என்றும், இறைவி பாலகுஜாம்பிகை என்றும் திருப்பெயர் கொண்டு அருள் பாலிக்கின்றனர். ஆனால் கல்வெட்டுகளில் இறைவர் திருவோத்தூர் உடையார், திருவோத்தூர் மகாதேவர், திருவோத்தூர் ஆளுடைய நாயனார் என்றும், இறைவி இளமுலை நாயகி என்றும் குறிக்கப் படுகின்றனர். ஞானசம்பந்தரின் தேவாரப் திருப்பதிகப் பாடலிலும் இறைவி 'இளமுலை நாயகி' என்றே குறிக்கப்படுவதைக் காணலாம்.

சைவ சமய வரலாற்றில் இக்கோயில் சிறப்பிடம் பெற்று விளங்குகிறது. திருஞான சம்பந்தர் பெருமான் திருவண்ணாமலை திருக்கோயிலை வழிபட்டு திருவோத்தூர் வந்தார். இறைவனை வழிபட்டார். ஒரு அடியார் வருத்தமாக வந்து முறையிட்டார். ''இறைவனுக்காக வைத்த பனைகளெல்லாம் ஆண் பனையாய் ஆயின. உமது இறைவன் அருளால் காய்க்கும்படி செய்யுமே என்று சமணர்கள் ஏளனம் செய்கின்றனர்''. நீங்கள் தான் அருள் புரிய வேண்டும் என வேண்டினார். வேதபுரீசுவரரை துதித்து ஞானசம்பந்தர் பெருமான்,

''பூத்தேர்ந்தாயன கொணடு நின் பொன்னடி
ஏத்தாரில்லை யெண்ணுங்கால்
ஓத்தூர் மேய வொளி மழுவாளங்கைக்
கூத்திரும்ம குணங்களே''

- என்று துவங்கி

''குரும்பை யாண்பனை யீன் குலை யோத்தூர்
அரும்பு கொன்றை யடிகளைப்
பெரும்புகலியுண் ஞானசம்பந்தன் சொல்
விரும்புவார் வினை வீடே''.

என்று பதிகம் பாடினார். ஆண் பனைகளெல்லாம் பெண் பனைகளாகிக் குலை தள்ளிய அற்புதம் நடந்த தலம் இது. இந்நிகழ்ச்சியைச் சித்தரிக்கும் விதத்தில் கற்சிற்பமும் இக்கோயிலில் வழிபாட்டில் உள்ளது. இத்தலத்தின் தலவிருட்சமாகப் பனைமரம் விளங்குகிறது.

மேற்கண்ட நிகழ்ச்சியைச் சேக்கிழார் பெருமான் இயற்றிய பெரிய புராணமும் எடுத்துக் கூறுகிறது.

''விரும்பு மேன்மைத் திருக்கடைக்காப் பதனில் விமலர் அருளாலே
'குரும்பை ஆண்பனை ஈனும் என்னும் வாய்மை குலவுதலால்
நெருங்கும் ஏற்றுப் பனையெல்லாம் நிறைந்த குலைகளாய்க் குரும்பை
அரும்பு பெண்ணையாகியிடக் கண்டோ ரெல்லாம் அதிசயித்தார்''

- பெரியபுராணம்

*'பாட்டுக்குக் காய்த்த பனைமரத்தாலே'* புகழ் பெற்றது இத்தலம்! இதே நிகழ்ச்சியினை அருணகிரிநாதர் பெருமான் தமது திருப்புகழில் **''பவமாய்த்தாணது வாகும் பனைகாய்த்தே மணநாறும் பழமாய்ப் பார்மிசைவீழும்''** என்று போற்றுகின்றார்.

கருணாகரக் கவிராயர் இயற்றிய திருவோத்தூர் புராணமும் இத்தலத்தின் பெருமைகளை எடுத்துக் கூறுகிறது.

திருநாவுக்கரசர் பெருமானும் இத்தலத்திற்கு வந்து இறைவனைப் போற்றியிருப்பது பெரிய புராணத்தால் அறியமுடிகிறது.

''செக்கர்ச் சடையார் திருவோத்தூர்த்தேவர்



இறைவன் வேதபுரீசுவரர்

"பிரானார் தங்கோயில்
புக்கு வலங்கொண்டதிர் இறைஞ்சிப்
போற்றிக் கண்கள் புனல் பொழிய
முக்கட் பிரானை விரும்பு மொழித்
திருத்தாண்டகங்கள் முதலாகத்
தக்க மொழி மாலைகள் சார்த்திச் சார்ந்து
பணி செய்தொழுகுவார்''

என்று பெரியபுராணம் திருநாவுக்கரசர் திருவோத்தூர் வருகையைப் பற்றி எடுத்துக் கூறுகிறது. மேலும் சேத்திரக் கோவையிலும், சாய்க்காடுப் பதிகத்திலும் **''ஒத்தூர் ஒரு நாளும் நீங்கார் போலும்''** என்று போற்றுவதைக் காணலாம். நாவுக்கரசர் பெருமான் பாடிய பதிகங்கள் நமக்கு கிடைக்காமல் போனதில் நமக்கு வருத்தமே!

இத்தலத்தின் சிறப்பினைச் சிவப்பிரகாசசுவாமிகள், சிவஞான சுவாமிகள், அருட்பிரகாசவள்ளலார், வீரபத்திரப் பிள்ளை போன்றோர் பாடியுள்ளனர்.

இனிக் கோயிலுக்குள் செல்வோம்! வாயிலில் ராஜகோபுரம் கம்பீரமாகக் காட்சி தருகிறது. இதனை அடுத்து பலிபீடம், நந்தி, கொடிமரம் உள்ளன. நந்தியெம்பெருமான் இறைவனை நோக்கி இல்லாமல், கோயில் வாயிலை நோக்கி யிருப்பது சிறப்பானது. இறைவன் ஆணையால் தொண்டைமான் என்ற மன்னனுக்கு உதவி செய்வதற்காக இவ்வாறு நந்தி அமர்ந்துள்ளதாகப் புராணக் கதை கூறப்படுகிறது. இதனை அடுத்து இரண்டாவது கோபுரம் உள்ளது. இக்கோபுரத்தில் அழகிய சுதை உருவங்கள், தல வரலாறு ஆகியவை காணப்படுகின்றன.



இறைவி பாலகுஜாம்

கோபுரத்தினுள் நுழைந்து வருவோமானால் இத்தலத்தில் நிகழ்ந்த பனைமரம் காய்த்த நிகழ்ச்சி கற்சிற்பமாகக் காணப்படுகிறது. ஞானசம்பந்தர் பெருமான் நிற்க சிவலிங்கமும் மரத்தின் கீழ் காணப்படுகிறது. இதன் எதிரே அம்மன் சன்னதி உள்ளது. தொடர்ந்து திருச்சுற்றில் கேசவப் பெருமாள் கோயில், சிதம்பரேசுவ்ரர் சன்னதி மற்றும் பஞ்சபூதத் தலங்களைக் குறிக்கும் திருவானைக்கா, திருக்காளத்தி, திருவண்ணாமலை, திருஏகம்பன் சன்னதிகளும் உள்ளன. வடமேற்கு மூலையில் தலவிருட்சமாக விளங்கும் பனைமரங்கள் உள்ளன.

இறைவன் சன்னதிக்குச் செல்கிறோம். நிருத்த மண்டபத்திலும், நர்த்தன விநாயகர், அற்புத வடிவமாகக் காட்சி தரும் நாகலிங்கம், பைரவர் ஆகிய வடிவங்களை வழிபட்டுச் செல்கிறோம். கருவறையில் கருணையே வடிவான வேதபுரீசுவரர் சிவலிங்க வடிவிலே காட்சி தருகிறார்.

இக்கோயிலில் 70க்கும் மேற்பட்ட கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. சோழர்,

# பாம்பாட்டியாக வந்த பரமன்

மதுரையில் அனல், புனல் வாதம் செய்து சமணர்களை வென்ற திருஞானசம்பந்தர், செய்யாறு எனப்படும் சேயாற்றிற்கு வந்தபோது சமணர்கள் ஒரு வேள்வி செய்து, திருமடத்தில் தங்கியிருந்த திருஞானசம்பந்தர் மேல் ஏவினர்.

அது உணர்ந்த திருஞானசம்பந்தர் பாம்பைப் சமணர்கள் மனைக்கே செல்லுமாறு ஆணை பிறப்பித்தார். சேயாற்று அரசன் அதுவறிந்து திருஞானசம்பந்தரைப் பணிந்து தன்னை மன்னிக்குமாறு வேண்டினான்.




திருஞானசம்பந்தரும் அரசனை மன்னிக்குமாறு வேண்டி,

''தோட்டீரே! துத்தி ஐந்தலை நாகத்தை
ஆட்டீரே! அடியார்வினை
ஒட்டீரே! உம்மை ஏத்தும் ஒத்தூர்
நாட்டீரே! அருள் நல்குமே''

என்று பாட, இறைவனும் மகுடி ஏந்திப் பாம்பாட்டியாக வந்து அதைப் பிடித்துக் கொண்டு கோயிலுக்குச் சென்று மறைந்தார்.

ஆதாரம் : தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் அவர்களின் ''வேங்கடம் முதல் குமரி வரை பாலாற்றின் மருங்கிலே'' என்ற நூல்.



பாண்டியர், கோப்பெருஞ் சிங்கன், தெலுங்கு சோழர்கள், சம்புவராயர், விஜய நகர மன்னர்கள் ஆகியோர் இக்கோயிலுக்கு பெருந்தொண்டு செய்துள்ளனர் என்பதை அறிகிறோம். இக்கோயிலில் விளக்கு எரிக்கவும், திருவிழாக்கள் நடத்தவும், கோயிலில் திருப்பணி நடைபெறவும் பலரும் அளித்த நன்கொடைகளைக் கல்வெட்டுக்கள் கூறும் செய்திகளால் அறிய முடிகிறது.

முற்காலச் சோழர்காலக் கல்வெட்டுக்கள் சிதம்பரேசுவரர் கோயிலில் காணப்படுகிறது. சோழப் பேரரசி செம்பியன் மாதேவியின் மருமகளும், உத்தம சோழனின் தேவியரான ஆரூரன் அம்பலத்தடிகள் என்பாள் விளக்கு எரிக்க 25கழஞ்சு பொன்தானமளித்தார்.

இங்கிருந்த நந்தவனம் 'தப்பாமொழி திருநந்தவனம்' எனப் பெயரிட்டு அழைக்கப் பட்டதையும் அறிய முடிகிறது. இங்கிருந்து கோயிலுக்கு நாள்தோறும் மலர் பூஜைக்காக அளிக்கப்பட்டது.

கல்வெட்டுகளில் 'ஜெயங் கொண்ட சோழமண்டலத்துக் காலியூர் கோட்டத்துக் காழியூர் நாட்டு திருவோத்தூர் உடையார்' என்றே இக்கோயில் குறிக்கப் படுகிறது. பாண்டிய மன்னன் வீரபாண்டியன் ஆட்சிக்காலத்தில் குலசேகரச் சம்புவராயன் என்பவன் இறைவன் முன்பு நாள்தோறும் ஐந்துபேர் வேதம் ஓதுவதற்காக நிலம் அளிக்கப்பட்டது.


மேலும் விஜய நகர மன்னர் ஹரிஹரன் காலத்தில் இக்கோயிலில் ரிக்வேதம் ஓதுவதற்காக தானம் அளிக்கப்பட்டதையும் அறிகிறோம். இறைவனே வேதத்திற்கு பொருள் உரைத்த இத்தலத்தில், நாள்தோறும் வேதம் ஓத தானமளிக்கப்பட்ட வரலாற்றுச் செய்தி நம்மை வியக்க வைக்கிறது. இக்கோயிலின் மதில் சுவரில் காணப்படும் பல்லக்கில் வருகின்ற ஞானசம்பந்தர் வடிவமும், இக்கோயிலை வழிபாடு செய்ய பல்லக்கில் வருகின்ற கோனேரிராயனின் சிற்பமும் இக்கோயிலுக்கு மேலும் பெருமை சேர்க்கிறது.

இறைவன் கருணையால் அடியாரின் குறை நீங்கப் பெற்ற அற்புதத்தலமாக திருவோத்தூர் திருக்கோயில் விளங்குகிறது. இத்தலத்திற்கு நாமும் சென்று வழிபட்டு நலமடைவோம்!

## காந்தியடிகளைக் கவர்ந்த தமிழ் நூலும், பாடலும்

தேசப்பிதா அண்ணல் காந்தியடிகள் மிகவும் விரும்பிய தமிழ் நூல் குமரகுருபரர் அருளிச்செய்துள்ள ''நீதிநெறி விளக்கம்'' எனும் நூல் ஆகும்.

''நீரிற் குமிழி இளமை'' என்ற பாடல் தொடர்களைத் தமிழ் எழுத்துக்களிலேயே எழுதித் தமிழில் ''மோ.க.காந்தி'' என்று காந்தியடிகள் கையொப்பமிட்ட செய்தியைக் காந்தியடிகளின் தென்னாப்பிரிக்க வரலாற்றால் அறியலாம்.



''தன்னைக் காட்டிலும் ஏழைகளைப் பார்த்துத் தன் செல்வம் மிகப் பெரியது என்று மகிழ்ச்சியடைய வேண்டும். தன்னைக் காட்டிலும் கற்றவர்களைப் பார்த்துத் தான் கற்றது அற்ப அளவானது என்று உணர்ந்து மேலும் கற்க வேண்டும்'' என்ற பொருளமைந்த


''தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரிதென் றகம்மகிழ்க - தம்மினும்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றவெல்லாம்
எற்றே இவர்க்கு நாம் என்று''

என்ற பாடல் காந்தியடிகளின் உள்ளத்தைக் கவர்ந்த பாடல் ஆகும்.

**ஆதாரம் :** குமரகுருபரர் 300வது ஆண்டு விழா மலர், ஸ்ரீவைகுணடம்.

# ஐப்பசியில் ஏன் அன்னாபிஷேகம்?

பேராசிரியர் முனைவர் டி. செல்வராஜ்



சிவ ஆலயங்கள் அனைத்திலும் ஐப்பசி மாதம் பௌர்ணமி நாளன்று அன்ன அபிடேகம் மிகவும் சிறப்பாக நடைபெறுகிறது.

கார் காலத் தொடக்கமான ஆவணி மாதத்தில் மழை பெய்யத் தொடங்குகிறது.

புரட்டாசி மாதத்தில் பொன்னுருக வெய்யில் காயும்; அல்லது மண்ணுருக மழை பெய்யும்.

தொடர்ந்து ஐப்பசி மாதம் அடைமழை பொழிவதுண்டு.

கார்த்திகைக்குப் பிறகு மழை இல்லை; கர்ணனுக்குப் பிறகு கொடை இல்லை என்பர்.

பொதுவாக, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி மாதங்களில் மழை பெய்கிறது எனலாம்.

மிக மிகுதியாகவோ, மிகக் குறைவாகவோ மழை பெய்யாமல், பயிர்கள் விளைவதற்குப் போதுமான அளவு பெய்தவுடன் உழவர்கள் நெல் முதலியவற்றைப் பயிரிடத் தொடங்குகின்றனர்.

இதுவரையில் மழை பெய்ய அருளியதற்காகவும், இனிமேல் பயிர்கள் செழித்து வளர அருளுவதற்காகவும், ஐப்பசி மாதத்தில் இறைவனைச் சிறப்பாக வழிபடுவது மிகப் பொருத்தமே. இந்த வகையில் அன்ன அபிடேகம் நிகழ்கின்ற ஐப்பசி மாதம் ஒரு தனித்த சிறப்பைப் பெருமையுடன் பெறுகிறது.

பழங்காலத் தமிழர்கள் அமாவாசைநாளையும், பௌர்ணமி நாளையும் உவா அல்லது உவவு நாள்கள் என்று போற்றினர்.

உவா, உவவு = உவகை, மகிழ்ச்சி. இந்த இரு நாள்களிலும் அவர்கள் எந்தப் பணிக்கும் செல்ல மாட்டார்கள். தத்தம் குடும்பத்தாருடன் அவர்கள் உண்டு உவந்தனர்; களித்தனர். மன அமைதியுடனும், மகிழ்ச்சியுடனும் அந்த இரு நாள்களைக் கழித்தனர்.

மன அமைதியும், மகிழ்ச்சியும் இறை வழிபாட்டிற்குரிய இரட்டைத்தூண்கள் ஆகும்.

ஆகவே, அவர்கள் அமாவாசைநாள்களில் பிதிரர்களை வணங்கினர்.

பௌர்ணமி நாளில் அவர்கள் விரும்பிய பல தெய்வங்களை வழிபட்டனர்.

பௌர்ணமி நாளன்று நிறை நிலா நிறைவான கலைகளுடன் பொலிகின்றது. அதில் அமுதமுண்டு. அது பயிர்களின் வளர்ச்சிக்கு மிகவும் தேவை.

பிறை நிலா இறைவனது திருமுடியை அணி செய்கிறது. இது அடைக்கலத்தின் அறிகுறி.

இவற்றால் ஐப்பசி மாதப் பௌர்ணமி நாள் சிவ வழிபாட்டிற்கு மிகவும் பொருத்தமான நாள் என்பது தெளிவாகப் புலனாகிறது.

தெய்வங்களுக்குப் பால், தயிர், நெய், பழவகைகள், பஞ்சாமிர்தம் முதலிய பல சிறந்த பொருள்களால் அபிடேகம் செய்கின்றனர். அபிடேகப் பொருள்களில் அன்னமும் ஒன்று.

அன்னம் அபிடேகப் பொருளாகவும், படையல் பொருளாகவும் விளங்குகிறது.

சுத்த அன்னம், பொங்கல், தயிரன்னம், எலுமிச்சம் பழ அன்னம், எள் அன்னம், சர்க்கரைப் பொங்கல், கூழ் முதலிய அன்னத்தின் வகைகள் பலவற்றைப் பல கோயில்களில், பல தெய்வங்களுக்குத் தினமும் படைக்கின்றனர்.

ஆனால், சுத்த அன்னம் மட்டும் பெரும்பாலும் அபிடேகத்திற்குப் பயன்படுகிறது. மற்றும், அன்னத்தால் தெய்வங்களுக்குத் தினமும் அபிடேகம் செய்வதில்லை.

அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலத்தில் (திருநாவுக்கரசர், தேவாரம், பாலிக்கும் = அருளும்) ஸ்படிக லிங்கத்திற்குத் தினமும் அன்ன அபிடேகம் நடைபெறுகிறது. இது மரபு வழி நடைபெறுகின்ற அபிடேகமாம்.

ஐப்பசி மாதப் பௌர்ணமியில் நிகழ்கின்ற அன்ன அபிடேகம் சிவபெருமான் ஒருவனுக்கே சிறப்பாக உரியது. ஒரு திருவிழாவுக்கு நிகராக நடைபெறுகின்ற இச்சிறப்பு வழிபாடு எப்போது தோன்றியது என்று துல்லியமாகக் கணித்துக் கூற முடியாது.

திருஞான சம்பந்த சுவாமிகள் திருமயிலை பூம்பாவைப் பதிகத்தில், கபாலீச்சுரத்தில் ஒவ்வொரு மாதமும் நிகழ்ந்த திருவிழாக்களை ஒவ்வொரு பாடலிலும் சுட்டினார். அப்போது ஐப்பசி மாதத் திருவோண விழாவைக் குறித்தார். அன்ன அபிடேகத்தைக் குறிக்கவில்லை. எனவே, இச்சிறப்பு வழிபாடு அவர் காலத்தில் நடைமுறையில் இல்லை என்றும், இது ஏறக்குறைய முந்நூறு ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது என்றும் கருதலாம்.

அன்ன அபிடேகத்தின் போது சிவலிங்கத் திருமேனி முழுவதும் அடங்கும்படியாக அன்னத்தை ஒரு வெள்ளைப்பட்டுப் போர்வையைப் போலச்சார்த்துகின்றனர்.

அப்போது, கரிய சிவலிங்கத்திருமேனி, அன்னப் போர்வையால், தூய வெள்ளைத் திருமேனியாகத் திருக்காட்சியளிப்பது ஒரு புதிய அரிய - சிறப்பான - வேறுபட்ட தரிசனமே. மேலும், வெள்ளைச் சிவலிங்கத்தை ஐப்பசிப் பௌர்ணமியில் தரிசிப்பதும் பொருத்தமே.

தொடர்ந்து, சிறப்பு அர்ச்சனைகளும், தீப ஆராதனைகளும் நிறைவேறுகின்றன.

அடுத்து, அன்னத்தைப் பிரித்தெடுத்துப் பக்தர்கள் அனைவருக்கும் மகாப் பிரசாதமாக வழங்குகின்றனர்.

சிவலிங்கத்திற்கு அன்னத்தால் அபிடேகம் செய்யச் சிற்சில காரணங்கள் இருக்கின்றன. அவை வருமாறு:-

1. சிவன் அபிடேகப்பிரியன். அன்னத்தால் அவனுக்கு அபிடேகம் செய்வது உச்சநிலைச் சிறப்புடையதாகும்.

2. பக்தர்கள், இறைவன் தமக்கு எந்தெந்தப் பொருள்களை அருள வேண்டும் என்று கருதுகின்றார்களோ அந்தந்தப் பொருள்களைக் காணிக்கைப் பொருள்களாகச் செலுத்துகின்றனர். அபிடேகப் பொருள்களாக அளிக்கின்றனர். படையற்பொருள்களாகப் படைக்கின்றனர்.

பக்தர்கள் செலுத்தும் காணிக்கைப் பொருள்களில் மிக முக்கியமானது நெல். மேலும், அன்னத்தால் அபிடேகம் செய்து அன்ன வகைகளைப் படைக்கின்றனர். ஆகவே, இறைவனது பேரருளால் வீடுகளிலெல்லாம், ஊர்களிலெல்லாம், நாடுகளிலெல்லாம் அன்னம் நிறைந்து, வழிந்து பொலியும் என்று நம்புகின்றனர்.

3. பக்தர்கள் சிலர் கொடுத்த காணிக்கைப் பொருள்களைக் கொண்டு அன்ன அபிடேகம் நடத்தப்படுகிறது. அப்போது ஊர் மக்கள் அனைவரும் ஒருங்கே திரண்டு, பக்திப் பரவசத்துடன் வழிபாட்டில் ஈடுபட்டு, முடிவில் அபிடேக அன்னப்பிரசாதத்தை ஏற்றும், ஏந்தியும், உண்டும் அளப்பருங்களிப்பினை அடைகின்றனர்.

4. அறுவடையாகும் புது நெல்லைச் சிவனுக்கு முதலில் அர்ப்பணம் செய்வதைப் போல அவனுக்கு அன்ன அபிடேகம் நடைபெறுகிறது.

அன்ன அபிடேகத்தில் பொதிந்துள்ள உட்பொருள்கள் வருமாறு:-

1. சிவன் பரம்பொருள். அவனது பிரதிபிம்பம் எல்லா உயிர்களிலும் பதிந்து உள்ளது. அபிடேக அன்னப் போர்வையால் சிவலிங்கத் திருமேனியின் அகமும், புறமும் குளிரும் போது, உயிர்களும் அவனது பேரருட்கவசத்தால் குளிர்வது இயற்கையே.

2. ஆகாயத்தில் பிறந்த காற்றின் துணையுடன் தீ எரிகிறது. நிலத்தில் விளைந்த அரிசி, நீரில் மூழ்கி, அந்தத் தீயால் வெந்து அன்னமாகிறது. எனவே, அன்னம் என்பது ஐம்பெரும் பூதங்களின் சேர்க்கையாம்; குறியீடாம்.

அன்னம் அபிடேக நிலையில் ஆண்டவனை முழுவதும் தழுவி; அவனைத் தன்னுள் அகப்படுத்தி, அவனிடம் அடைக்கலமாகிறது. இதன் மூலம் ஐம்பெரும் பூதங்களும் ஆண்டவனிடம் அடைக்கலம் என்பதும், அவற்றின் உள்ளிருந்து இயக்கும் ஆண்டவனே பரம்பொருள் என்பதும் தெள்ளத் தெளிவாகத் தெரிகின்றன.



## நவராத்திரியில் கிருஷ்ணருக்குப் புடவை

உடுப்பி கிருஷ்ணருக்கு நவராத்திரியில் ஒன்பது நாட்களும் புடவை உடுத்தி அலங்காரம் செய்கின்றனர்.

## வெளிநாடுகளிலும் நவராத்திரி

திபெத் மக்கள் சரஸ்வதிதேவியை வழிபடுகிறார்கள். அங்கு சரஸ்வதியின் பெயர் 'யங்சன்ம' என்பதாகும்.




பாலித்தீவு மக்கள் தமிழ்நாட்டில் வழிபடுவதைப் போலவே புத்தகங்களை அடுக்கிப் பூஜை செய்வார்கள். அங்கு சரஸ்வதிக்குக் 'கலுங்கன்' என்று பெயர்.


# கணினி, கணிதப் படிப்பை மேலோங்கச் செய்யும் மேலப்பரங்கிரி மல்லிகார்ச்சுனர் ஆலயம்

வீ.கே. தங்கராசு, மேலப்பரங்கிரி

பூஜ்யம் என்பது பார்க்க சாதாரணமாகத் தோன்றும். ஆனால் அதன் சக்தி மிகப் பெரியது. தன்னோடு இணையும் எண்களின் மதிப்பை அதிகரிக்கும் அற்புதம் வாய்ந்தது. நவீன கம்ப்யூட்டரிலும் கூட 0 மற்றும் 1 இவற்றை அடிப்படையாகக் கொண்டே அனைத்துச் செயல்பாடுகளும் அமையும் என்பர். புண்ணியம் மிகுந்த ஆன்றோர்களையும் பூஜ்யஸ்ரீ எனும் அடைமொழியால் போற்றுவர்.



மலைக்கோயில் மல்லிகார்ஜுனர்



ஆம். பூஜ்யத்தைப் போன்றே தன்னை நாடி வரும் பக்தர்களுக்கு மதிப்பை, மகிமைகளைத் தரும் மல்லிகார்ஜுனர் அருளும் - பேரையூர் மேலப் பரங்கிரி மலைக்கோயில்தான் இங்கு நாம் காணப் போகும் ஆலயம்ஆகும்.

மதுரை டி. கல்லுப்பட்டி அருகேயுள்ளது பேரையூர் ஆகும். இத்தலம் கல்லுப்பட்டியில் இருந்து 7 கி.மீட்டர் தொலைவில் உள்ளது. இதனை மொட்டைமலை என்றும்அழைப்பர். ஒரு வட்டமான பாறை மீது இக்கோயில் அமைந்து உள்ளது. பூமியில் பூஜ்ஜியம் போன்ற இடத்தில் இம்மலை அமைந்து இருக்கிறது. இங்கு தான் பூஜ்ஜியம் கண்டு பிடிக்கப் பட்டதாகக் கூறப்படுகிறது.



சப்த கன்னிமார்

இம்மலையில், சிறிய அளவில் ஆனால் அழகுடன் அமையப் பெற்ற கோவிலில் சிவபெருமான் அருள்பாலிக்கிறார். இந்தச் சிவனுக்கு மல்லிகார்ஜுன லிங்கம் என்று பெயர். பஞ்சபாண்டவர்களில் ஒருவனான அர்ஜுனன் வில் வித்தைகளில் கைதேர்ந்தவன். அவன் வைத்த குறி தப்பாது. அது மட்டுமின்றி அர்ஜுனன் விடும் ஒவ்வொரு அம்பும் ஒவ்வொரு வித்தையைக் காட்டும். சில வகை அம்பை எய்தால் அது நெருப்பைக் கக்கும். சில வகை அம்புகள் பூமியைத் துளைத்துத் தண்ணீரை வரவழைக்கும். பாரதப் போரில் 'பீஷ்மருக்குத் தன் அம்புகளாலேயே படுக்கை அமைத்துக் கொடுத்தவன் அர்ஜுனன்.

இப்படிக் குறி தவறாமல் அம்பு எய்யவும் அம்புகளால் பல்வேறு சாகசங்களைச் செய்யவும் அர்ஜுனனுக்கு உதவியது எண் கணிதம்தான். அர்ஜுனனின் சகோதரன் சகாதேவன் ஜோதிட வல்லுநர். அவனிடம் இருந்து அர்ஜுனன் எண் ஜோதிடம் பயின்று அதன் மூலம் வில் வித்தையை வளர்த்துக்கொண்டாராம்.

அர்ஜுனனுக்கு இந்த எண் ஜோதிட ஆற்றலை கொடுத்த ஸ்தலம் பேரையூர் மேலப்பரங்கிரி ஆகும். அர்ஜுனன், சகாதேவன் இங்கு வந்து சிவனை வழிபட்டு சதுர்வேதம் எண் சக்திகளை பெற்றதாகப் புராணம்



பைரவர்

கூறுகிறது. இதனால்தான் இங்குள்ள சிவனுக்கு மல்லிகார்ஜுன லிங்கம் என்று பெயர்வந்தது.



மலை மீது அமைந்துள்ள இக்கோவில் மிகவும் சிறியதாக இருந்தாலும் மல்லிகார்ச்சுனர் அழகு மிளிரும் வகையில் அருள்பாலிக்கிறார். சிவன் கோவிலுக்கு அருகே சப்த கன்னிமார் சிலை ஒரே கல்லில் வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் மலையில் வற்றாத சுனை உள்ளது. புனித தீர்த்தமாகக் கருதப்படும் இந்த நீர்நிலையில் சிவந்த அல்லி மலர்ந்து கண்களுக்கு விருந்தளிக்கிறது. சுனை தண்ணீரும் சுவையாய் இருக்கிறது.

கணித பாடத்தில் மந்தமான குழந்தைகள் இங்கு வந்து சிவனை வழிபட்டால் அப்பாடத்தில் நன்கு தேர்ச்சி பெறலாம். மேலும் பூஜ்ஜியத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் கம்ப்யூட்டர் படிப்பில் உயர்ந்த நிலைக்கு வரவும் இங்குள்ள இறைவனை வணங்கிச் செல்லலாம்.



காலாங்கிநாதர் குகை

மல்லிகார்ஜுன லிங்கத்துக்கு மிகவும் பிடித்தமான அபிஷேகம் சந்தன குழம்பு அபிஷேகம் ஆகும். லிங்கம், வன்னி, மகிழ்ச்சி, துத்தி போன்ற மூலிகைகள் ஊறிய இலை தீர்த்தம், கங்கை, யமுனை, காவேரி போன்ற புண்ணிய தீர்த்தங்களைக் கொண்டு சந்தனத்தை அரைத்துக் குழம்பாகச் செய்து அபிஷேகிப்பது சிறப்பு.

இப்படி அபிஷேகம் செய்து, தம்பதியினர் சகிதமாக தங்கள் கைப்பட அன்னதானம் வழங்குவது குடும்பத்தை மேன்மை அடையச் செய்யும். இக்கோவிலில் வட்ட வடிவில் கோலம் போட்டு வணங்கினால் புண்ணியம் கிடைக்கும்.

இக்கோவில் அமைந்துள்ள மலைப் பாறையில் ஒரு கல்வெட்டு உள்ளது. அக்கல்வெட்டு 1250-ல் செதுக்கப்பட்டது. அப்போது பேரையூர் பகுதி கடுவகோமங்கலம் என்று அழைக்கப்பட்டது. இந்த ஊரைத் திருமங்கலத்தை ஆண்ட குறுநில மன்னன் விக்கிரமசிங்க தேவன் விலைக்கு வாங்கியதாக இக்கல்வெட்டு கூறுகிறது. அந்தக் காலத்தில் திருமங்கலம் செங்குடி நாடு என்று அழைக்கப் பட்டது. இந்தக் காலத்திலேயே மல்லிகார்ஜுனர் கோவில் இருந்ததாக தொல் பொருள் ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

பௌர்ணமி நாளில் தேவர்கள் புஷ்பக விமானங்களில் வந்து அருள்மிகு மல்லிகார்ஜுனரை வழிபட்டுச் செல்வதாக நம்பப்படுகின்றது. அவர்களின் புஷ்பக விமானங்கள் இங்குத் தடையின்றி வந்து செல்வதற்கு வசதியாக இம்மலையில் மரங்கள் தழைத்து வளருவதில்லை எனக் கூறுகின்றார்கள்.



வற்றாத சுனை

இயற்கையாக அமைந்து எழிலுற விளங்கும் இந்தப் பரங்கிரி மலைக்கு நீங்களும் வந்து அருள்மிகு மல்லிகார்ஜுனரை வழிபட்டு எண்ணிய எண்ணியாங்கு வரங்கள் பெற்று வளமுற வாழலாமே!



தியான மேடை




புனித தீர்த்தம்

## வில்லுப்பாட்டு காணிக்கை செலுத்தும் கோயில்

தமிழகத்தின் தென் கோடியிலுள்ள நாகர்கோவிலிருந்து 20 கி.மீ. தூரத்திலுள்ள மண்டைக்காடு பகவதி அம்மன் கோவிலில்தான் வில்லுப்பாட்டைக் காணிக்கையாகச் செலுத்து கிறார்கள்.

கேரளாவில் உள்ள பெண்கள் மாலை அணிந்து 41 நாட்கள் விரதம் இருந்து இருமுடி கட்டிக் கொண்டு இக்கோவிலுக்கு வருகிறார்கள். இது இவ்வாலயத்தின் மற்றொரு சிறப்பு.

தகவல்:- செ.சிவாஜி பிஎஸ்.சி,பி.எல்.,



# திருமந்திர உபதேசம்

திருமந்திரச்செல்வர் டி.வி. வெங்கட்ராமன், இ.ஆ.ப. (ஓய்வு)

''தண்ணின்ற தாளைத் தலைக் காவல் முன்வைத்து'' (உபதேசம்)

பிரபஞ்சத்தின் படைப்பு உயிர்களின் உய்திக்காகவே நடைபெறுகிறது என்ற அடிப்படை உண்மையை உணர்ந்து கொள்ள வேண்டும். இறைவனுடைய தனிப்பெருங்கருணையை வெளிப்படுத்த அது ஒன்றே போதும்.

ஆனால் உலக இயக்கத்திற்கு நாமே மையம் என்று தவறாகக் கருதிக் கொண்டு உலகத்தை நம்முடைய வளர்ச்சிக்காகவே பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற மயக்கத்தில் செயல்பட்டு வருவதற்கு ஆணவமே காரணம் என்றும், அதனால் விளைந்த அறியாமையின் தன்மையை நாம் தெரிந்து கொள்ளவில்லையாதலால், நம்முடைய செயல் பாடுகளெல்லாம் நம்மைப் பிறவி தோறும் வினைக்கடலில் ஆழத் தள்ளிக் கொண்டிருக்கின்றன என்பதும் தான் உண்மை.

இறைவனுடைய கருணை இரண்டு வழிகளில் இயங்குகிறது. அவற்றை மறக்கருணை, அறக்கருணை என்பார்கள்.

இறைவனுடைய மறைப்புச் சக்தியில், மறக்கருணையானது உயிரை ஒரு வகையில் செலுத்துகிறது.

இறைவன் உயிரை உடலோடு சேர்த்து, உடல் வழியாக பிராரப்த வினை எனப்படும் நுகர் வினைகளைக் கழிக்கச் செய்கிறான். இதை அறிந்து கொள்ளாத உயிர், தான் பெறும் இன்ப துன்பங்களுக்குத் தானோ அல்லது பிறரோ காரணம் என்று தவறாகப் புரிந்து கொள்கிறது.

இருந்தாலும் இறைவன் தனது பணியை, அவனே அமைத்த நியதிப்படி நடுவு நிலைமை பிறழாமல் செய்கிறான். ''சலமிலன், பேர்சங்கரன்'' என்கிறார் சந்தானாசாரியாரான உமாபதிசிவம்.

உயிருக்கு உயிராகவும் உடனாகவும் இருந்து கொண்டு இறைவன், உயிருக்கு அனுபவங்களைக் கொடுத்து பக்குவப் படுத்துகிறான்.

''ஈன்றாளுமாய், எனக்கெந்தையுமாய்
உடன் தோன்றினராய்
மூன்றாயுலகம் படைத்துகந்தான்
மனத்துள்ளிருக்க
ஏன்றான் இமையவர்க்கன்பன்
திருப்பாதிரிப்புலியூர்த்
தோன்றாத் துணையாயிருந்தனன்
தன்னடியோங்களுக்கே''

என்று அப்பர் பெருமான் பரவசத்துடன் பாடுகிறார்.

சிறப்பு நிலையில் தானேயாகி நிற்கின்ற சிவப் பரம் பொருள், தடத்தநிலையில் தனது சத்தியை, உயிருக்குப் பெருங்காவலாக வைத்து, உயிர் இவ்வுலகில் அமைய வேண்டிய படிநிலை வளர்ச்சியைப் பெற்றுப் பிறவியின் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளத் துணை புரிகிறது.

அதற்காக இறைவன், உள்ளத்தில் புகுந்து ஆணவமலத்தை இயக்கியும், அதைத் தேய்வடையச் செய்தும், புகழ்ச்சி, இகழ்ச்சி போன்றவற்றில் நின்றும், உடல், உயிர் இரண்டிலும் கலந்து கொண்டும் அவையேயாய், தொடர்ந்து நீங்காது நிற்கின்றான். அவையும் தத்தம் பணிகளைச் செய்வதற்கு ஏதுவாகிறது.

*''புகுந்து நின்றான் வெளியாய் இருளாகிப்
புகுந்து நின்றான் புகழாய் இகழ்வாகிப்
புகுந்து நின்றான் உடலாய் உயிராகிப்
புகுந்து நின்றான் புந்தி மன்னி நின்றானே''*

(திருமந்திரம் 411)

இவ்வாறு சிவபெருமான் பலபொருள்களில் நிலைத்துநின்றுஅவற்றையும்நிலைப்பிக்கச்செய்கிறான்.

அதாவது காரண - காரிய நிலை மாறாது, தத்துவங்களும், புவனங்களும் இயங்குவதற்குத் துணை புரிகின்றான். அங்கு இங்கு எனாதபடி, எங்கும் நிறைந்திருக்கும் வியாபகமாய், பரவெளியாய் அவன் நிற்றலால், எல்லாப்பொருள்களும் அவனுள் அடங்கும். அவற்றால் அடைக்கப் படமுடியாத பெருவெளியாக சிவபெருமான் திகழ்கின்றான்.

*''உலப்பிலி எங்குந்தானாகி
அடையாப் பெருவெளி அண்ணல்
நின்றானே''*

*(திருமந்திரம் 413)*

உயிர்கள் சிவபெருமானின் பெருங்கருணையை நேராக அனுபவிப்பதற்குப் பல பிறவிகள் எடுக்க வேண்டிவரும். பல தடைகள் நீங்க வேண்டும். ஆணவத்தால் தன் முனைப்பு மேலோங்க உயிர்கள், இயற்கையை, இறைவனின் வெளிப்பாடாகக் கருதாமல், தன்னால் அடக்கி ஆளக்கூடிய சக்தியாகவே கருதுகின்றன.

எல்லா உயிர்களும் அத்தகைய நிலையில் இல்லை. சில உயிர்கள் இயற்கையின் இயக்கத்தில் தெய்வங்களின் ஆற்றலைக் காண்கின்றன. உயிர்களின் அறிவுநிலைக்கு ஏற்ப சிவபெருமான் பலகடவுளாகத் தோன்றுவான்.

**''தானொரு காலந் தனிச்சுடராய் நிற்கும்**
**தானொரு காலம் சண்ட மாருதமாய் நிற்கும்**
**தான் ஒரு காலந்தனி மழையாய் நிற்கும்**
**தானொரு காலந்தண் மாயனுமாமே''**

என்றார் திருமூலர் பெருமான். (திருமந்திரம் 415)

உயிர்களைக் காக்கும் பொருட்டே, சிவபெருமான் ஐந்து பூதங்களில் நிற்கின்றான். குணங்கள் மூன்றாயும், காலங்கள் மூன்றாயும் நிற்பான்.

**''அன்பும், அறிவும் அடக்கமுமாய் நிற்கும்**
**இன்பமும் இன்பக் கலவியுமாய் நிற்கும்**
**முன்புறு காலமும் ஊழியுமாய் நிற்கும்**
**அன்புற ஐந்தில் அமர்ந்து நின்றானே''**

(திருமந்திரம் 416)

உயிர்களுக்குத் தனு, கரண, புவன போகங்களை, அம்மையப்பராக நின்று தருவது இறைவன். அத்துடன் அவனது பணி முடிந்து விடுவதில்லை.

சகலஜீவராசிகளும, தத்தம் உடல் வழியாக முன்னம் பிறவிகளில் சேர்த்து வைத்த வினைப்பயன்களைப் படிப்படியாகப் பெற்றுக் கொண்டு அதன் விளைவாக அறிவு முதிர்ச்சி பெற்று உலக இன்பங்களை நாடும் விருப்பங்களை தவிர்க்கக் கற்றுக் கொண்டு, திருவருளைக் கண்டு உணர்ந்து சிவப்பரம் பொருளின் திருவடிகளை அடைய வேண்டுமென்ற ஞான நாட்டத்தைத் தருவதும் இறைவனே.

எக்காலத்திலும், எந்நிலையிலும், உயிர்களுக்காக இறைவன் செய்யும் காத்தல் தொழில் அவைகளுக்கு முடிவான பேற்றினைக் கொடுப்பதற்காகவே என்று சான்றோர்கள் தெளிவுடன் கூறுகிறார்கள்.

இறைவன் இவ்வகையில் உயிர்களைத் தாங்கி நிற்கின்றான் என்பதும் காத்தல் தொழிலின் பொருள்விளக்குவதாகும்.

இறைவன் இவ்வாறு உயிர்களைத்தாங்கி நிற்கின்றான் என்பதை அருளாளர்கள் இருநிலை அனுபவமாக நமக்கு விளக்குகிறார்கள்.

ஒன்று பலபிறவிகளில் உடலுக்கும், கருவிகளுக்கும் அடிமையாகி அவைகளுக்குச் சுதந்திரமின்றிப் பணியாற்றிய நிலையால் பெற்ற இன்பத்தை விட துன்பமே அதிகம் என்ற உணர்வு உள்ளத்தை அழுத்தத் தொடங்கி, பெற்ற இன்பமெல்லாம் கானல் நீர் போன்றது என்று தெரிந்து கொண்டு இறைவனடி சார வேண்டுமென்ற அவா, பிறவிதோறும் வலுவடைய,

**''புயங்கனே, மயங்குகின்றேன், தாங்கிக் கொள்ளே''** என்று குரல் எழுப்பி இறைவனுடைய திருவருளால், அவன் அவ்வாறு தாங்கிக் கொண்டேயிருக்கின்றான் என்று கண்டு இன்புறுதல்.

இரண்டு, சிலஞான உணர்வு முற்றிலும் வரப் பெற்ற நிலையில், அவனன்றி வேறொன்றும் இல்லை என்ற அறிவில், பற்றற்ற நிலையில் உயிரானது இறைவனுக்குப் பணிசெய்து கிடக்கும் என்பதும், அவ்வாறு கிடக்கின்ற அருளாளர்களை யெல்லாம் தாங்கிக் கொண்டு, தனது வியாபகத்தில் இருத்திக் கொள்வது இறைவன் கடன் என்பதும் தாங்குதலுடைய மேல்நிலை அனுபவமாகக் கண்டுகொள்ளுதல்.

அருள் பெற்ற உயிர்களை இறைவன் தன்னகத்தே நிறுத்திக் கொள்கிறான் என்பதை, **''என்னையும் இருப்ப தாக்கினன்''** என்கிற மணிவாசகப் பெருமானினுடைய திருவாக்கில் இருந்தும் **''அறவா நீஆடும் போதுன் அடியின் கீழ் இருக்க''** என்கிற காரைக்கால் அம்மையாருடைய திருவாக்கிலிருந்தும் தெரிந்து கொள்ளலாம்.




## ஐப்பசியில் ஆழ்வார் - நாயன்மார் திருநட்சத்திரம்

| | |
|---|---|
| திருமூலர் | - அசுவினி |
| நெடுமாறர் | - பரணி |
| இடங்கழியார் | - கார்த்திகை |
| சத்தியார் | - பூசம் |
| பூசலார் | - அனுசம் |
| ஐயடிகள்காடவர்கோன் | - மூலம் |
| பொய்கையாழ்வார் | - ஓணம் |
| பூதத்தாழ்வார் | - அவிட்டம் |
| பேயாழ்வார் | - சதயம் |

# தமிழ்நாட்டுச் சித்தர் பரம்பரை அகப்பேய்ச்சித்தர்

முனைவர் இரா. செல்வக்கணபதி



திருவள்ளுவர் தொடங்கித், தமிழில் இலக்கியம் படைத்த பலரது வரலாறுகளும் முறையாகப் பதிவு செய்யப் பெறவில்லை. அரிய நூல் படைத்த நம் முன்னோர் தங்கள் வாழ்வியல் கூறுகளில் சிலவற்றையாவது தம் படைப்புக்களில் பதிவு செய்திருக்கலாம். செய்திலர். அதற்குக் காரணம்:

ஒன்றுஃ விளம்பரம் வேண்டாத தன்னடக்கம். இரண்டுஃ படைப்புகளில் வாழ்ந்திருத்தல் போதும் என்ற தன்னிறைவு. முற்றாகத் தேடிக்காணும் முயற்சி அருகிவிட்ட காலம் இது. முன்னோர் தேடி வைத்தவற்றிலிருந்து அங்கொன்றும் இங்கொன்றுமாக எடுத்துத் தனதாகக் காட்டும் போலித் தனங்களே ஆய்வுலகில் இன்று நிலவுகிறது. இவ்வகையில் தமிழ்நாட்டுச்சித்தர்கள் வரலாறு இன்று வரை இருட்டிலேயே மறைந்து கிடக்கிறது.

பதினெண் சித்தர் ஃ நவநாத சித்தர் என்ற குறியீடுகள் எவையும் நேரிதாக இல்லை. யார், எந்தக் காலத்தில் இத்தகு தொகுப்பினைச் செய்தார் என்பதும் தெரிந்திலது. பதினெண் சித்தர் பட்டியலில் நியாயமாக இடம் பெற வேண்டிய பலர் அப்பட்டியலில் ஏன் இடம் பெற்றிருக்கவில்லை என்பதும் புரியவில்லை.

சைவ சித்தாந்திகள் தத்துவங்களை அறிவாராய்ச்சிக்கு ஏற்ப இருபத்து நான்கு, முப்பத்தாறு, தொண்ணூற்று ஆறு என்று நீட்டிக் கொண்டது போல் சித்தர் தொகுப்பையும் நீட்ட வேண்டும். நீட்டினால் ஏறத்தாழ தமிழ்நாட்டுச் சித்தர் தொகை நாற்பத்து எட்டை நெருங்கும். இவற்றை எல்லாம் யார் செய்வது? எப்படிச் செய்வது என்ற வினாக்களுக்கு விடை தருவார் இல்லை. சித்தர் மரபு புரப்பார் இன்றி அருகி வருதல் சத்தியம். நாம் ஒரு பெரிய வரலாற்றுப் பிழையைச்செய்து வருகிறோம்.

சித்தர்களில் பலருக்கு, அவர்கள் கவிதைகளில் காணப்படும் ஒரு தொடராலேயே பெயர்சூட்டப்பட்டுள்ளது.

அகப்பேய்ச் சித்தரும் அவர்களுள் ஒருவர். பதினெண் சித்தர் பட்டியலிலும் இவருக்கு இடம் தரப்பட்டிருக்கவில்லை.

மனம் என்பது மனிதனின் ஆற்றல் மிக்க ஒன்று. இதனை உள்ளிருத்தல் என்ற கருத்துப்பற்றி அகம் எனக் குறித்தல் மரபு. மனம் அறிவால் கட்டுப்படுத்தப்பட வேண்டிய ஒன்று. வள்ளுவரும், சமய நூலாசிரியர்களும் மனத்தியல்பை விரிவாக விளக்கியுள்ளனர். இந்த மனத்தைக் கட்டுக்கடங்காத அதன் தன்மைக் கருதிப் 'பேய்' எனச் சுட்டினார் இச்சித்தர் பெருமகனார். எனவே, இவர் அகப்பேய்ச் சித்தர் எனக் குறிக்கப்பட்டார். அகப்பேய் என்பது மருவி அகப்பை என நின்றது. இவரை நாட்டார் அகப்பைச்சித்தர்என்றே அழைத்தனர்.

அகப்பேய்ச் சித்தர் மனத்தைப் பேய் என உருவகம் செய்வது போல் இடைக்காட்டுச் சித்தர் மனத்தை 'மாடு' என்று உருவகித்தார்.

''மனம் என்னும் மாடு அடங்கில்
தாண்டவக் கோனே, முத்தி
வாய்த்தது என்று எண்ணேடா தாண்டவக்
கோனே'

என்பது இடைக்காட்டுச் சித்தர் கண்ணிகளில் ஒன்று.

அகப்பேய்ச் சித்தர் பாடியனவாக ஒத்த அளவுடைய 90 கண்ணிகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

''நஞ்சுண்ண வேண்டாவே - அகப்பேய்
நாயகன்தாள் பெறவே!
நெஞ்சுமலியாதே - அகப்பேய்
நீஒன்றும் சொல்லாதே!''



## திருக்குளத் திருப்பணி நிறைவு விழா

சென்னை நுங்கம்பாக்கம் அகஸ்தீஸ்வரர் பிரசன்ன வெங்கடேசபெருமாள் திருக்கோயில் திருக்குளத் திருப்பணி ரூ.5 லட்சம் திட்ட மதிப்பீட்டில் சென்னை ஜி.ஜி மருத்துவமனை நிர்வாக இயக்குநர் திருமதி கமலா செல்வராஜ் அவர்கள் தம் சொந்த செலவில் நிறைவு செய்து வழங்கினார்கள். சென்னை இணைஆணையாளர்திருமிகு ப.ராஜாபிஎஸ்.சி.பி.எல் அவர்களும், உதவி ஆணையர் திருமதி த.காவேரி பிஏ.பிஎல் அவர்களும், திருக்கோயில் நிர்வாக அதிகாரி திருமிகு தென்னம்பட்டு ஏகாம்பரம் அவர்களும் உடன் உள்ளார்கள்.

என்பன போன்ற அமைப்பே 90 கண்ணிகளிலும் காணப்படுகிறது. அகப்பேய்ச் சித்தரின் பாடல்களின் உள்ளீடு சிவம்- சைவம் - சைவ சித்தாந்தம் என்றே அமைகிறது.

சைவ சிந்தாந்தத் தத்துவங்கள் வரையறுக்கப்பட்ட - கி.பி. 14 ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டவராக இவரைக் கருத இடமுள்ளது.

சைவ சித்தாந்தம் வகுத்துரைக்கும் முத்திக்குரியபடிநிலைகள் தத்துவங்கள் எனப்பெறும். இவற்றைச் சைவ சித்தாந்தக் கட்டளை நூல்களும், உண்மை விளக்கமும் விரித்துரைக்கும்.

அகப்பேய்ச் சித்தரும் கட்டளைகளின் இயல்பு உரைக்கிறார். இறை, உயிர், தளை என்று சைவ சித்தாந்தம் விரித்துரைக்கும் பதி, பசு, பாசங்களின் இயல்புகளும் விரித்துரைக்கப்பட்டுள்ளன. நாதன் நடம், நாலு பாதங்கள், ஐவகை வாக்குகள், ஆறாறு தத்துவங்கள் யாவும் எளிதாக விரித்துரைக்கப் பட்டுள்ளன.

**''ஆறாறு தத்துவமும் - அகப்பேய்**
**ஆகமம் சொன்னதடி**
**மாறாத மண்டலமும் - அகப்பேய்**
**வந்தது மூன்றடியே''**

என்றும், ஐம்பெரும் பூதங்களின் இயல்புகளை,

**''மிகுந்துள பொன்னிறமே - அகப்பேய்**
**பேதமை அல்லவடி**
**உகுவது நீரடியோ - அகப்பேய்**
**உள்ளது வெள்ளையடி''**

என்றும் சித்தர் விரித்துரைக்கிறார்.

சைவ சித்தாந்தத்தில் ஞான குருவிற்கு ஓர் இன்றியமையா இடம் உண்டு. இதனை,

**''பாவம் தீரவென்றால் - அகப்பேய்**
**பாவிக்க லாகாதே**
**சாவதும் இல்லையடி - அகப்பேய்**
**சற்குரு பாதமடி''**

என்று எடுத்துரைக்கிறார்.

குருவழியே மட்டும் உணரலாகும் பூடகப் பதிவுகள் பலவும் இவரது கண்ணிகளில் காணப்படுகின்றன.

**''ஐந்துதலை நாகமடி - அகப்பேய்**
**ஆதாயம் கொஞ்சமடி''** என்றும்

**''தேனை உண்ணாமல் - அகப்பேய்**
**தெருவொடு அலைந்தாயே !''** என்றும்

**''சும்மா இருந்தவிடம் - அகப்பேய்**
**சுட்டது சொன்னேனே''**

என்றும் வரும் பகுதிகள் எளிதில் பொருள் உணரவாராதன.

அகப்பேய்ச் சித்தர் பாடல்களில் அரிய தொடர்கள் பல இடம் பெற்றுள்ளன.

**''சைவம் ஆருக்கடி - அகப்பேய்**
**தன்னை அறிந்தவர்க்கே''**

**''துறவி யானவர்கள் - அகப்பேய்**
**சும்மா இருப்பார்கள்''**

**''தேனாறு பாயுமடி - அகப்பேய்**
**திருவடி கண்டவர்க்கே''**

**''கண்டார்கள் சொல்வாரோ - அகப்பேய்**
**கற்பனை அற்றதடி''**

**''சாதி பேதமில்லை- அகப்பேய்**
**தானாகி நின்றவர்க்கே''**

என்பனசில குறிப்பிடத்தக்க பதிவுகளாக உள்ளன.

தன்னை அறிதலே முத்தி என்பாராய்,

**''தன்னை அறிய வேணும் - அகப்பேய்**
**சாராமற் சாரவேணும்**
**பின்னை அறிவதெல்லாம் - அகப்பேய்**
**பேயறிவாகுமடி''**

இவ்வாறான சைவ மரபு குறித்த - ஆராயப்பட வேண்டிய பல கண்ணிகள் அகப்பேய்ச்சித்தர் பாடல் தொகுப்பில் காணப்படுகின்றன. சைவ - உலகம் இவ்வாறான மரபு மாறாத சித்தர் கவிதைகளை ஏற்றுப் போற்றாமைக்கு உரிய உண்மைக்காரணம் புலப்பட்டிலது.

# இவ்வளவு தூரம் வந்த பிறகு

அழ. முத்துப்பழநியப்பன், எம்.ஏ.பி.எல்.



புகழ் பெற்ற திருத்தலங்களைக் காணப்போகிறோம்: அத்தலத்தைக் கண்டு, தரிசித்து மீண்டு வருகிறோம்.

இவ்வாறு ஒரு கோயிலுக்குப் போகும் போது முன்கூட்டியே திட்டமிட்டு, சிரமப்பட்டுத்தான் போகிறோம். அதே சமயம் நாம் தரிசிக்கின்ற புகழ் பெற்ற கோயிலுக்கு அருகாமையில் உள்ள சிறப்பு மிக்க ஊர்களையும், கோயில்களையும் பார்க்காமல் வந்து விடுகிறோம். இதற்குக் காரணம் நமக்கு அந்த இடத்தைப் பற்றித் தெரிவதில்லை.

பிற்பாடு யாராவது ஒருவர் இந்த ஊரைப் பற்றி கூறும்போது, ''அடடா! அந்த ஊருக்கு மிக அருகாமையில் இந்தத் தலத்தைப் பார்க்காமல் வந்து விட்டோமே'' என்று வருந்துவதுண்டு.

அந்த வரிசையில், புகழ் பெற்ற பழனிக்கு அருகாமையில் உள்ள கோயில்களை இப்போது பார்க்கலாம்.

பழனிக்கு போகிறவர்கள், இடும்பன் மலை அடிவாரத்தில் உள்ள இடும்பன் கோயிலைப் பார்ப்பதில்லை.



அதுபோல பழனி ஊருக்குள் உள்ள பெரியநாயகி அம்மன் கோயில் : ஊர்க்கோயில் என்றும் யானைக் கோயில் என்றும் பெயர் பெற்றது. சிற்பச் சிறப்புக்கள் நிறைந்த கோயில் இது. இதனையும் பார்ப்பதில்லை.

இதுபோல, பழனிக்கு அருகாமையில், சண்முக நதிக்கரையில், அழகிய இயற்கை சூழலில் அமைந்திருக்கும் கோயில் பெரியாவுடையார் கோயில் - மேற்குப் பார்த்த கோயில். சிறந்த சிற்பங்கள் கொண்டது. இங்கு அம்மன் சந்நிதி இல்லை.

பழத்திற்காகக் கோபித்து வந்த முருகனைப் பார்க்க, தந்தையார் ஒரு புறமும், தாயார் ஒரு புறமும் ஓடிவந்ததாக ஐதீகம். அதனால் இரண்டு கோயில்கள் தனித்தனியாக உள்ளன.

பழனியில் இருந்து மேற்கில் 15 கி.மீ. தூரத்தில் உள்ளது கொழுமம் என்ற ஊர்.ஆன் பொருநை என்று சங்க இலக்கியத்தில் வருணிக்கப்படும் அமராவதி ஆற்றின் கரையில் உள்ளது. சங்க இலக்கியத்தில் குழுமூர் என்று அழைக்கப்படுகிறது. வடமொழியில் சங்கிரமநல்லூர் என்று அழைக்கப் படுகிறது. சங்கிரமம் என்றால் ஒன்று சேருதல் - அதாவது சேர நாட்டு வணிகர்களும், மற்ற உள்நாட்டு வணிகர்களும் இங்கு வந்து குழுமியதால் இப்பெயர் ஏற்பட்டது.

இந்த ஆற்றின் கரையில் உள்ளது தாண்டவேசுவரர் கோயில். இங்குள்ள நடராசர் சிலை மிக மிக அழகியது. ஆறடிக்கு மேல் உயரமுள்ளது.

தாண்டவேசுவரர் என்றால் நடராசர் தான். பல பெயர்களால் ஆடல் வல்லானை அழைத்தாலும் இங்குள்ள கல்வெட்டுக்கள், இவரை 'நித்தம் நின்றாடுவார்' என்று அழைக்கின்றன. அவன் ஆட்டத்தை நிறுத்தினால் உலகின் ஆட்டம் நின்றுவிடும். தினமும் அவன் ஆடிக் கொண்டே இருப்பதால் இப்பெயர் பெற்றான் போலும்.

கல்வெட்டுக்களஞ்சியமாக உள்ள இக்கோயில் சிற்பச் சிறப்புக்கள் கொண்ட கோயிலாகும். பூக்கட்டுவதற்காக கல்லால் ஆன பூப்பலகை உள்ளது. அதிலும் கல்வெட்டு பொறிக்கப் பட்டுள்ளது.

இந்த ஊருக்குப் போகிற வழியில், இடதுபுறம் குதிரைமலை என்ற மலையைக் காணலாம். இதுதான் சங்ககால வள்ளல் குமணன் வாழ்ந்த குதிரைமலை ஆகும்.

வலதுபுறம் ஐவர் மலை என்ற மலை உள்ளது. பாண்டவர்கள் இங்கு வாழ்ந்ததாகக் கூறுவர். சமண முனிவர்கள் வாழ்ந்த குகைகள் உள்ளன. உண்மையில் இதன் பழம் பெயர் அயிரைமலை ஆகும்.

சேரர்களின் குல தெய்வத்தின் பெயர் அயிரை ஆகும். இதைப்பற்றி, 'பதிற்றுப்பத்து' என்ற சங்க இலக்கியத்தில் கூறப்படுகின்றது. 'அயிரை மலை' ஐவர் மலை ஆகிவிட்டது. எப்படியானால் என்ன? போய்ப்பார்த்தால் அது ஒரு புது அனுபவம்.


மீண்டும் அமராவதிக் கரைக்கு வருவோம். கொழுமத்தின் வடகரையில் உள்ளது குமரலிங்கம். இதன் பழம் பெயர் குமணலிங்கம் ஆகும். குமணன் வழிபட்டதால் இப்பெயர் ஆகியது என்பர். இவ்வூரில் உள்ள காசிவிசுவநாதர் கோயில் சிறப்புடையது. இங்கு ஒரு தத்தாத்ரேயர் சமாதியும் உள்ளது. சிரமப்பட்டு பழனிக்கு வந்தவர்கள், அருகாமையில் உள்ள இந்தப் பழைய கோயில்களையும் தரிசித்தால் புண்ணியமும் சேரும். வரலாற்றுச் சிறப்புமிக்க கோயில்களைத் தரிசித்தோம் என்ற நிம்மதியும் கிடைக்கும்.

# மங்கலங்கள் தரும் ஸ்ரீ மாங்காடு காமாட்சி

### மணம் கமழும் மாங்காடு

ஆனந்தம், ஆறுதல், அமைதி இம்மூன்றையும் ஒருங்கே தரவல்ல தெய்வீகத் திருத்தலம்தான் மாங்காடு. மாமரங்கள் நிறைந்து மாமரக்காடாக விளங்கியமையால் இத்தலம் ''மாங்காடு'' எனும் காரணப்பெயர் பெற்றது. ''மாவை'' என்றும் சொல்வதுண்டு. ''சூதவனம்'', ''ஆம்ரராரண்யம்'' போன்ற சிறப்புப் பெயர்களும் உண்டு.

இந்த ஆம்ரராரண்யத்தில், ஒற்றை மாமரத்தடியில், ஸ்ரீகாமாக்ஷி அம்மன் தவம் புரிந்து, பின்னர் காஞ்சியிலே ஈசனை மணம் புரிந்து கொண்டதாக ஐதீகம். மாங்காடு தலத்திற்கு ஒரேயொரு முறை வந்து விட்டால் போதும், அதன் பின்னர் நம்மையறியாமல் நம் மனம் மாங்காட்டிற்கு நம்மைச் செலுத்தும். பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் அனுபவப்பூர்வமான உண்மை இது. மாங்காடு அம்மனின் மகிமை இத்தன்மையது. தலவரலாற்றை இங்கே சுருக்கமாகக் காண்போம்.





### மாங்காட்டில் ஸ்ரீ காமாக்ஷி

திருக்கயிலாயத்தில் தம் பிராட்டியுடன் சிவபெருமான் வீற்றிருந்த போது, ''ஈசனின் கண்களைப் பொத்தினால் என்ன?'' என்று விளையாட்டாய் அம்மை பொத்த, சூர்ய சந்திரர்களான ஈசனின் கண்கள் அம்மையால் மறைக்கப்பட்டதால் சர்வ லோகங்களும் இருளில் மூழ்கித் திண்டாடின. ஈசனின் கோபத்திற்காளான அம்பாள், அவரின் சொற்படி, பூவுலகில், மாங்காட்டில் தவம் செய்கிறார். மாமரத்தடியில் தவமியற்றியமையால் மாமரம்தலவிருட்சம்.

### அன்னையின் தவக்கோலம்

ஐந்து குண்டங்களில் தீ வளர்த்து, நடுக்குண்டத்தில் தமது இடதுகாலைக் கட்டை விரலின் நுனிப்பகுதி அக்னியில் படுமாறும், வலது காலை இடது காலின் தொடைக்கு மேற்புறமாகவும், இடது கையை நாபிக் கமலத்திற்கு அருகிலும், வலது கையில் ஜபமாலையுடன் தனது சிரசிற்கு மேலும், அழகிய கண்களை மூடிய நிலையிலும் அம்பாள் தன்னை ஐயனுடன் இணைத்துக் கொள்ள மாங்காடு திருத்தலத்தில் கடும் தவம் புரிந்தார்.

### காஞ்சியில் மணக்கோலம்

தவத்திற்கிரங்கி, காமாக்ஷி அம்மையை மணம் புரிய வரும் சிவபெருமான், இதே மாங்காடு தலத்தில் தன்னைப் பூஜித்து வந்த சுக்ராசாரியருக்குக் காட்சி கொடுத்து, அங்கிருந்தபடியே அசரீரி மூலம் அம்மையைக் காஞ்சிக்குச் செல்லச் சொல்கிறார். அம்மையும் அவ்வாறு சென்று, காஞ்சியிலே மணலால் லிங்க வடிவில் பூஜித்து, பின்னர் மணம் புரிந்து கொள்கிறார்.

### ஸ்ரீ அர்த்தமேரு ஸ்ரீ சக்கரம்

காஞ்சிக்குச் செல்கையில் பஞ்சாக்னியை அணைக்காமல் சென்றதால், மாங்காடும் சுற்றுப் பிரதேசங்களும் தீயின் வெம்மையால் வறண்டன. இந்நிலை நெடுங்காலம் நீடித்ததாக வரலாறு. பின்னர் ஸ்ரீ ஆதிசங்கர பகவத் பாதர் தேசாந்திரம் செல்லும்போது மாங்காட்டின் நிலையறிந்து, ''அஷ்டகந்தம்'' எனப்படும் எட்டு மூலிகைகளால் ஆன ஸ்ரீ அர்த்தமேரு ஸ்ரீ சக்ரத்தை



# அன்னாபிஷேகப் பலன்

அன்னாபிசேகத்தில் பயன்படுத்தப்படும் அன்னத்தின் ஒவ்வொரு பருக்கையும் சிவலிங்கத்தின் உருப் பெறும். அன்னாபிஷேகத்தில் பங்குபெற்று அன்று அன்னாபிஷேக லிங்கத்தைத் தரிசிக்கும் பக்தர்கள் சகல வளங்களும் பெற்று இன்புறுவதோடு, பிறவிப் பிணியிலிருந்து விடுபட்டு சிவலோகம் சேர்வர்.

- பேரூர்ப் புராணம்

அம்மை தவம் புரிந்த இடத்தில் பிரதிஷ்டை செய்தார். இதனால் தீயின் கொடுமை மறைந்து மக்கள் சுபிட்சம் பெற்றனர்.

இத்திருக்கோயிலில் ஸ்ரீ சக்ரத்திற்கே முக்கியப் பிரதானம். மூலிகைகளால் ஆனதால் அபிஷேகம் கிடையாது. குங்கும அர்ச்சனை விசேஷமானது. ஜவ்வாது, சந்தனம், புனுகு போன்ற இன்ன பிறவும் சாற்றப்படுகின்றன. பஞ்சலோகத்தினால் ஆன ஸ்ரீ காமாக்ஷி அம்மனுக்கு அபிஷேக அலங்காரம் சிறப்பாகச் செய்யப்படுகின்றன. தபஸ் காமாக்ஷி மோன நிலையில் இருப்பதால், மூலஸ்தானத்தில் இருந்த தவக்கோலத்திற்குப் பதிலாக சாந்தமே உருவான ''ஆதி காமாக்ஷி'' அம்மனை மூலஸ்தானத்தில் சங்கராச்சாரியார் பிரதிஷ்டை செய்ததாக ஐதீகம்.

### ஆறு வார வழிபாடு

இத்தலத்தில் ஆறு வார வழிபாட்டு முறை நடைமுறையில் உள்ளது. வாரத்தில் ஏதேனும் ஒரு நாளில் எலுமிச்சைக் கனியுடன் அம்மனைத் தரிசித்து, பின்னர் அதே கிழமைகளில் தொடர்ந்து ஆறு வாரங்கள் (அதாவது ஒரு மண்டலம்) வழிபட்டால் நினைத்த காரியம் கைகூடுகிறது.

**அம்பாள் இத்தலத்தில் தவம்புரிந்து, பின்னர் இதன் பயனால் காஞ்சியில் மணந்து கொண்டமையால், கன்னிப் பெண்கள் மஞ்சள் கயிற்றைக் கட்டி வழிபட்டால் மணக்கோலம் பூணுவர். ஆண்களுக்கும் இது பொருந்தும்.**

புத்திர பாக்கியம் இல்லாதோர் தொட்டில் கட்டி வழிபட்டால் வீட்டிலே குழந்தைக்குத் தொட்டில் கட்ட அன்னை அருள் புரிவாள். பணி இல்லாதோரும் ஆறு வாரம் வழிபட்டால் பலன் கிட்டும். பல்லாயிரக்கணக்கானோர் ஆறு வார வழிபாட்டால் பலனடைந்து வருகின்றனர்.

நவராத்திரி, சித்ரா பௌர்ணமி, ஆடிப்பூரம் போன்றவை சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றன.

### மஹா கும்பாபிஷேகம்

*08-07-1987* அன்று மாங்காடு ஸ்ரீ காமாக்ஷி அம்மன் திருக்கோயில் மஹா கும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. பின்னர் *03-06-2001*ல் மீண்டும் திருப்பணி செய்விக்கப்பட்டு குடமுழுக்கு








# அருள்மிகு நரசிம்மசுவாமி மகாசம்ப்ரோட்சணம்

சென்னை அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலில் அருள்மிகு நரசிம்மசுவாமி, அருள்மிகு கஜேந்திர வரதராஜ சுவாமி மகாசம்ப்ரோட்சணம் 14.9.05 அன்று வெகு விமரிசையாக நடைபெற்றது.

மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் திருமிகு **பி.சி.இராமசாமி** அவர்களும், அறநிலையத்துறை ஆணையாளர் திருமிகு **த. பிச்சாண்டி இ.ஆ.ப.,** அவர்களும் இவ்விழாவில் பங்கேற்றுச்சிறப்பித்தார்கள்.

சென்னை இணை ஆணையாளர் திருமிகு ப.ராஜா பிஎஸ்.சி.பிஎல். அவர்களும், திருக்கோயில் துணைஆணையாளர் திருமிகு ஆ.குப்புசாமி பி.ஏ.பி.எல்., அவர்களும் விழா ஏற்பாடுகளைச்சிறப்புறச்செய்திருந்தார்கள்.





நடைபெற்றது.

இத்திருக்கோயிலில் புதிதாக நிர்மாணிக்கப் பட்டு மஹா கும்பாபிஷேகம் நடைபெற்ற ராஜகோபுரம் ஏழு நிலைகளைக் கொண்டு கம்பீரமாகக் காட்சி அளிக்கின்றது. இது அன்று ரூ. 9 லட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டது.

### ஸ்ரீ வெள்ளீஸ்வரர்

ஸ்ரீ காமாக்ஷி அம்மன் திருக்கோயிலைப் போலவே ஸ்ரீ பார்க்கவேஸ்வரர் என்று அழைக்கப்படும் ஸ்ரீ வெள்ளீஸ்வரர் சன்னதியும் மாங்காட்டில் சிறப்பு வாய்ந்தது. பார்க்கவ முனிவர் எனப்படும் சுக்ராச்சாரியால் வழிபாடு செய்யப் பட்டு அவர் ஈசனைக் கண்ணுற்ற தலம். இவ்வாலயத்தில் ஒரே கல்லில் வள்ளி தேவசேனை சகிதம் ஸ்ரீ முருகப்பெருமானையும். மாங்கனியைக் கையில் ஏந்திய ஸ்ரீ விநாயகரையும் தரிசிக்கலாம். ஆலயத்தின் விமானம் அழகிய வேலைப்பாடுகளால் ஆனது. பல்லவர் காலத்தியது. சுக்ர பகவான் வணங்கியதால் சுக்ர வார வழிபாடு சிறப்பானது. பல்லவமன்னர்களின் பல கல்வெட்டுக்கள் இக்கோயிலில் உள்ளன.

### தங்கரதம்

தமிழகத்திலேயே உயரமான தங்கரதமான இத்திருக்கோயில் தங்கரதம், சக்கரங்கள் உட்பட தங்கத்தால் போர்த்தப்பட்டு அழகிய வேலைப்பாடுடன் விளங்குகிறது. இது சுமார் 1 கோடியே 40 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திருக்கோயில் நிதி மூலமாக செய்யப்பட்டு முன்னாள் பரம்பரை தர்மகர்த்தா திரு மணலி ராமகிருஷ்ணா முதலியார் அவர்களால் 27-4-2001ல் பக்தர்கள் பயன்பாட்டிற்காக அர்ப்பணிக்கப்பட்டது. இதில் ஸ்ரீ காமாட்சி, ஸ்ரீ லஷ்மி, ஸ்ரீ சரஸ்வதி மூவரும் சேர்ந்து பவனி வருவது கண்கொள்ளாக் காட்சியாகும்.

## மதுரை மீனாட்சி வழங்கிய முத்துமாலை

குமரகுருபரர் மதுரை மீனாட்சி அம்மன் மீது பிள்ளைத்தமிழ் பாடினார். அதனைத் திருமலைமன்னர் முன்னிலையில் மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்தில் அரங்கேற்றம் செய்தார்.



வருகைப் பருவம் பாடல்களைக் குமரகுருபரர் வரிசையாகப் பாடிக் கொண்டு வந்தார்.

**''இமயப் பொருப்பில் விளையாடும் இளமென் பிடியே!...மலயத்துவசன் பெற்ற பெருவாழ்வே வருக வருகவே''** எனப் புலவர் பாட, அம்பிகை ஒரு சிறுமியாக அங்குத் தோன்றினார். வந்து திருமலை மன்னன் மடியில் அமர்ந்தார்.

திருமலை மன்னன் மார்பை அலங்கரித்திருந்த முத்தாரத்தைத் தாமே எடுத்து குமரகுருபரருக்கு அணிவித்தார்.

சிறப்பாசிரியர் மற்றும் வெளியிடுவோர் } திருமிகு **த. பிச்சாண்டி,** இ.ஆ.ப., ஆணையர்.
: தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034. தொலைபேசி : 28334811/12/13
ஆசிரியர் : கவிஞர் டாக்டர். த. அமிர்தலிங்கம், எம்.ஏ., பி.எச்.டி.,
அச்சிடுவோர் : குணசுந்தரி மாடர்ன் ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை -21. தொலைபேசி : 25967929



# அருள்மிகு முண்டகக்கண்ணி அம்மன் திருக்கோயில்

## மயிலாப்பூர், சென்னை - 4

### தங்கரதத் திருப்பணி நன்கொடை வேண்டுகோள்

மிகப்பழமை வாய்ந்ததும், பிரார்த்தனை ஸ்தலமும, 1300 ஆண்டுகளுக்கு முற்பட்டதுமான இக்கோயிலில் அருள்மிகு முண்டகக்கண்ணியம்மனுக்கு பக்தர்கள் வேண்டுகோளுக்கிணங்க ரூபாய் 41 இலட்சம் மதிப்பில் தங்கரதத் திருப்பணி செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

ஒவ்வொரு பக்தர்களும் இத்திருப்பணியில் பங்கேற்று நன்கொடையளித்து அதற்குண்டான அச்சு ரசீது அலுவகத்தில் பெற்றுக் கொள்ள வேண்டுமாயும், அருள்மிகு முண்டகக் கண்ணியம்மனின் பேரருள் பெற வேண்டுமாயும் கேட்டுக் கொள்கிறோம்.

**நன்கொடை அனுப்பவேண்டிய முகவரி:**
உயர்திரு நிர்வாக அதிகாரி அவர்கள்
அருள்மிகு முண்டகக்கண்ணி அம்மன் திருக்கோயில்
மயிலாப்பூர், சென்னை - 600 004

இங்ஙனம்,

**த. மோகன சுந்தரம்**
நிர்வாக அதிகாரி

**கோ. உதயகுமார்**
தலைவர், அறங்காலவர்குழு

**இராஜ கோபால பாலாஜி,**
**பாக்யலட்சுமி பழனிச்சாமி,**
**டி. ரகுநாதன்**
**ஏ.கி. வெங்கடேஷ்**
**அறங்காவலர்கள்.**

பதிவு எண் : TN / PMG / (CCR) / 707 / 03-05 / WPP No. 451/03-05



# அருள்மிகு கபாலீசுவரர் உடனுறை கற்பகாம்பாள் திருக்கோயில் மயிலாப்பூர், சென்னை - 4

## நவராத்திரி விழா

## புரட்டாசி மாதம் 17ந்தேதி 03-10-2005 முதல் 11-10-2005 வரை நவராத்திரி கலைவிழா

அருள்மிகு கபாலீசுவரர் உடனுறை கற்பகாம்பாள் திருக்கோயிலில் ஒவ்வொரு வருடமும் புரட்டாசி மாதம் மஹாளய அமாவாசைமுதல் நவமி முடிய 9 நாட்கள் அருள்மிகு கற்பகாம்பாளுக்குக் காப்புக் கட்டுதல் நடைபெற்று யாக பூசைகள் சிறப்பாக நடத்தி ஒவ்வொரு தினமும் மாலை 6 மணி முதல் 9.00 மணி வரை விதவிதமான அலங்காரங்களுடன் அம்பாள் யானை மண்டபத்தில் பக்தர்களுக்கு அருள்பாலிப்பாள்.

கலைமகள், அலைமகள், மலைமகள் ஆகிய ரூபத்துடன் கூடிய அலங்காரங்களுடன் சேவார்த்திகளுக்குத் தரிசனத்துக்குக் காட்சி அளித்து அருள் பாலிக்கிறாள். கர்நாடக பக்தி இசைநிகழ்ச்சிகளும் நடைபெறும்.

எனவே பக்த கோடிகள் பெரும் அளவில் இத்திருவிழாவில் கலந்து கொண்டு அம்பாளின் அலங்காரத்தைக் கண்ணாரக் கண்டு அம்பிகையின் அருள் பெற வேண்டுகிறோம்.

திருமதி ந. திருமகள்
பி.எஸ்.ஸி., எம்.எல்.
துணை ஆணையர்/ நிர்வாக அதிகாரி

திரு பி. விஜயகுமார் ரெட்டி
தலைவர், அறங்காவலர் குழு

திரு எஸ். கல்யாணசுந்தரம்
திரு ஏ. அர்ஜுனன்
திரு சி.எஸ். ஏகாம்பர முதலியார்
திருமதி எஸ். முனியம்மாள்

அறங்காவலர்கள்